உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 08 வியாழக்கிழமை (25.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 272



14 தப்பிக்க ஒரே வழி அதிகாரப் பகிர்வே



21 குளுக்கோஸ் ஏற்றிக் கொள்ளுங்கள்



25 முடிந்தால் முயன்று பாருங்கள்

# நிர்வாணமாக்கிவிட்டுக் கதறக் கதறத் தாக்கினர் நாவாந்துறையில் காயப்பட்டோர் பரபரப்புச் சாட்சி

## பக்கவாத நோயாளி, முள்ளந்தண்டு வழங்காதவர், மனஅழுத்தக்காரர் கூடத் தப்பவில்லை

- அலுவகச் செய்தியாளர் தி.அமுதன் -

யாழ்ப்பாணம், ஒக. 25

நாவாந்துறையில் கடந்த திங்கள் இரவு படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை தம்மைக் கைது செய்த படையினர் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கிவிட்டு, கதறக் கதறத் தாக்கினர் என்று பரபரப்பு வாக்கு மூலம் அளித்துள்ளனர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பாதிக்கப்பட்டவர்கள். தமது கணவன்மாரை விடுவிக்குமாறு கேட்டுச் சென்ற பெண்கள் சிலரை இராணுவத்தினர் பாலியல்ரீதியில் துன்புறுத்தி மானபங்கப்படுத்தினர் என்றும் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பக்கக் கை, கால் வளங்காமல் பாரிசவாத நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தவர், மாலைக் கண் நோயுள்ளவர்,

பக் 27

# தமிழர் நிலப் பகுதியில் இருந்து ராணுவம் உடன் அகல வேண்டும்

## புதுடில்லியில் தமிழ்க்கட்சிகள் கூட்டாக நேற்று வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 25

தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தினரை முற்றாக அகற்ற இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தி உள்ளன. இந்திய நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்கா போரம் சார்பில் புதுடில்லியில் நடைபெற்ற இரண்டு நாள் கலந்துரையாடல்களின்போது இங்கிருந்து சென்று கலந்துகொண்ட தமிழ்க் கட்சிகள் இராணுவத்தை தமிழர் பகுதியில் இருந்து அவசரமாக அகற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளன. "தமிழர் தாயகப் பகுதிகளில் இராணுவத்தினரின் பிரசன்னத்தை தமிழ் மக்கள் அடியோடு விரும்பவில்லை. சிவில் நிர்வாகம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் கீழ் அமைதியான முறையில் வாழவே மக்கள் விரும்புகிறார்கள். இதனை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிறோம். கடந்த காலங்களைப் போல இந்தியா நழுவல்போக்கைக் கொண்டிருக்காமல் இது தொடர்பில் இலங்கை அரசுக்கு கடும் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்றும் அவர்களிடம் கேட்டிருக்கிறோம்" என்று புதுடில்லியில் இருந்து தொலைபேசி மூலம் உதயனுக்குத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

பக் 04

# நாவாந்துறைச் சம்பவத்துக்கு அரசியல் சாயம் பூசுவதற்கு பொலிஸார் முயற்சி

## சரவணபவன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக.25

மக்களைப் பாதுகாக்கும் கடமையை மூடி மறைத்து நாவாந்துறைச் சம்பவத்துக்கு அரசியல் சாலம் பூசுவதற்கு பொலிஸார் முயற்சிக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த திங்களன்று இரவு நாவாந்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா அவர்கள் மக்கள் வன்முறைகளில் ஈடு

பக் 27



காரைநகர் பிரதேச சபைக்குத் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நேற்று நடைபெற்றது. இதன்போது புதிதாகத் தெரிவான உறுப்பினர்கள் பாரம்பரிய கலை நிகழ்வுடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

# தாக்குதல்களுக்கு மாநகரசபையில் நேற்று ஏகோபித்த கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக.24

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல், நாவாந்துறையில் படையினரால் பொது மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் ஆகியவை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என - அரசைக் கோரும் தீர்மானம் யாழ். மாநகரசபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநகரசபையின் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

கடந்த ஜூலை மாதம் ஒத்தி வைக்கப்பட்ட மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று

பக் 28

# வழமைக்குத் திரும்பாத நாவாந்துறை; வீதிகளில் ஆங்காங்கே ராணுவத்தினர்

## நேற்றும் மக்கள் வீடுகளில் முடக்கம்

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ். நகர் நாவாந்துறையில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகலை அடுத்து எழுந்த பதற்றநிலை தற்போது ஓரளவு தணிந்துள்ளபோதிலும், நிலைமை வழமைக்குத் திரும்பவில்லை.

நேற்றும் நாவாந்துறைப் பகுதி வெறிச்சோடியே காணப்பட்டது. சனநடமாட்டம் குறைந்திருந்தது. கடை, கண்ணிகள் பூட்டப்

பக் 27

# தமிழ் மக்களின் ஆதரவைப் பெற இலங்கை அரசு தவறிவிட்டது

## இந்திய முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன்

புதுடில்லி, ஒக. 25

இலங்கை அரசு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறத் தவறிவிட்டதாக இந்திய முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் தொடர்ந்து கூறியிருப்பவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும், தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற ஆலோசனையை இலங்கை ஒருபோதும் விரும்பாது.

எனினும், ஏனைய சர்வதேச நாடுகளை

பக் 28

# யாழ். தேர்தலில் தோல்வியுற்ற அரசு அந்த மக்களைப் பழிவாங்குகிறது

## விக்கிரமபாகு கருணாரட்ண கூறுகிறார்

கொழும்பு, ஒக.25

கிறீஸ் பூதங்கள் விவகாரம் தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் மக்கள் தமது கைகளில் சட்டத்தை எடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது எனத் தெரிவிக்கின்றார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் படுதோல்வியடைந்த அரசு அங்குள்ள மக்களைப் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவம் இதனையே எடுத்

பக் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# ஆள்கொல்லி டெங்கு தலைகாட்டுகிறது யாழ். குடாநாட்டு மக்களே கவனம்

## அசண்டையாக நடந்தால் ஆபத்து நிச்சயம்

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ். மாவட்டத்தில் பருவ கால மழை ஆரம்பித்துள்ளமையால் டெங்கு நோய் தீவிரமாக பரவக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே யாழ். மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாக முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதத்தில் 14 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 7 பேர் யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் . இதே வேளை டெங்கு நோயின் தாக்கம் காரணமாகா பாடசாலை மாணவன் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

**ஆள்கொல்லி டெங்குக்கு வாய்ப்பான காலம்**

தற்போது நல்லூர் ஆலயம் திருவிழா இடம்பெற்று வருவதாலும், பாடசாலை விடுமுறை காலமாக இருப்பதாலும் ஏராளமான மக்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தருகின்றனர். அதேபோன்று யாழ். மாவட்ட மக்களும் இங்கிருந்து தென்பகுதிக்கு சென்று வருகின்றனர். தற்போது தென்பகுதியில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக உள்ளது.இந்தநிலையில் யாழ். மாவட்டத்தில் பருவ மழை ஆரம்பித்து இருப்பதால் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம். எனவே கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

டெங்கு அறிகுறி: டெங்குக் காய்ச்சல் பொதுவாக கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டுநோ, உடல்நோ என்பவற்றுடன் ஆரம்பிக்கும். டெங்குக் காய்ச்சல் என்று சந்தேகித்தால் உடனே தகுந்த மருத்துவ ஆலோசனையை நாடவேண்டும். தாமதமாக இறுதி நேரத்தில் வைத்திய ஆலோசனை நாடுவதால் இறப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போகலாம்.

எனவே இந்த நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் மாவட்ட டெங்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அரச அதிபர் தலைமையில நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும்- என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-15)




அனைத்து மாவட்டங்களிலும் காற்று இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

# வடமாகாண ஆஸ்பத்திரிகளின் நிலைப்பாடுகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.25

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் அடிப்படை வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் இல்லை என்று காரணம் காட்டி வைத்தியர்கள் கடமையாற்ற மறுத்து வருகின்றனர்.

இதனால் இந்த நிலைப்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கள நிலைமையை ஆராய சுகாதார அமைச்சின் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்திருமதியோகநாதன் இலங்கை அரச மருத்துவர் சங்கப் பிரதிநிதி ஆகியோர் யாழ்ப்பாணம் வருகைதந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுடன் சகல வைத்தியசாலைகளுக்கும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

இனிவரும் காலங்களில் அதி தீவிர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் அனைத்தும் அந்தந்த பிரதேச, மாவட்ட, ஆதார வைத்தியசாலைகளில் மேற்கொள்ளவும் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைக் குறைப்பதற்காகவும் மாவட்ட, பிரதேச, ஆதார வைத்திய சாலைகளுக்கு வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சியினை முடித்த வைத்திய அதிகாரிகளும் வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில்பணியாற்ற அழைக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ம-207)

# ஐக்கிய நாடுகள் அமைதிப் படைக்கு இங்கிருந்து 13, 992 படையினர்

## ரவியின் கேள்விக்கு தினேஸின் பதில்

2000 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக இலங்கையில் இருந்து 13 ஆயிரத்து 992 முப்படையினர் சென்றுள்ளனர் என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுக் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்காகச் சென்றுள்ள பொலிஸ் மற்றும் ஆயுதப்படைத் தரப்பினர் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கையில் இருந்து 12 ஆயிரத்து 210 இராணுவத்தினரும், 600 கடற்படையினரும், 610 விமானப்படையினரும், 572 பொலிஸாரும் சென்றுள்ளனர்.

இதில் இராணுவத்தினருக்கு மாதாந்த கொடுப்பனவாக ஆயிரத்து 28 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுகின்றது. அதே வேளை மேலதிகக் கொடுப்பனவாக 73 அமெரிக்க டொலர்களும் ஐ.நாவினால் வழங்கப்படுகின்றது. அத்துடன் பொலிஸாருக்கு நாளொன்றுக்கான சம்பளமாக 120 முதல் 150 வரையான அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுகின்றன.

இவர்கள் லெபனான், சூடான், எத்தியோப்பியா, கொங்கோ, மொரோக்கோ, ஹெய்டி, கிழக்குதிமோர் உள்ளிட்ட நாடுகளில் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் - என்றார்.

(ஒ-05)

# விதிகளை மீறிய சாரதிகளுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.25

கவனயீனமாகவும், உரிய விதிமுறைகளைப் பின்பற்றாமலும் மோட்டார் வாகனங்களைச் செலுத்திச் சென்ற இரண்டு பேருக்கு யாழ். மேலதிக நீதிவான் தலா ஆயிரத்து ஐநூறு ரூபா வீதம் மூவாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

குறித்த அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் ஒருவருக்கு இரண்டு மாத காலப்படி இருவருக்கும் நான்கு மாத காலச் சாதாரண சிறைத் தண்டனை வழங்கி உத்தரவிட்டார்.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இருவரையும் யாழ். பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போதே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ஒ-4)

# மாநகர சபை நிதி 4 கோடி ரூபா எங்கே? பணம் தவறான வழியில் செலவிடப்பட்டதா?

## மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் பரஞ்சோதி காட்டமாகக் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ். மாநகர சபையின் நிரந்தர வைப்பு நிதியில் இருந்து ரூபா 4 கோடி எடுக்கப்பட்டு தவறான வகையில் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நிதியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்ப டுத்தவில்லை எனவும் யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.பரஞ்சோதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். மாநகர சபையின் கடந்த மாதத்துக்கான ஒத்திவைக்கப்பட்ட கூட்டத் தொடர் நேற்றுப் புதன்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மராமத்துக்குழுவின் தீர்மானங்கள் குறித்த பிரேரணை சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்ட போது பேசிய எதிர்அணி உறுப்பினர் எஸ்.பரஞ்சோதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினர் சமர்ப்பிக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து எந்தவித நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை எனவும் தன்னால் வீதி திருத்தம் தொடர்பாக ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் அது தொடர்பாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பரஞ்சோதி தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கக்கூடாதென உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பிய உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில்லை. மாநகர மக்களின் நலம்சார்ந்த பிரேரணைகளையே நாங்கள் முன்வைக்கிறோம். எங்கள் மீது பாகுபாடு காட்டப்படுகின்றதோ என்று சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிரந்தர வைப்பில் இருந்து பணம் எடுக்கப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தி வேலைகள் எதுவும் இடம்பெறவில்லை. பணம் எங்கே போகிறதோ தெரியவில்லை. மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டு வருகின்றன என்று உறுப்பினர்கள் காட்டமாகச் சுட்டிக்காட்டினர். (ஒ-7-14)

# நிகழ்வுகள்

### மீளாய்வுக் கூட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மீளாய்வு கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ் தலைமையில் 2010-2011 ஆகிய ஆண்டுகள் முன்னேற்றம்- அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

மேற்படி அபிவிருத்திக் கூட்டத்தில் சகல திணைக்கள தலைவர்களையும் அபிவிருத்தித் திட்டங்களின் பிரதிகளுடன் சமூகமளிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கேட்டுள்ளது. இதேவேளை -சகல திணைக்கள தலைவர்களையும் வன்-மென் பிரதிகளுடன் நாளை வியாழக்கிழமை சமூகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ம-302)

### சான்றுதல் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.25

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2009,2010 ஆம் ஆண்டுக்கான மகாபொலபுலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்ட 67 மாணவர்களுக்கு சான்றிதழும், காசோலையும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கள் கிழமை நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசிடம் கைநீட்டி சம்பளம் வாங்கும்

# கோத்தபாயவுக்கும், ஹத்துருசிங்கவுக்கும் அரசியல் பேசுவதற்கு அருகதை இல்லை

## கிறீஸ் பூதங்கள் அல்ல ஆமிப்பூதங்களே என்றும் சரவணபவன் எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம், ஒக.25

அரசிடம் கைநீட்டி சம்பளம் வாங்கும் சாதாரண அதிகாரிகளான கோத்தபாயவுக்கும், ஹத் துருசிங்கவுக்கும் அரசியல் பேசவோ அ்ல்லது அரசியல் கட்சிகளை விமர்சிக்கவோ அருகதை இல்லை. அதற்கான தகுதியும் அவர்களுக்குக் கிடையாது என்று சாடினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்று சாவகச்சேரி பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை மற்றும் நல்லூர் பிரதே சபை ஆகியற்றின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக பதவி யேற்றுக் கொண்டனர்.

இந்தப் பதவியேற்பு வைபவங்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் பல பாகங்களிலும் இப்போது 'கிறீஸ் பூதம்' என்ற புரளி கிளப்பி விடப்பட்டுள்ளது. உண்மையாகவே அப்படி ஒரு கிறீஸ் பூதம் கிடையாது. அவை எல்லாம் ''ஆமிப் பூதங்கள்'' தான்.

**ஆமிப் பூதங்கள்**

மர்ம நபர்களைப் பிடித்து எம்மிடம் ஒப்படையுங்கள் என்கிறார் பொலிஸார். இவர்களை விரட்டிப் பிடிக்க முனையும் போது அவர்கள் இராணுவக் காவலரண்களுக்குள் ஓடி மறைந்து விடுகின்றனர்.

இவர்கள் இராணுவத்தாலும் பொலிஸாரினாலும் பாதுகாப்படுகின்றனர். இராணுவக் கூடாரங்களுக்குள் சென்று மறைந்து விட்டால் அவற்றை ''ஆமிப் பூதங்கள்'' என்று தானே கூற வேண்டும்.

இந்த ஆமிப் பூதங்களை தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் மட்டும் ஏவி விட்டவர் கோத்தபாய தானோ என்று சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

மலையகத்திலும் கிழக்கில் ஏற்பட்ட பதற்றமே இப்பொழுது வடக்கிலும் தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டது.

நாவாந்துறையில் குழப்பம் விளைவிக்க முயன்ற மர்ம நபர்களைப் பிடிக்கச் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

முகாமுக்குள் நுழைந்தவரை விடும்படி கேட்டவர்கள் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கை, கால்கள் முறிக்கப்பட்டுள்ளன. காயம் அடைந்தவர்களுக்கு 24 மணிநேரம் சிகிச்சை கூட அளிக்கப்படவில்லை.

**கண் தெரியாத ஒருவரும் கைது**

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இருட்டுவேளையில் கண் பார்வையற்ற ஒருவர் பொலிஸார் மீது கல் எறிந்து ஜீப்பையும் தாக்கிப் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தார் என்று கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கை, கால்களில் கடுமையான அடி காயங்களும் காணப்படுகின்றன. நான் நேரடியாக ஆஸ்பத்திரியில் பார்த்தேன். தள்ளு வண்டியில் அவர் இருக்கின்றார். பலர் கை, கால்கள் முறிக்கப்பட்டுச் சிகிச்சை பெறுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்குஎப்படிகை, கால்கள் முறிந்தன. முதுகுப் புறங்களில் எப்படி அடிகாயங்கள் ஏற்பட்டன என்று கேட்டால் அது அவர்களுக்கு அவர்களாகவே கல் எறிந்த போது ஏற்பட்ட காயங்களாக இருக்கலாம் என்று பதில் அளிக்கின்றனர் பொலிஸார்.

**பொறுப்பற்ற பதில் கூறும் படைத்தளபதி**

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி ஹத்துரு சிங்க, அரசியல் கட்சி ஒன்றே பின்னணியில் இருந்து மக்களை திட்டமிட்டுத் தூண்டி விடுகின்றது என்று கூறுகின்றார். இராணுவம் சம்பந்தப்படவில்லை என்கிறார் அவர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது திட்டமிடப்பட்ட ஒரு செயல். அரசியல் பின்னணியில் ஆயுதக் குழு ஒன்றுதான் செயல்படுகின்றது. பொலிஸார் பொதுமக்களைத் தாக்கவில்லை. பொதுமக்கள்தான் பொலிஸாரைத் தாக்கி வாகனங்களைச் சேதப்படுத்தினர் என்று பொதுமக்கள் மீது குற்றம் சுமத்துகிறார் அவர்.

பாதுகாப்புக்குப் பொறுப்பான கோத்தபாயவும் தமிழ் அரசியல்வாதிகள் மீதே கை நீட்டுகிறார். ஆளுநரோ அனைத்து அதிகாரங்களையும் கையில் எடுத்துக் கொண்டு தாண்டவம் ஆடுகிறார். இவர் ஆளுநரே அல்ல. இவரை 'ஆமி கவர்னர்' என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

இவர்கள் எல்லோருமே அரசிடம் கைநீட்டி சம்பளம் வாங்குபவர்கள். அரசியல் பேசவும், அரசியல் கட்சிகளை விமர்சிக்கவும் இவர்களுக்கு எந்த வித அருகதையும் இல்லை.

கிழக்கில் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் பொதுமக்கள் கைது செய்யப்பட்ட போது அங்கே பொதுமக்கள் ஒன்றாகத் திரண்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தில், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இங்கே நாம் என்ன செய்தோம்?

கட்சி பேதங்கள், கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் நாம் தமிழர்கள், தமிழ் பேசுபவர்கள் என்ற உண்மையுடன் சர்வாதிகார அடக்கு முறை களுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட ஒன்றுபட வேண்டும் - என்றார் சரவணபவன் எம்.பி.

**சட்டத்தரணிகளின் தமிழின உணர்வு**

தமிழரசுக் கட்சியின் இணைச் செயலாளர் தனது உரையில்,

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் காட்டிய தமிழ் ஆர்வமும் தேசிய உணர்வும் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பித் தெம்பூட்டியுள்ளது. அவர்களின் சேவை போற்றப் பட வேண்டும் என்று சட்டத்தரணிகளுக்குப் புகழாரம் சூட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாவாந்துறையில் இராணுவமும் பொலிஸாரும் நடத்தின காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் படுகாயம் அடைந்த பொதுமக்கள் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த பரிதாப நிலையைக் கண்ட சட்டத்தரணிகள் ஒட்டுமொத்தமாக 22 பேர் சுயமாக அவர்களுக்காக ஆஜராகி அவர்களின் இன உணர்வினை வெளிப்படுத்தினர்.

இந்தச் சட்டத்தரணிகள் யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி என வெவ்வேறு நீதிமன்றங்களில் வாதிடுபவர்கள். மாறுபட்ட அரசியல் கட்சிகள், வித்தியாசமான கொள்கைகளைக் கொண்டவர்கள்.

ஆனால் அப்பாவித் தமிழன் தாக்கப்படுகின்றான் என்பதை அறிந்ததும் தாமாகவே ஓடி வந்து அவர்களுக்காக வாதிட்டனர். உண்மை நிலையை வெளிப்படுத்தினர். இவர்கள் மனிதாபிமான உணர்வுடன் ஆற்றிய சேவை நம்மை எல்லாம் உற்சாகப்படுத்தி விட்டது. நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாவோம் - என்றார் சிவஞானம்.

இதில் உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் சங்கையா,

நீதி, நேர்மை தவறக் கூடாது. அனைத்து உயிர்களும் இப்படித் தான் மதிக்கப்பட வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவன் தமிழன்.

தனது தவறான தீர்ப்பினால் கோவலனின் உயிர் பறிக்கப்பட்டது என்று பதறிய தமிழ் மன்னனும் பட்டத்தரசியும் அந்த இடத்தில்உயிர் விட்டனர்.

ஒரு புறாவின் உயிரைக் காப்பாற்றத் தன் சதையைக் கொடுத்தான் சிபிச் சக்கரவர்த்தி. ஒரு முல்லைக் கொடிக்காகத் தன் தேரையே அர்ப்பணித்தான் பாரி மன்னன்.

மனிதர்களுக்கு மட்டுமல்ல, ஊர்வன, பறப்பன என்றில்லாமல் மரம், செடி, கொடிகளுக்கும் கருணை காட்டி வாழ்ந்து காட்டியவர்கள் தமிழர்கள்.

ஆனால் அப்பாவிப் பொது மக்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தி, நாம் தமிழர்கள் ஒருவரைக் கூடக் கொல்லவில்லை என்கிறார் ஜனாதிபதி.

இதுதான் புத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் பௌத்த நாட்டின் இலட்சணம்.

இன்று ஜனநாயகத்தின் மூலம் நாம் வெற்றியீட்டியுள்ளோம். இது நமக்குக் கிடைத் முதல் வெற்றி. இதனை உரிய முறையில் பயன்படுத்தி மக்கள் சேவையைத் தொடங்குவோம் - என்றார்.

**ஜனநாயக நீரோட்டத்தில் முன்னுதாரணமாகச் செயல்படுவோம்**

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி அமைப்பாளர் அருந்தவபாலன் தெரிவிக்கையில்,

இன்று நாம் அடைந்துள்ள வெற்றி பல்வேறு தியாகங்களுக்குக் கிடைத்த வெற்றி. நமக்காக உயிர்விட்ட தியாகிகளின் ஆத்மாக்களுக்குக் கிடைத்த வெற்றி.

கடந்தவற்றை மறப்போம். நாளை நடப்பதைச் சிறப்பாகச் செயற்படுத்த ஒன்றுபடுவோம்.

தேர்தல்கள் முடிந்து விட்டன. இப்போது மக்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று மமதை அடையக் கூடாது. எதிரணியில் இருப்பவர்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். நாம் பழிவாங்கப்பட்டது போல் நாம் எவர் மீதும் குரோதம் காட்டக் கூடாது. எதிரணி சகோதரர்களின் கோரிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து அவர்களையும் கௌரவிக்க வேண்டும். இதுதான் ஜனநாயகம் என்பதை உணர்த்த முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும் - என்று கூறினார். (த-2)

### யாழ்.ஆஸ்பத்திரியில் நெருக்கடிக்கு மத்தியில்

## வலி, உபாதைகளுடன் தொடர்ந்து சிகிச்சை பெறும் நாவாந்துறைவாசிகள்

யாழ்ப்பாணம்,ஒக.25

நாவாந்துறையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் மோசமான தாக்குதல்களுக்கு இலக்கான சுமார் 100 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கை, கால்கள் முறிந்தவர்கள், படுகாயங்களுக்கு இலக்கானவர்கள் மற்றும் உட்காயங்களுக்கு ஆளான இரு பெண்கள் உட்பட ஆண்கள் அனைவருமே பெரும் வலி மற்றும் உபாதைகளுடன் அவதிப்பட்டு வருகின்றனர். இவர்களில் அனேகமானோர் நடக்க முடியாமலும் கை, கால்கள் அசைக்க முடியாமலும் அந்தரிக்கின்றனர். வார்ட்டுக்களில் இடப்பற்றாக்குறை காரணமாக ஒரு கட்டிலில் இருவர், மூவர் எனத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட சிலர் மட்டும் கடுமையான காயங்கள் காரணமாக தனித் தனிக் கட்டிலில் சிகிச்சை பெறுகின்றனர். பெரும் நெருக்கடி மிக்க சூழலில் அங்கு தொடர்ந்து நாவாந்துறை மக்கள் சிகிச்சையைத் தொடர்கின்றனர்.

''இப்பத்தான் ஆமிக்காரனின் தாக்குதலின் தாக்கம், வேதனை தெரிகின்றது. அவங்களின்ர உந்த வெறித்தனத்தால் எங்களின்ர பிள்ளைகள் படும் பாட்டைப் பார்க்கச் சகிக்க ஏலாம இருக்குது'' என்று ஒரு நடுத்தர வயதுடைய நாவாந்துறைவாசி கூறினார். (ஒ-4-15-10)



சாவகச்சேரி பிரதேச சபை



நல்லூர் பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை என்பவற்றின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் உத்தியோக பூர்வ பணியேற்பு நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் சிந்தனை

"மானக்கேடான காரியங்கள், மார்க்கத்தில் மறுக்கப்பட்டவை, வரம்பு மீறுதல் ஆகியவற்றை விட்டும் உங்களை அவன் விலக்குகின்றான். (இவைகளை) நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசிக்கின்றான்." (16:90)

நீதியை நிலைநாட்டும்படியாகவும் அதற்குப் புறம்பான அனைத்துக் காரியங்களையும் முற்றாகத் தவிர்த்துக்கொள்ளும்படியாகவும் வலியுறுத்தும் அல்லாஹ்வின் கட்டளை மிக அழுத்தமானதாக வெளிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் தீமைகள் புரிவதையும், ஆக்கிரமிப்புகள், அபகரிப்புகள் ஆகிய குற்றச்செயல்களைச் செய்வதையும் அல்லாஹ் கண்டிப்பாகத் தடுத்துள்ளான்.

மேலும் அல்-குர்ஆன் பின்வருமாறு எடுத்தியம்புகின்றது:-

"விசுவாசிகளே! நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்தளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ அதுபோன்ற அளவிற்கே தண்டியுங்கள். (தண்டிக்காது) பொறுத்துக் கொள்வீர்களானால் நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்ததாகும்." (16:126)

ஒருவர் இழைத்த குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுவதால் தண்டனைகளின் சமநிலை முறையாகப் பேணப்பட வேண்டும். அதாவது பழிவாங்கும் ஒருவர் தான் பெற்ற தண்டனையைவிட அதிகமாக ஒருவரைப் பழிவாங்கக்கூடாது. இது பொதுவான கொள்கையாயினும், தண்டிப்பதற்குப் பதிலாக மன்னித்து விடுவதே மிகச் சிறந்த மனித மேம்பாட்டுக்கான வழிமுறையென புனித இஸ்லாம் சிபாரிசு செய்கின்றது.

மன்னிப்பதென்பது இஸ்லாத்தின் மிக உயர்ந்த பண்பாகவும், அடையாளமாகவும் காணப்படுவதுடன், மனிதாபிமான உணர்வின் முக்கிய கூறாகவும் அது விவரிக்கப்பட்டுள்ளது. தண்டிப்பதன் மூலமாக சாதிப்பதை விட மன்னிப்பதன் மூலம் அதிகம் சாதிக்க முடியும் என்பது இஸ்லாமிய வரலாற்றின் உண்மையாகும்.

- சத்தார் எம். ஜாவித் -

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆன் மிக சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன.

நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தின மும் 6.30 மணிக்கு இடம்பெறும் ஆன்மிகச் சொற்பொழிவில் இன்று வியாழக்கிழமை "சித் தனை செய் மனமே" என்னும் தலைப்பில் சொல்லின் செல் வர் இரா.செல்வவடிவேல் ஆன் மிகச் சொற்பொழிவு ஆற்றுவார். (ம-311)

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற் பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சமய சொற் பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வரு கின்றன.

இன்று வியாழக்கிழமை "சைவ வாழ்வு" எனும் தலைப்பில் துரை இளங்குமரன் நிகழ்த்தும் சொற்பொழிவும் சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் அற நெறிப் பாடசாலை, கோண்டாவில் ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-313)

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நிகழ்வை நடத்தி வருகின்றது.

இன்று வியாழக்கிழமை திரு மதி தாரணி ராஜ்குமார், செல்வி பாக்கியலட்சுமி நடராசா, எஸ். கமலதாஸ், ஆர்.சிவராம் ஆகி யோர் பங்குபற்றும் இசையரங்கு நடைபெறும். (ம-313)

* * *

நல்லூர் சைவ மகாசபையின்ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத் தில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டுத் தினமும் மாலை 6.30 மணிக்கு "கம்பராமாயணம்" பற்றிய தெய்வீக தொடர் இசைப்பேருரை இடம் பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை "இன்று போய் நாளை வா" எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பேருரை நிகழ்த்துவார். (ம-313)

# தமிழர் நிலப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேசுவதற்கு வருமாறு இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு இந்திய காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுத்திருந்தது. இலங்கை அரசுடன் ஒரு தீர்வை எட்டுவதற்கு முன்பாக தமிழ் கட்சிகளிடம் ஒருங்கிணைந்த கருத்தை ஏற்படுத்துவது நோக்கமாகக் கொண்டே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் இந்தக் கல்துரையாடலுக்கான அழைப்பை ஈழத் தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அனுப்பி இருந்தார். தமிழரசுக்கட்சியில் இருந்து மாவை சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து ஆனந்த சங்கரி,பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் இரா. துரைரத்தினம்.சறீதரன், ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஷ் அணியில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் ரெலோவில் இருந்து செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் கந்தையா சிவநேசன், பெனடிக்ற் தனபாலசிங்கம், ஈ.என்.டி.எல்.எப். பரந்தன் ராஜன், தமிழ் காங்கிரஸில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன்,ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி சார்பில் ஞானசேகரன் இரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதுடில்லியில் நேற்றும் நேற்றுமுன்தினமும் நாடாளுமன்ற வளாகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடல் குறித்த உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்று இன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடல் குறித்து மாவை சேனாதிராசா தெரிவித்தவை வருமாறு:-

இரண்டு தினங்களும் சுமூகமான முறையில் கலந்து ரையாடல் நடைபெற்றது. நேற்று இந்தியாவின் பல்வேறு கட்சிகளையும் சார்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தமிழர் தாயகத்தின் தற்போதைய நிலையை நாம் அவர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்து விளக்கினோம். எமது பிரதேசங்களில் அண்மைக்காலமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள், சிங்களக் குடியேற்றங்கள் என்பவை குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம்.

போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளபோதும் சில பிரதேசங்களில் எமது மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை சிவில் நிர்வாக விடயங்களில் இராணுவத் தலையீடு அதிகமாக உள்ளது இதனை எமது மக்கள் அடியோடு விரும்பிவில்லை இராணுவம் தமது நிலங்களில் இருந்து வெளியேற வேண்டும் என்பதையே அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை இந்தியத் தரப்புக்கு மிகவும் இறுக்கமாக எடுத்துக்கூறியிருக்கிறோம்.

தமிழர் பிரதேசங்களில் சிங்கள வியாபாரிகளின் குடியேற்றம், கடற்பரப்பில் சிங்கள மீனவர்களின் அத்துமீறல் ஆகியன அளவு கடந்து சென்றுகொண்டிருப்பதையும் ஆதாரங்களுடன் விளக்கி இருக்கிறோம். இவை அனைத்துக்கும் இராணுவமே காரணம் என இந்தப் பேச்சில் கலந்து கொண்ட அனைத்துத் தமிழ் கட்சிகளும் கூட்டாக இந்தியத் தரப்பிடம் எடுத்து விளக்கி இருக்கிறோம்.

இந்தியா கடந்த காலங்களைப் போல நழுவல் போக்கை கொண்டிராமல் இந்த விடயத்தில் மிகவும் இறுக்கமான போக்கைக் கையாண்டு இலங்கை அரசுக்கு கடும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி இருக்கிறோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு இந்தியா காலம் தாழ்த்தாது முனைப்புடன் செயற்படவேண்டும் எனவும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டோம். இது தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் நாளை (இன்று) நடைபெறும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவாதத்தில் வலியுறுத்துவதாக அவர்கள் இந்தப் பேச்சின்போது தெரிவித்தனர் - என்றார் மாவை. (உ-த)

## 75 ஆவது பிறந்த நாள் நினைவு தினம்

### அமரர் காசித்தம்பி நடராசா



பிறப்பு
25 ★ 08 ★ 1936

இறப்பு
22 ★ 07 ★ 2011

கடந்த 22.07.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் *காசித்தம்பி நடராசா* அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் இன்னும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (25.08.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் 75 ஆவது பிறந்த நாள் நினைவு அஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*24, பொன்னப்பா ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

## எம் பாச தீபத்தின் மூன்றாம் ஆண்டு நினைவுத் துயரலை

*உதயம்*
*1988.05.05*

*உதிர்வு*
*2008.08.26*



**சிவானந்தசுந்தரம் பிரேமதர்ஷன்**
(யாழ்/ இந்து 2007 உயிரியல் மாணவன்)
திதி: அபர ஏகாதசி

பாசத் தலை மகனாய் அவதரித்து
அன்பு பண்பு அறிவுடன் வளர்ந்து
துயரவலிகள் தந்தவனே!
வசந்தங்களைத் தொலைத்து தூரமானாயோ
உன் புன்னகை காணாமல் தவிக்கின்றோமே
எம் உயிர்ச் செல்வம் தர்ஷனே
சடுதியாய்ச் சென்றதேனோ?
மனம் வந்ததோ எமை விட்டுப் போவதற்கு
நித்தம் நிதமும் உன் நினைவுதான் வருகுதையா
அகலுமா உன் நினைவு மறையுமா உன் பிரிவு
நெஞ்சம் கனக்குதையா நிம்மதி போனதையா
என்றும் உன் நினைவுத் துயரில் மீளாமல்
என்பு உருக வாடுகிறோம் தர்ஷனே!

நெல்லியோவை,
அரசுவேலி தெற்கு.

பூவியடி,
உடுப்பிட்டி.

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, தம்பி

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

**வணிகமாணி/தொழில் நிர்வாகமாணி பரீட்சைகள்**

வணிகமாணி/தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் - 2010
முதலாம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருடம்.

தொழில் நிர்வாகமாணி
இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2010
முதலாம், 2 ஆம் வருடம் (புதிய கட்டமைப்பு)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை 24.08.2011 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கை கள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிடம் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 30.08. 2011 அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்.

வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்
சோ.கூ.ரே.மணிமேர்க்கஸ் பெட்டகம்
கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய் களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.
மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.
விலை ரூபா 5100.00 மட்டும்.
எமது வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகவும் வெற்றிகளுக்காகவும் எமக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். அச்சான்றுகளை நாம் ஆதாரபூர்வமாகப் பதிவு செய்து வருகின்றோம். அதேபோல் உங்கள் வாழ்விலும் ஏற்பட்ட மாற்றங்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.
077 1399950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மூன்று அமைச்சர்களின் மனச்சாட்சி பேசுகிறது; அது சபை ஏறுமா?

★ தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்கு அதிகாரப் பகிர்வு தேவை. கிராம மட்டத்திலிருந்து மக்களுக்கான அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஊடாகப் பகிரப்பட வேண்டும். பிரிவினை வாதத்தை ஒழித்து நாட்டு மக்களை ஒன்றிணைக்க அது அவசியம்.

★ நாட்டின் அபிவிருத்திப் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம். பொருளாதார வளர்ச்சி, உட்கட்டுமானம் மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று சிலர் நினைக்கின்றனர். அது தவறு. அதற்கும் மேலாக அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் சிரேஷ்ட அமைச்சரும், முன்னைய சர்வ கட்சிக் குழுவின் தலைவரும், லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து, சோஸலிச மக்கள் முன்னணி என்ற அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஒன்றுகூடல் ஒன்றில் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண இவ்வாறு கூறினார்.

இதே மேடையில் கருத்துத் தெரிவித்த இன்னொரு இடதுசாரித் தலைவரும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் மூத்த அமைச்சருமான டியூ குணசேகராவும் அனேகமாக மேற்கூறப்பட்ட ஒத்த கருத்துக்களையே வெளியிட்டிருக்கிறார்.

● போர் முடிவடைந்துவிட்டது. அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை என்று சிலர் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். இது மிகவும் பயங்கரமான கருத்து. பொருளாதார விருத்தியே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றும் கருத்து நிலவுகிறது; இதுவும் தவறான நிலைப்பாடு. வேண்டுமானால் அபிவிருத்திகள் ஊடாகத் தீர்வுக்குரிய சந்தர்ப்பங்களை மட்டுமே உருவாக்கிக் கொள்ளலாம்.

● வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் இருபத்தொரு கட்சிகளும் தெரிவுக்குழு விடயத்தில் ஒத்துழைப்பு நல்க வேண்டும். மீண்டும் ஒரு போர் வராமல், அதற்கான பிரிவினைவாதம் தலையெடுக்காதிருக்க நாடாளுமன்றில் உள்ள இருபத்தொரு கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

● அப்பாவித் தமிழ் மக்கள் முப்பது வருடங்களாகத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் மீண்டெழுவதற்கு நாம் அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டும் என அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

மற்றொரு இடதுசாரித் தலைவரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார அதே நிகழ்வில் கலந்துகொண்டு பின்வரும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்:

■ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகத் தெரிவுக்குழு முன்வைக்கும் யோசனைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

■ நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க விரும்பாதவர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் விலகியிருக்கலாம். ஆனால் அவர்கள் யதார்த்தத்தை அறிந்துகொள்ள முடியாதவர்கள் என்றே கருதப்பட வேண்டியவர்களாவர்.

மொத்தத்தில் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் இரண்டு வகிபாகங்களைக் கொண்ட மூன்று தலைவர்களும் வெவ்வேறு வகையான பரிமாணங்களில் தமது கருத்துக்களை, அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர்.

அவற்றில் உண்மைகளும் ஏற்றுக்கொள்ளத் தக்க கருப்பொருள்களும் அடங்கி உள்ளதை நடுநிலை நின்று நோக்குவோர் அவதானிக்கலாம். ஒரு வகையில் இது அவர்களது மனச்சாட்சியின் குரலாகக் கருதத்தக்கவை.

தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் -

தாம் விரும்பும் ஒரு சில சில்லறை அதிகாரங்களைத் தமிழர்களுக்கு வழங்கினால் அவையே போதுமானவை என்றும் -

போருக்கு முடிவு கண்டாயிற்று ஆகையால், தமிழர்களுக்கு இப்போது வழங்கப்பட்டுள்ள உரிமைகளே நிறைவானவை அவற்றுக்கு மேலதிகமாக எதுவும் தேவையில்லை என்றும் -

தமிழ் மக்கள் உரிமைகள் தேவை என்று ஜனநாயக வழித்தடத்தில் நின்று போராடுவதற்குத்தானும் இடைவெளி வைக்கக்கூடாது; அதற்கு முன்னோடியாக தமிழர்கள் தமக்கு மட்டும் சொந்தமானது என்று நாட்டின் எந்தப் பகுதியையும் சொந்தம் கொண்டாடும் நிலையை அனுமதிக்கக் கூடாது என்றும் - அரசின் பிரதான கதாநாயகர்களாக விளங்குவோர் பிரசித்தப்படுத்தி வரும் நிலையிலும் -

அரசின் பங்காளித்தரப்புகள், தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக மட்டுமே இந்த நாட்டில் வாழ முடியும் என்ற இனவாதக் கோட்பாட்டைக் கையில் பிடித்திருக்கும் நிலையிலும் -

இடதுசாரித் தலைவர்களான மூன்று அமைச்சர்களும் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்தின் பிரதான கட்சியினரும் மற்றும் தமிழ் மக்களை மனிதர்களாகத்தானும் மதிக்காமல் கருத்துக்களை வெளியிட்டு வரும் இனவாதக் கட்சியினர்களும் மூவமைச்சர்களின் யதார்த்தமான நிலைப்பாட்டைச் சீரணிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இன்னொரு புறத்தில், உலகத்துக்கு ஒப்புக் காட்டுவதற்காகச் சில்லறைத் தீர்வு ஒன்றை முன்வைத்து அதனைத் தமிழர்கள் ஆட்சேபிக்காமல் ஏற்றுக்கொள்ள மறுத்துப் புறக்கணிக்காமல் தடுப்பதற்கு, ''கிறீஸ் பூதங்களை''ப் போன்று வேறு பயங்கரங்களையும் உருவாக்கி அச்சுறுத்துவதற்கும் கண்ணுக்குப் புலப்படாத காரியங்கள் களைகட்டவும் வாய்ப்புண்டு.

இந்த இலட்சணத்தில், மறந்தாயினும் தெரிவுக்குழு ஒரு நீதியான தீர்வை முன்வைப்பதும், அதனை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுவது போல் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பதும், இந்த நாட்டில் நடைபெற வாய்ப்புண்டா?

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பூர்வீகப் பிரசைகள்; [illegible] மனிதர்கள் என்ற நிலைக்குத் தெற்கின் அரசியல் தலை[illegible] அது உலகத்தின் எட்டாவது அதிசயமாகவே அமையும்.

# சிறுமி கொலையுண்ட பின்னர் தான் கிணற்றில் போடப்பட்டுள்ளது சடலம்

## மருத்துவ அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 25

சுழிபுரம் மத்தியிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட 8 வயதுச் சிறுமி கொலைசெய்யப்பட்ட பின்னரே கிணற்றில் வீசப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பாண்டவெட்டை காட்டுப்புலம் மகாவித்தியாலயத்தில் கற்கும் கிருஷ்ண மூர்த்தி சாலினி என்ற எட்டு வயதுச் சிறுமியே இவ்வாறு மீட்கப்பட்டவராவார். இந்தச் சிறுமி கடந்த 17 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தமை தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் சடலம் அவரின் வீட்டிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆள் நடமாட்டம் இல்லாத காணி ஒன்றில் பாழடைந்த கிணற்றிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட மேற்படி சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றது. பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மண்டையோட்டின் முன் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டமைக்கான பெரியதொரு துவாரம் காணப்படுகின்றது. எனவே கொலை செய்யப்பட்ட பின்னரே சடலம் கிணற்றில் வீசப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சடலம் உருக்குலைந்திருப்பதால் கடந்தப்பட்ட அன்றைய தினமே கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டிருக்கவேண்டுமென்றும் அத்துடன் இடுப்பு பகுதிக்கு கீழே எதுவித ஆடைகளும் இல்லாதிருப்பதால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

# தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் திருவிழா எதிர்வரும் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 25

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக்காலங்களில் காலை 5.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

அடுத்தமாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத்திருவிழாவும் இடம் பெறும்.

8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ம-313-86)

# நயினை நாகபூஷணி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக. 25

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

ஆலய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்த பாலஸ்தாபனம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பக் கிரியைகள் இடம்பெறும். தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.15 தொடக்கம் 10.08 மணிவரை உள்ள சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ வை. மு. பரம முத்துக் குமாரசாமி சிவாச்சாரியார் நடத்திவைப்பார். பாலஸ்தாபனத்தை அடுத்து ஆலய புனரமைப்பு பணிகள் இடம்பெறும். அடுத்த வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம-60-7)

# மாணவருக்கு முறையான கல்வி எப்படி அமையவேண்டும்

மாணவர்களுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ளக்கூடிய வாய்ப்பை அளிக்கும் அதேவேளை, அவர்களுக்கு அவர்களுள்ளே மறைந்திருக்கும் தெய்வீகத்தையும் வெளிக்கொணரக்கூடிய இயல்புகளும் உள்ளதாய் அமைந்திருப்பதே முறையான கல்வியாகும்.

சாதாரண கல்வியால் மட்டும் மாணவர் அறிவுடையராய் விளங்க முடியாது. கல்வியானது வாழ்க்கைக்கு வருவாயைத் தேடிக்கொள்வதிலும் நல்ல வாழ்வு முறைகளை ஊட்டக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

புலமைத் திறனிலும் பார்க்க நன்னடத்தையே மிகவும் தேவைப்படுவதும் பெறுமதியானதுமாகும். நிலைபேறான சத்தியத்தை அடைவதற்குத் தேவைப்படும் சீரிய பண்பைப் பெற்றுக்கொள்வதற்கு யாரும் அக்கறை கொள்வதில்லை. தோன்றி மறையும் முகில் கூட்டத்தை ஒத்த செல்வம், அதிகாரம், பேரும் புகழும் இவற்றையே ஈட்டிக்கொள்ள மக்கள் பெரிதும் முயல்கின்றனர். செல்வத்தையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வதிலும் பார்க்க, சீரிய பண்பின் உயர்வாளராக வருவதற்கே மாணவர்கள் பெரிதும் முயற்சித்தல் வேண்டும்.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகலில் குடியமர அனுமதிக்கப்பட்டோர் தொடர்ந்து அங்கு செல்வதற்குத் தடை

## மக்கள் விசனம் தெரிவிப்பு

சண்டிலிப்பாய், ஓக.25

மாதகல் ஜே/150 கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து தமது இடங்களுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் இதற்கான அனுமதியை மறுத்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்பு மாதகல் ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டது.

தற்போது இந்தத் தடை விதிப்பால் தாம் சிரமம் அடைவதாக மக்கள் கூறுகின்றனர்.

பல ஆயிரம் ரூபா செலவு செய்து காணிகளைத் துப்புரவு செய்து குடிசைகள் அமைத்த குடும்பங்கள் தற்பொழுது செய்வதறியாது திண்டாடுகிறார்கள்.

கடற்படையினரின் இந்தச் செயல் குறித்து மாதகல் கிராம கடற்றொழிலாளர்களின் தலைவர் எம்.சுப்பிரமணியம் அந்தப் பகுதி பங்குத் தந்தையின் உதவியை நாடியுள்ளார்.

யுத்தம் காரணமாக மாதகல் பிரதேசத்திலிருந்து வெளியேறிய மக்கள் தற்பொழுது படிப்படியாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள மாதகல் ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மக்கள் மீள்குடியமர்த்த அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்ற குடும்பங்கள் பல ஆயிரம் ரூபா செலவு செய்து தங்களின் காணி, கிணறு போன்றவற்றைத் துப்புரவு செய்தது டன் தொடர்ந்து வசிப்பதற்குக் குடிசைகளையும் அமைத்திருந்தனர்.

இந்த நிலையில் உயர் பாதுகாப்பு வலயமான இந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று கடற்படையினர் தடை விதித்துள்ளதால் மீள் குடியமரச் சென்ற குடும்பங்கள் முன்பு இருந்த இடத்தையும் விட்டு இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்கின்றனர். (ம-115)

# மந்துவில் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்திகள்

தென்மராட்சி, ஓக.25

மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு பிரிவுகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தின் போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கமைய இந்த வேலைத் திட்டங்கள் கடந்த இரு மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் காசுக்கான வேலைத்திட்டத்தில் இந்தப் பகுதியில் உள்ள மணல் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் மந்துவில் கிழக்குப் பகுதியில் உள்ள வேழக்குளம் ஆளமாக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தில் மந்துவில் கிழக்குப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மின்சார விநியோகத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்த மாத இறுதிக்குள் மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்தப் பிரிவைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் அப்பகுதியில் உள்ள பாடசாலை, உபதபால் அலுவலகம், பாலர் பகல் பராமரிப்பு நிலையம், கூட்டுறவு நகர் விற்பனை நிலையம், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் மின் வசதி பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

# வைத்தியசாலை சூழலில் டெங்கு நோய் பரவுகிறது

## சுகாதார அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 25

தற்போது நாடெங்கும் பரவிவரும் டெங்குக் காய்ச்சலானது ஆஸ்பத்திரிகளில் கடமைபுரியும் சேவையாளர்களையும் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களையும் தாக்கி வருகிறது.

இவ்வாறு தகவல் கிடைத்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சு, நாடெங்கிலும் உள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை அத்தியட்சகர்கள், மாவட்ட வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைகளுக்குப் பொறுப்பாக சேவை புரியும் பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது. இதனால் வைத்தியசாலைச் சுற்றாடலில் நுளம்பு பரவாமல் இருப்பதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

வைத்தியசாலை மேற்பார்வையாளர் மூலம் வைத்தியசாலைகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் தொழிலாளர்களைக் கொண்டு நீர் தேங்காமல் துப்புரவாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-300)

## வரவேற்பு...



கொண்டாட்டம்: கைதடி குருசாமி வித்தியாலயத்தில் அண்மையில் தமிழ்த் தினவிழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வித்தியாலய முதல்வர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (ம)

# உள்ளூர் உற்பத்தியை நாடும் வெளிநாட்டவர்

தென்மராட்சி, ஓக.25

மீசாலையில் ஆரம்பிக்கப்பட்ட பழமுதிர்சோலை பழங்கள் சேகரிப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் தென்னிலங்கை மக்களும் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள மக்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையத்தில் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்படும் பழச்சாறுகளுக்கே கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாம்பழம், பலாப்பழம், பப்பாசிப்பழம், விளாம்பழம், முந்திரிகைப் பழம், அன்னாசிப்பழம், வெள்ளரிப்பழம், எலுமிச்சைப்பழம், கொய்யாப் பழம் ஆகியவற்றின் பழச்சாறுகளுடன் கரட் சாறு, பழங்களின் சம்பல் போன்றவை இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளும் இந்த நிலையத்தில் விற்பனை செய்யப்படுவதாகச் சங்கச் செயலாளர் ப.ஸ்ரீகாந்தன் தெரிவித்தார். இதனால் தென்மராட்சிப் பகுதிகளில் பழவகைளைப் பெறுவதில் தட்டுப்பாடு நிலவுகிறது. (ம-207)

# திருமண வீடுகளில் கட்டப்பட்டிருந்த வாழைக்குலைகள் வெட்டி எறியப்பட்டன

## கொக்குவில் மேற்கில் இனந்தெரியாதோர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஓக.25

கொக்குவில் மேற்கு, கேணியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் காட்டுமிராண்டிகளால் திருமண வீடுகளில் கட்டப்பட்டிருந்த வாழைக்குலைகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளதுடன் மின் விளக்குகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

கொக்குவில் மேற்கு கேணியடி வீதியில் நான்கு வீடுகளில் நேற்று திருமண நிகழ்வுகள் இடம்பெற்றன. நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் அந்த வீதியில் 10 பேர் கொண்ட குழுவினர் நடந்து சென்றுள்ளனர்.

இவர்கள் திருமண வீடுகளில் கட்டப்பட்டிருந்த வாழைக்குலைகள் மற்றும் மின் விளக்குகளையும் சேதமாக்கியுள்ளனர். வாழைக்குலைகளை வெட்டியெடுத்து வீதியில் போட்டுள்ளனர். மேலும் ஒரு வீட்டின் மீது பியர் போத்தலால் எறிந்தும் உள்ளனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் 10 பேர் இந்த வீதியால் சென்றனர்.

அவர்கள் அந்த வீதியில் அமைந்திருந்த கடையொன்றின் பெயர்ப் பலகையையும் சேதமாக்கிவிட்டு வீட்டுக் 'கேற்களில்' தட்டியபடியே சென்று வாழைக்குலைகளை வெட்டினர். இவர்கள் வருவதற்கு சிறிது நேரத்துக்கு முன்புவரை திருமண வீடுகளில் இளைஞர்கள் சோடனை வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த அட்டகாசங்களைச் செய்து முடித்த பின்னர் வீதியின் முடிவில் விடப்பட்டிருந்த வாகனத்தில் இவர்கள் ஏறிச் சென்று விட்டனர்.- என்றார்.

இதேவேளை இந்த வீதிக்கு அண்மையில் அமைந்திருந்த காந்திஜி சனசமூக நிலையத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவர்களைப் பிடிக்க முயன்ற போது அவர்கள் தப்பித்துச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-15-4)

# ஒரு லட்சம் மிதிவெடிகளை மீட்டது 'ஹலோட்ரஸ்ட்' நிறுவனம்

யாழ்ப்பாணம், ஓக.25

'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தால் இலங்கையில் ஒரு லட்சம் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன. இதனை முன்னிட்டு பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். கிளை நிறுவனத்தில் நடைபெற்றது.

கடந்த 20 ஆம் திகதி நாகர் கோயில் பிரதேசத்தில் ஒரு லட்சமாவது மிதி வெடியைக் கண்டெடுத்துள்ளனர்.

இதனை முன்னிட்டு மிதிவெடி அகற்றும் பணியாளர்களை ஒன்றிணைத்து அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை முழுவதுமான 'ஹலோட்ரஸ்ட்' நிறுவனத்தின் முகாமையாளர் அடம் ஐசின்ஸ்கி, இடர் முகாமையாளர் ரொம் ஜிஜோர்ஜி, யாழ். மாவட்ட செயலகத்தின் பிராந்திய மிதிவெடி முகாமையாளர் வ.முருகதாஸ் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு இடங்களில் தற்போது 1020 பணியாளர்களைக் கொண்டு மிதிவெடி அகற்றும் பணிகளை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த நிறுவனத்தின் நிதி உதவிகளை அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-313)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் மடத்து வளவுப் பகுதியில் மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை

காரைநகர், ஓக.25

காரைநகர் மடத்துவளவுப் பகுதியில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து சங்கானை நீதிவான் முகாமில் இந்தப் பிரதேச மக்கள் தங்கியுள்ளனர்.

அவர்களில் 55 குடும்பங்கள் சொந்த இடத்தில் மீளக்குடியமர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் மணற்காட்டில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் இவர்கள் மீளக் குடியமர்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்காக வீடுகளை அமைப்பதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் 15 லட்சம் ரூபா நிதியை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் தனது காணியில் உள்ள 110 பனை மரங்களை இங்கு மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு வீடுகளின் கூரை அமைப்பதற்கு இலவசமாக வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

கடந்த வருட இறுதிகளில் இந்தப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் மீளக் குடியமர உகந்த பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அடிப்படை வசதிகள் இன்மையால் மக்கள் மீளக்குடியமர தயக்கம் காட்டி வந்தனர்.

தற்போது மக்கள் மீளக் குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-60)

# கசூரினா கடற்கரையில் தீர்த்த மண்டபம் அமைப்பு



காரைநகர், ஓக.25

காரைநகர் ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தக் கரையான கசூரினா கடற்கரையில் சுவாமி தீர்த்தமாட வசதியாகவும் பக்தர்கள் தீர்த்தமாடி பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு ஏற்ற வாறும் மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த வெள்ளிக்கிழமை நட்டு வைக்கப்பட்டது.

இந்த மண்டபத்தை அமைப்பதற்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு ஒரு மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்த மண்டபத்துக்கான அடிக்கல்லை காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் எஸ். கனகதுரை, காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் ஆகியோர் நட்டு வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர். (ம-250)

# மந்துவில் அ.த.க.பாடசாலையை மீண்டும் இயங்க வைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.25

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ள மந்துவில் அ.த.க. பாடசாலையை மீண்டும் திறக்குமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளைக் கோரியிருந்த போதும் பலன் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.


தரம்- 5 வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலை எதுவித சேதமும் ஏற்படாத நிலையில் உள்ளது. இந்தப் பாடசாலை மீண்டும் உடன் திறக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவித்தும் இதுவரை பலன் கிடைக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலையை அண் டிய பகுதியில் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும் இந்தப் பாடசாலை தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் சுமார் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள பாடசாலைகளுக்கு இங்குள்ள மாணவர்கள் நடந்து செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடம் மாலை வேளைகளில் இளைஞர்களின் கேளிக்கை கூடமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே இந்தப் பாடசாலையை மீண்டும் திறக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என மக்கள் கவலை தெரிவித்தனர். (எ-207)

## புதிய வருகை...



பதவியேற்பு: வலி.கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பதவி ஏற்கும் நிகழ்வு கள் நேற்று இடம்பெற்றன. இதில் உறுப்பினர் ஒருவர் பதவியைப் பொறுப் பேற்கிறார். தலைவர் அன்னலிங்கமும் அருகில் உள்ளார். (ம-11)

# இருபாலை பகுதி மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஓக.25

இருபாலை பகுதி மக்களுக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலத்தடிக் குழாய்கள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. பொக்கணை நன்னீர் கிணற்றில் இருந்து இந்தக் குடிதண்ணீர் இருபாலை பகுதி மக்களுக்கு குழாய் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தக் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத்தின் மூலம் இரண்டாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் பயனடையவுள்ளன. (த-26)

# வங்கி ஓய்வூதியருக்கு அலுவலகம் திறப்பு

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கை வங்கியின் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியச் சங்க அலுவலகம் அண்மையில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். மேற்தரக் கிளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஓய்வூதியர்களுக்கென ஒரு சங்கம் அமைத்துக் கொடுக்கப்படாமையால் ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்கள் தமது நலன்களைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வந்தனர்.

இதனால் இலங்கை வங்கியின் வடமாகாணப் பொதுமுகாமையாளர் கே.டி. சுமணசிறியின் அனுமதியுடன் இலங்கை வங்கியின் 72 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம-313)

# நீர்வேலி வெங்காயச் சங்கம் துரிதகதியில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.25

நீர்வேலி தெற்கு வெங்காயச் சங்கத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இந்தக் கட்டடப் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாக இந்தக் கட்டடம் சேதமடைந்திருந்தது.

இந்தப் பகுதி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் இந்தக் களஞ்சியத்தில் பாதுகாக்கப்பட்டுப் பின்னர் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# துண்டி மயான வீதி மக்கள் பாவனைக்கு

கொழும்புத்துறை, ஓக.25

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

போர்ச் சூழல் காரணமாக 15 வருடங்களுக்கு மேலாக இந்தப் பாதையால் சடலங்களை மயானத்துக்கு எடுத்துச் செல்வது நிறுத்தப்பட்டிருந்தது.

மாற்றுப் பாதையால் சடலங்களைக் கொண்டு சென்று இறுதிக் கிரியைகளை இதுவரை மக்கள் நிறைவேற்றி வந்தனர்.

இந்தப் பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து குடிமனைகளுடான வீதியைத் தவிர்த்து மயான வீதியைப் பாவிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து யாழ். மாநகர சபை மயான புனரமைப்புச் சபை ஆகியன குறித்த வீதி புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளன. (ம-135)

# சுகாதாரமற்ற முறையில் பாண் விற்கப்படுவதாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக.25

காரைநகர் பிரதேசத்தில் உள்ள ஒரு சில வர்த்தக நிலையங்களில் சுகாதாரமற்ற முறையில் திறந்த நிலையிலும் காட்போட் பெட்டிகளில் வைத்தும் பாண் விற்பனை செய்யப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சில வெதுப்பகங்களில் இருந்து பாண் விற்பனைக்கு கொண்டு செல்லும் போது திறந்த நிலையில் கொண்டு செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் வீதிகளின் தூசிகள் அவற்றில் படியும் நிலை ஏற்படும் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, சில வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைசெய்யப்படுவதுடன்பொருள்களின் விலைகளும் இடத்துக்கிடம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-60)

# அம்புலன்ஸ் ஓடும், ஆனால் ஓடாது...!

அச்சுவேலி, ஓக.25

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் உண்டு . இயங்கும் நிலையில் அது உண்டு. ஆனால் அது ஓட மறுத்து நிற்கிறது ஒரு மூலையில்.

என்ன காரணம்?

சாரதி லீவில் இருக்கிறார்; ஒரு நாள் அல்ல. அவர் நீண்ட நாள் லீவு.

இதனால் அவசர நோயாளிகள்தான் இக்கட்டு நிலையில்.

நிலைமையை விளக்குகிறார் எமது செய்தியாளர்-

அச்சுவேலி வைத்திய சாலை அம்புலன்ஸ் பயன்பாட்டில் இல்லாவிடில் பிரதேச வைத்தியசாலைக்கு அறிவித்து அங்கிருந்தே அம்புலன்ஸ் வர வேண்டும்.

ஆனால் அவசரத்துக்கு அம்புலன்ஸ் வராது. அழைக்கும் வேளையில் அங்கு அம்புலன்ஸ் அநேகமாக இருக்க மாட்டாது. அது வேறு சேவைக்காகச் சென்றிருக்கும்.


நோயாளர்கள் காத்திருந்து காத்திருந்து துன்புறவேண்டியதுதான். சிலவேளை உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடலாம்.

கொஞ்சம் 'பசை' உள்ளவர்கள் தனியார் வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி சொந்தச் செலவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக வந்து விடுவார்கள். மற்றவர்கள்பாடு திண்டாட்டம் தான்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலை வட்டாரங்களை கருத்து கேட்ட போது:

"அம்புலன்ஸ் சாரதி வாரக் கணக்கில் லீவு போட்டு விட்டுச் செல்வதால் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுவிடுகின்றது. வேறு என்ன செய்வது" என்று கூறப்பட்டது. (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைலாச வாகனத் திருவிழாவின்போது முருகப் பெருமான் கைலாச வாகனத்தில் வீதியுலா வருகின்றார். (07)

# ஈழத்தமிழர் மீதான அநீதிகள் குறித்து பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்

## கனடாவின் கொன்சவேட்டிவ் கட்சியிடம் கோரிக்கை

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நிலைப்பாட்டை கனடாவின் ஒன்றாரியோ மாகாண கொன்சவேட்டிவ் கட்சி பகிரங்கப்படுத்த வேண்டும் என்று அந்தக் கட்சித் தலைவரிடம் நேரடியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கனடாவின் முக்கிய மாகாணமாகவும் அங்குள்ள தமிழர் களில் 90 விழுக்காட்டினர் வாழும் மாகாணமாகவும் திகழும் ஒன்றாறியோ மாகாணத்தில் ஆட்சியமைக்க முயலும் மாகாண கொன்சவேட்டிவ் கட்சி மேற்படி மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்ற விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கை மத்திய அரசிய லிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு கனேடியத் தமிழர்கள் சார்பாக அந்த நாட்டு தமிழ் தேசிய மக்களவையினரால் அனுப்பப்பட்ட போர்க்குற்ற விவகார மனுவில் லிபரல் கட்சியின் ஒன்ராறியோ மாகாண சபை அங்கத்தவரே மத்திய மாகாண லிபரல் கட்சிகளின் சார்பாக அனுசரணைக் கடிதத்தை அந்த மனுவுக்கான இணைப்பாக வழங்கியிருந்தார்.

இதுபோல மாகாண கொன்சவேட்டிவ் கட்சியும் செயற்பட வேண்டுமெனவும் அந்தக்கட்சி மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணை தொடர்பான தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஒன்ராறியோ மாகாண கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவருமான ரிம்குடாக்கிடம் நட்புறவு ரீதியான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன்போது இந்த விடயத்தை தனது கவனத்துக்குக் கொண்டு வந்தமைக்கு நன்றி தெரிவித்த மேற்படி கட்சித்தலைவர்,

தனது கட்சி இது தொடர்பான விடயத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்த தகவல் பரிமாற்றத்தில் தனது அலுவலகத்துடன் ஈடுபடுமாறும் இது தொடர்பான ஒரு அறிக்கையை சாத்தியமாக்குவது பற்றிய மேலதிக தகவல்களைத் தருமாறும் சந்திப்பை மேற்கொண்ட தமிழர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

# லிபியாவில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு மூடு விழா

லிபியாவில் தற்போது இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரை அடுத்து தலைநகர் திரிப் போலியில் உள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டு விட்டதாக அரச தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அங்கு யுத்த சூழல் உக்கிரமடைந்துள்ள லிபியாவில் இலங்கைப் பணியாளர்கள் எவரும் இல்லை என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

லிபியாவில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டபோதே அங்கிருந்த இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும் பியதாக மேற்படி பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை- அங்குள்ள தூதரகம் மூடப்பட்டதை அடுத்து லிபியாவிலிருந்து இறுதிக் கட்டமாக உள்ள இலங்கையர்கள், அதிகாரிகளுடன் கொழும்பை வ்ந்தடைந்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பொதுத் தொடர்பு மற்றும் தகவல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கை கடந்த கால விடயங்களை மீள்நோக்க வேண்டிய தருணம் இது

## கனேடிய இலங்கைத் தூதர் கருத்து

இலங்கை இனிவரும் காலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே முன்னைய காலங்களில் இடம்பெற்ற விடயங்களை மீளப் புரட்டிப் பார்க்க வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது என்று கனடாவுக்கான இலங்கைத் தூதர் சித்திராங்கனி வாகீஸ்வர தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் :

நாங்கள் மனித வளங்கள், இயற்கை மற்றும் பிற பொருள் வளங்கள் என்று அதிகமானவற்றை இழந்துவிட்டோம்.

இங்கு நான், நாங்கள் எனக் குறிப்பிட்டது இலங்கை வாழ் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களையே ஆகும். அனைவருமே அவர்களது வளங்களில் ஒரு பகுதியை இழந்துவிட்டனர்.

தற்போது சமாதானம் ஏற்பட்டுள்ளது. நாம் சரியான பாதையில் சென்று உயர்வான வழிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்-என்றார்.


## யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு வீடு தேவை

வட மாகாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் வணிக நிறுவனம் ஒன்று, யாழ்ப்பாணத்தில் தனது செயற்பாட்டை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, வாடகைக்கு ஒரு வீடுதேடுகின்றது. யாழ். நகரத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்துக்குள் இருக்கக்கூடிய இந்த வீட்டில் - பணிமனை அமைத்து பணியாளர்கள் தங்கக்கூடிய வசதி, பொருள்களைக் களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி, வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய இடவசதி என்பன இருப்பது விரும்பத்தக்கது. காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி :இல. 021 222 4291
021 567 6735

(சி/3284) (45)


## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் பராசக்தி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சாவகச்சேரியில் வசித்து வந்தவருமாகிய திருமதி நவரத்தினம் பராசக்தி (23.08.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவி யும் கமலறஞ்சினி, சுரேந்திரராஜா (கச்சேரி, கிளிநொச்சி), குணேந்திரராஜா (மோகன்-ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), ஜெயரஞ்சினி (சுவிஸ்), விஜயராஜா (ஜெகன் ஆசிரியவளவாளர், வடமாகாணக் கல்வித்திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கரட்ணம், பவானி, சுகிர்தா (ஆசிரியர், யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்), தயாளன் (சுவிஸ்), றஜனி (ஆசிரியர், அட்டகிரி சைவவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் துஷிந்தா (யாழ்.பல் கலைக்கழக கலைப்பீடம் 2 ஆம் வருடம்), சுமன், தனுஷன், துளசி, கஸ்தூரி, சஞ்சிகா, ஷங்கீத், தர்ணீத், மனோஜ், அஜந்தா (சுவிஸ்),யகீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாவது மைல்கல்,
சாவகச்சேரி வடக்கு,
கிராம்புவில்.

தகவல்:
குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

ஊர்க்கோழிகள், குஞ்சுகள் கூடுகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 0750411027

## காணி விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வு, கணக்கர் சந்திக்கு அருகில் புங்கங்குளம் வீதியில் 2 பரப்பும் 12 குளியும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0773273125, 0771023585

## VACANCY

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**Software Developer**

- Java / VB.NET / C#
- PHP/ MySQL / JavaScript

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

**Marketing Executive**

கணனியில் ஆர்வமும், சந்தைப்படுத்தலில் திறமையும் உள்ள 25 வயதுக்குட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.


உங்களுடைய சுயவிபரக் கோவையை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

career@ceylabs.com

CeyLabs Solutions (Pvt) Ltd.
[illegible]
Jaffna.


## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தசாமி (சின்னராசு)



ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி 18.08.2011 அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் சுதாஸ்கரன் (ஜேர்மனி), சுதாகினி (லண்டன்), ஜெயாநந்தினி (பிரான்ஸ்), கிருபாகரன் (ஜேர்மனி), விமலராகினி (கனடா), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமினி (ஜேர்மனி), தேவராசன் (லண்டன்), குமாரதாஸ் (பிரான்ஸ்), கௌசலா (ஜேர்மனி), உதயகுமார் (கனடா), அஜந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராசதுரை மற்றும் இராணிமலர் (ஜேர்மனி) காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் இந்திரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபினாஷ், அகிலாஷ், சஜீவினி, திலக்ஷன், கிஷாலன், டிஷானி டனுஷா, ஜஸ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை.

தகவல்:
இந்திரன் (சகோதரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறையில் இரவிரவாக வீடுகளுக்குள் புகுந்து பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல்

## சிறிதரன் எம்.பி. சபையில் காட்டம் 18 பேர் காயம் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

கிறீஸ் மர்ம மனிதனால் ஏற்பட்ட பீதியைத் தொடர்ந்து யாழ். நாவாந்துறையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்களின் வீடுகளுக்குள் இரவிரவாக நுழைந்த இராணுவத்தினர் அம்மக்களை கும்பிடக்கும்பிட பாரபட்சமின்றித் தாக்கினர். அத்துடன், கைது செய்யப்பட்டவர்களில் 18பேர் உள் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டனர்.

ஜனாதிபதி சுதந்திரமாக நடமாடுகிறார். ஆனால் தமிழ் மக்கள் நித்திரையின்றி பயத்தில் அல்லற்படுகின்றனர் என்று நாடாளுமன்றில் காட்டமாகக் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் தங்களது இரவுப் பொழுதை நித்திரையின்றி பயத்தோடு கழித்து வருகின்றனர். யாழ். நாவாந்துறைப் பகுதியில் கிறீஸ் மர்ம மனிதர்களால் ஏற்பட்ட களேபரத்தையடுத்து அடுத்து 117 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். நேற்றுமுன்தினம் அவர்களில் அனேகமானோர் யாழ். வைத்தியசாலையில் காயங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் இன்று தங்களது உடைமை, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவாறு பீதியிலும், பயத்திலும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தென்னிலங்கையில் ஜனாதிபதி சுதந்திரமாக நடமாடுகின்றார். நேற்று முன்தினம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் ஜனாதிபதி காலையில் பயிற்சியில் ஈடுபட்டார்.

மலையகப் பகுதிகளில் ஆரம்பித்த கிறீஸ் மர்ம மனிதர்களின் அடாவடித்தனங்கள் படிப்படியாக மட்டக்களப்பு பகுதிகளுக்குப் பரவி நேற்று முன்தினம் யாழ்.குடாநாடு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

யாழில் பலரின் வீடுகளுக்குள் சிலர் புகுந்து பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த மனிதர்களைத் துரத்திப்பிடிக்க முயன்ற பொதுமக்களை இராணுவம் கைது செய்துள்ளது. அத்துடன், சந்தேக நபர்களை மர்ம மனிதர்களை இராணுவம் காப்பாற்றியது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பொதுமக்களின் வீடுகளுக்குள்



நுழைந்த இராணுவத்தினர் 117 பேரைக் கைதுசெய்துள்ளனர். தங்களைத் தாக்கவேண்டாம் எனப் பொதுமக்கள் கும்பிட்டுக் கேட்டும் இராணுவம் அவர்களைத் தாக்கியது. கணவருக்கு முன்பாக மனைவியை பாரபட்சமின்றித் தாக்கியது. பெண்களுக்கு முன்பாக ஆண்களையும் இராணுவத்தினர் தாக்கினர்.

இதேவேளை, பொலிகண்டி, நாவாந்துறை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் குற்றவாளிகள் சிலர் மக்களைத் துன்புறுத்தியுள்ளனர், கிளிநொச்சியில் பாரதிபுரத்தில் மர்ம மனிதர்கள் எவ்வித ஆடையுமின்றி மக்களின் வீடுகளுக்குள் புகுந்து பீதியை ஏற்படுத்தியுள்ளனர்.

(உ-சி)

## ரிஷானாவின் தலைவிதி அவர்கள் கையில்

கொழும்பு, ஓக.25

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிஷானா நபீக்கின் விடுதலை தொடர்பாக சவூதி அரசர், குழுவொன்றை அமைத்து இந்த வழக்கின் முன்னெடுப்புகளை மேற்கொண்டார். இதற்கமைய அரச நீதிமன்றம் ரிஷானா விவகாரத்தைக் கொல்லப்பட்ட குழந்தையின் பெற்றோரிடம் மன்னிப்புக்காகக் கையளித்துள்ளது.

குழந்தையைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சவூதியில் சிறைவாசம் அனுபவித்துவரும் ரிஷானா நபீக்குக்கு விடுதலை கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் அந்நாட்டின் அரசர் - சமரசக் குழு ஒன்றை அமைத்து இந்த வழக்கின் முன்னெடுப்புகளை மேற்கொண்டார். அதற்கமைய அரச நீதிமன்றம் ரிஷானா விவகாரத்தைப் பாதிக்கப்பட்ட பெற்றோரின் மன்னிப்புக்காகக் கையளித்துள்ளது.

இலங்கை அரசு பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



கிறீஸ் மனிதன் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முஸ்லிம் சமூக பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை கலந்துரையாடினார்.

## கிறீஸ் மனிதன் பின்னணியில் இராணுவத்தினரா? நிரூபிக்க முடிந்தால் சபையில் அறிவியுங்கள்

### சவால் விடுகிறார் அமைச்சர் தினேஷ்

கொழும்பு,ஓக.25

கிறீஸ் மர்ம மனிதர்கள் பின்னணியில் இராணுவத்தினர் தொடர்புபட்டுள்ளனர் என்பதை நிரூபிக்க முடியுமானால் பெயர், விவரங்களுடன் ஆதாரபூர்வமாக சபையில் அறிவிக்குமாறு அரசு நேற்றுமுன்தினம் சவால் விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துறைமுக,விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் மீதான விவாதத்தின்போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமனற உறுப்பினர் சிறிதரன் கிறீஸ் மனிதன் நடவடிக்கையுடன் இராணுவம் தொடர்புபட்டுள்ளது என்பதை மக்களுக்கு ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க முடியும் எனக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உரையாற்றிக் கொண்டிருக்கையில் எழுந்த ஆளும் கட்சிப் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன,

கிறீஸ் மர்ம மனிதர்கள் பின்னணியில் இராணுவம் தொடர்புபட்டிருந்தால் அதை நிரூபிக்க முடியும் என்றால் பெயர் விவரங்களுடன் சபையில் அறிவிக்குமாறும்,அதை விடுத்து வீணாக இராணுவம் மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை எனவும் தெரிவித்தார்.

# புலிகளின் தோல்வியைத் தாங்க முடியாத இயக்கங்களே கிறீஸ் பூதத்தின் பின்னணி

## புதிய கதை சொல்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஓக. 25

விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தாங்க முடியாத சில இயக்கங்களே கிறீஸ் பூதத்தின் பின்னணியில் உள்ளன என்று புதிய கதை ஒன்றை அவிழ்த்துவிட்டுள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ. கிறீஸ் பூத விகாரத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இந்த விடயத்தில் மிக நேர்மையாகச் செயற்படுகின்றனர் என்றும் அவர் கூறுகிறார்.

கிறீஸ் பூதம் தொடர்பாக முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளைப் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார் கோத்தபாய. அப்போது அவர் கூறியதாவது:

துட்டகைமுனுவின் வாளை எடுப்பதற்காகவும், பன்றி இறைச்சி சாப்பிடாதவர்களின் இரத்தத்தைக் கொண்டு ஜனாதிபதிக்குப் பூஜை செய்வதற்காகவும் கிறீஸ் பூதங்களை அரசு உலாவ விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற அனைத்தும் முற்றிலும் கட்டுக் கதைகள்.

விடுதலை புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்த இராணுவத்தால் எதையும் சாதிக்க முடியும். எனினும் கிறீஸ் பூத விடயத்தில் இராணுவம் பொறு மையாகச் செயற்படு கின்றது. அதை பொது மக்கள் தமக்குச் சார்பாகப் பயன் படுத்திக்கொள்ள கூடாது.

பொதுமக்கள் இராணுவ முகாம்களை சுற்றிவளைப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இதுவரை இரண்டு தடவைகள் பொதுமக்களினால் இராணுவ முகாம்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் விடுதலை புலிகள் இயக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் உள்ளனர்.

நாட்டில் உள்ள முஸ்லிம்கள் ரம்ழான் மாத இரவு நேர தொழுகைகளுக்குப் பயப்படாமல் செல்லலாம். இதற்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். கிறீஸ் பூதங்களுடன் படையினருக்கோ, பொலிஸாருக்கோ எந்தத் தொடர்புமில்லை. அவசர கால சட்டத்தை நீக்குபவரும் ஜனாதிபதியே. அமுல்படுத்துபவரும் ஜனாதிபதியே. வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து அவசர கால சட்டத்தை நீக்க வேண்டிய நோக்கம் எமக்கு இல்லை.

கிறீஸ் பூதம் தொடர்பான பிரச்சினைகளால் ஒரு பொலிஸ் கொன்ஸ்டபிளும் இரு அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தாங்க முடியாத சில இயக்கங்கள் இதன் பின்னணியில் உள்ளன. இராணுவத்தினரும் பொலிஸாரும் இந்த விடயத்தில் மிக நேர்மையாகச் செயற்படுகின்றனர்.

அண்மையில் கிண்ணியாவில் இடம்பெற்ற குழப்பங்களை அடுத்து, அது குறித்துப் பொதுமக்களுடன் ஆராயும் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட கிழக்குப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி பொதுமக்களினால் சுற்றி வளைக்கப்பட்டார். இது பெரும் தவறு.

அந்தத் தளபதி நினைத்திருந்தால் குறித்த கூட்டத்தை இராணுவ முகாமில் நடத்தியிருக்கலாம். எனினும் அவர் மக்களைத் தேடிச் சென்றார். அதனாலேயே அவர் சுற்றி வளைக்கப்பட்டார். இந்தச் செயலின் பின்னணியிலிருந்த குற்றவாளிகளை காண்பித்தால் ஏனையவர்களை விடுவிக்க முடியும் - என்றார் கோத்தபாய.

(உ)

## மர்ம மனிதனுக்குப் புள்ளி உண்டா? சிரித்தபடியே கேட்டார் கோத்தபாய

கொழும்பு,ஓக.25

மர்ம மனிதனுக்கு புள்ளி உண்டா என நகைச்சுவையாகக் கேட்ட பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கிறீஸ் பூதமாக பிறந்திருப்பாரோ என சிரித்துக் கொண்டே தெரிவித்தார்.

கிறீஸ் பூதம் அல்லது மர்ம மனிதன் வதந்தியால் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அதனை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட பள்ளிவாசல் பிரதிநிதியொருவர் பாதுகாப்புச் செயலாளரிடம், கொடூர தீவிரவாத அமைப்பான புலிகளை அழித்துவிட்டோம் எனக் கூறும் இந்த அரசுக்கு மர்ம மனிதனை பிடிக்க முடியாததன் மர்மம் என்ன என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ் பூதத்தைப் பிடிக்க உருவாக்கப்பட்ட விழிப்புக் குழு மீதும் படையினர் தாக்குதல்

## மன்னாரில் செவ்வாய் இரவு சம்பவம்

மன்னார், ஒக. 25

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் பிரதேச சபை உறுப்பினர் உட்பட பலர் மோசமான காயங்களுக்கு ஆளாகினர். விழிப்புக் குழுவினரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

தற்போது மன்னாரில் மர்ம மனிதர்கள் தொடர்பான சம்பவங்கள் தினமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த நிலையில் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் மன்னார்ப் பொலிஸாரின் அறிவுறுத்தலின் பிரகாரம் விழிப்புக்குழுவொன்று அமைக்கப்பட்டு இரவு வேளைகளில் அது கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவும் இந்தக்குழு கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. வழக்கம் போல வீதிக்குக் குறுக்கே கட்டை ஒன்று போட்டு வைக்கப்பட்டிருந்தது. 11 மணியளவில் இராணுவ வாகனமொன்று வந்துள்ளது. இதனை அவதானித்த கண்காணிப்புக் குழுவினர் வாகனம் செல்வதற்காக வீதிக்குக் குறுக்காகப் போட்டிருந்த கட்டையை அகற்றுவதற்கு முயன்றனர்.

அப்போது வாகனத்தில் இருந்து கீழே குதித்த இராணுவத்தினர் தமது கைகளில் வைத்திருந்த பொல்லுகள், தடிகளால் விழிப்புக்குழுவினரைக் கண்மூடித்தனமாகத்தாக்கினர். தடிகளில் கம்பிகள் சுற்றப்பட்டிருந்ததால் தாக்கப்பட்டவர்கள் மோசமான காயங்களுக்கு ஆளானார்கள்.

இதற்கிடையில் இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள நற்கருணை ஆண்டவர் ஆலயத்தின் மணி ஒலிக்கப்பட்டது. இந்த ஒலியைக் கேட்டதும் சுமார் இரண்டாயிரம் மக்கள் ஆலயவளாகத்துக்குள் திரண்டனர். மன்னார் மறைமாவட்டக்குரு முதல்வர் அன்ரன் விக்ரர் சோசையும் வேறுகுருமாரும் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

இதனிடையே சம்பவம் தொடர்பாகக் கேள்விப்பட்டதும் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்கள் உட்பட 19 வாகனங்களில் இராணுவத்தினர் விரைந்து வந்தனர். இவர்களும் அங்கு திரண்டிருந்த மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கினர்.

மன்னார் பொலிஸார் அங்கு வந்தபோதும் கண்காணிப்புக் குழு அமைத்தமை தொடர்பாக மௌனம் காத்தனர். பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கமையவே கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாகப் பொலிசார் மௌனம் காத்தமை மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

மேலும் அங்கு நின்ற மதகுருமார்களை இராணுவத்தினர் தீயவார்த்தைகளைப் பிரயோகித்துக் கண்டபடி ஏசியதைக் காணமுடிந்ததாகவும் தெரிய வருகின்றது. இதற்கிடையே பங்குத்தந்தை ஒருவரின் மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டது.

தேவாலயப்பகுதியில் கூட்டத்தினர் மத்தியில் தோன்றிய பொலிசார் மக்கள் சட்டத்தைத் தமது கையில் எடுக்கக்கூடாதென அறிவுறுத்தினர்.

நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பாகக் கேள்விப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் சம்பவ இடத்துக்கு வந்து மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அத்துடன் சம்பவம் தொடர்பாக மன்னார் அரச அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதலில் மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜெயம் சுதாகரன் உட்பட 20 பேர் வரையில் மோசமான காயங்களுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது. (க-601)

# ஒட்டுசுட்டானில் கட்டாக்காலிகளால் மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஒக. 25

ஒட்டுசுட்டானில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால்நடைகள் பயிர்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தி வருவதுடன் பொது இடங்களையும் அசுத்தப்படுத்தி வருகின்றன.

குறிப்பாகப் பாடசாலைகளை இரவு வேளைகளில் இவை தங்குமிடங்களாகப் பாவித்து வருவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன.

மேலும் ஏனைய பொது இடங்களையும் இவை ஆக்கிரமித்துக் காணப்படுவதால் பொது மக்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கமநல சேவை நிலையத்தினூடாகக் கமக்கார அமைப்பினர் உடனடியாகக் கவனமெடுத்து இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமெனப் பலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-500)

## தொடரும் வெற்றிகள்...



சிறந்த வழிகாட்டிகள்: முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்திலிருந்து கோட்ட மற்றும் வலய மட்டத்தில் இடம்பெற்ற ஆங்கில தினப் போட்டியில் அபிநயப்பாடல் குழு 1 இல் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் பொறுப்பாசிரியைகளுடன் காணப்படுகின்றனர்.

# திட்டம் தொடர்பாகக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஒக .25

சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர். திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

சமூகசேவைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கிறிஸ்ரி பெர்ணான்டோ, சி.பி.ஆர். திட்டத் தேசிய இணைப்பாளர் எம்.சாந்த குமார ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் மீளாய்வு தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டச் சமூக சேவைகள் அதிகாரி கே.குணசிங்கம் இதில் கலந்து கொண்டு கடந்த காலங்களில் இந்தத் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக எடுத்துக் கூறினார். இனிவரும் காலங்களிலும் மேற்கொள்ள வேண்டிய வேலைகள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

சி.பி.ஆர். திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்த மாவட்டத்திலுள்ள சமூக சேவைகள் அதிகாரிகளுக்கு இரு கட்டப்பயிற்சிகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன.

மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக இலங்கை முழுவதும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டம் தற்போது வன்னிப் பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-121)

# மருத்துவர் சத்தியமூர்த்திக்கு அமெரிக்கா விருது

வவுனியா, ஒக. 25

வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகரான மருத்துவர் சத்தியமூர்த்தி அமெரிக்காவிலுள்ள அமைப்பு ஒன்றினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வன்னியில் போர் நடைபெற்ற போது இறுதிவரை அங்கு தங்கியிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ சேவையைத் திறம்பட ஆற்றிய மைக்காகவே இவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த விருதினைப் பெறுவதற்காகக் கடந்த வாரம் அமெரிக்காவுக்குப் பயணமான மருத்துவர் சத்தியமூர்த்தி விருதினைப் பெற்ற பின்னர் நாடு திரும்பியுள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகராகப் பதவியேற்றது முதல் வன்னி மக்களுக்குச் சிறந்த மருத்துவ சேவையை வழங்க வேண்டுமென்பதற்காக இவர் அரும் பணியாற்றி வருகின்றார்.

அமெரிக்க விருதினைப் பெற்ற மருத்துவர் சத்தியமூர்த்தியை வவுனியா வைத்தியசாலைச் சமூகத்தினரும் பொதுமக்களும் பாராட்டியுள்ளதோடு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

(ம-421)

# வாகன இலக்கத் தகடுகள்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகனத் தகடுகளின் ஒரு தொகுதி தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் அதன் புகைப் படப்பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றைச் சமர்பித்து இலக்கத் தகடுகளைப் பெற்றுச் செல்லுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

LA- 6156, HO-2755, LB-8593, PD-6995, KC-3863, LC-9455, QJ-3968, HZ-0827, HC-8141, HJ-0181, QE-0538, HR-4331, QG-8555, QG-5558, QG-4735, GR-5169, QD-4973, UX-7228, RA-2935, RB-1302, JH-8135, RA-0259, HE-6548, GC-0778, RA-5122, JQ-9317, RA-1362, GL-4024, JN-7532, QH-5453, HB-5684, HS-9437, QH-6974, QI-2135, GE-9912, GB-5954, HJ-7323, GJ-5988, GT-4387, JN-6391, NA-2231, GP-8225, GP-2793, QC-9854, GW-0840, QK-2626, GS-3147, JE-1391, GN-0056, PA-2475, GK-2775, HU-9656, KA-2273, LB-7819, KC-1962, LC-3009, KG-7574, PD-2333, LG-3806, HJ-9595, LB-8592, JG-4273, KE-8890, LB-9346, GI-4977, HI-9494, QC-8723, HQ-1519, HQ-1535, QD-0595, GF-2848, GQ-5475, HH-7154, JS-4212, QI-6384, QF-3596, QC-6929, QJ-0191, HZ-0723, JU-08189 (க)

# வாழைப் பொத்திக்கும் மவுசு

கிளிநொச்சி, ஒக.25

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் வாழைப் பொத்திகளை மரக்கறி வியாபாரிகளிடம் வாங்க முடியாமலுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உணவு சமிபாடடையாமை தொடர்பான பிரச்சினைகள் உள்ளோர் வாழைப் பொத்தியைக் கொண்டு தயாரிக்கப்படும் கறிவகைகளை உண்ணுமாறு வைத்தியர்கள் சிபாரிசு செய்கின்றனர்.

ஆனால் சந்தையில் அவற்றை வாங்க முடியாமல் உள்ளதாக இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். சந்தையில் அரிதாக விற்பனைக்கு வரும் வாழைப் பொத்தி அனைவரது தேவைக்கும் போதாமல் உள்ளது.

யுத்த காலத்தில் முற்றாக அழிவடைந்த வாழைப்பயிர்கள் மீளக்குடியமர்ந்த மக்களால் தற்போது தான் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.

வாழைப்பொத்திகள் சந்தைகளில் போதுமான அளவில் கிடைப்பதில்லை. இதனால் கிளிநொச்சியிலுள்ளோர் யாழ்ப்பாணத்திலுள்ள தமது உறவினர், நண்பர்கள் மூலமாக வாழைப் பொத்திகளைப் பெறுவதில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மரக்கறிகளை கிளிநொச்சிச் சந்தைக்கு எடுத்து வரும் வியாபாரிகள் வாழைப் பொத்திகளையும் எடுத்துவர வேண்டுமெனப் பொது மக்கள் கோருகின்றனர்.

(க-121)

# பதவி நிலை உத்தியோகத்தர்கள் இல்லாததால் மக்கள் அலைச்சல்

மன்னார், ஒக. 25

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பணிமனையில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்படாததால் அங்கு செல்லும் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாமல் திண்டாடுவதுடன் பலமணி நேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகச் சகலதையும் இழந்து வெறுங் கையுடன் வெளியேறிய மக்கள் தற்பொழுது படிப்படியாக சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து வருகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காக உதவி அரச அதிபர் பணிமனைக்குச் செல்லும் போது அங்கு உரிய பொறுப்பான அதிகாரிகள் இல்லாததால் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்

மீள்குடியமர்வு வேலைகள் தற்பொழுது துரிதமாக இடம் பெற்று வருகின்றன. ஆனால் பதவிநிலை உத்தியோகத்தர்கள் இல்லாததால் அங்கு செல்லும் மக்கள் தங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள்.

மேலும் உதவி அரச அதிபரின் வருகைக்காக மணிக் கணக்கில் காத்திருக்கும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறார்கள்.

எனவே மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் பதவி நிலை உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துபோன மல்லாவி பொதுச்சந்தை 2 வருடங்களாகியும் திருத்தப்படவில்லை

மல்லாவி, ஓக. 25

மீளக்குடியமர்ந்து சுமார் 2 வருடங்களாகியும் மல்லாவிப் பொதுச் சந்தை புனரமைக்கப் படாமல் போர்க்காலத்தில் ஏற்பட்ட அழிவுகளுடன் காட்சியளிப்பதாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மல்லாவியில் மக்கள் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் முக்கியமான மையப்பகுதியில் அமைந்திருக்கும் பொதுச் சந்தை இவ்வாறு இடிபாடுகளுடன் காட்சி தருவது பலருக்கும் வேதனையை ஏற்படுத்துகின்றது.

இந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்ந்ததும் சிறிய மரக்கறிச் சந்தையொன்று அமைக்கப்பட்டது. தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் கூடும் இந்தச் சந்தையில் இடத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் வெற்றிலைக் கடைகள் மற்றும் ஏனைய பொருள்களை விற்பனை செய்பவர்கள் தகரத்தால் அமைக்கப்பட்ட இடவசதிகளற்ற தற்காலிகக் கடைகளில் இயங்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

மேலும் சந்தையில் அமைக்கப்பட்ட கடைகள் பொருள்களுக்கேற்ப வேறுபடுத்தப் படாது ஒரே கடையில் பலவகையான பொருள்களும் விற்பனை செய்வதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் பாவனையாளர்கள் தமக்குரிய பொருள்களைத் தேர்வு செய்வதில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதேவேளை மரக்கறிகள் உட்படப் பல பொருள்களும் வெளிக்கடைகளில் விற்பனை செய்யப்படுவதால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாகச் சந்தை வியாபாரிகள் கூறுகின்றனர்.

மேலும் சந்தைப் பகுதிக்குள் அமைந்திருக்கும் மலசலகூடம் நீர் விநியோகமில்லாததால் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. இங்கு அமைந்துள்ள கிணறு மலசலகூடத்திலிருந்து தூரத்தில் அமைந்துள்ளதால் நீர் பெறுவதில் சிரமங்கள் உள்ளன.

அத்துடன் இந்தக் கிணற்றை மூடிப் பாதுகாப்பு வலைகள் அமைக்கப்படாததால் காகம் போன்ற பறவைகளால் காவிச் செல்லப்படும் கழிவுப் பொருள்கள் கிணற்றினுள் தவறி வீழ்ந்து விடுகின்றன. இதனால் கிணற்று நீர் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாகச் சந்தை வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒரு நகரமாக வளர்ந்து வரும் மல்லாவியின் அபிவிருத்திக்கு இந்தச் சந்தை மிக முக்கியம் வாய்ந்ததென இங்குள்ள பலரும் தெரிவிக்கின்றனர். (க-425)

## படையினரின் முகாம் பகுதிக்குள் தேவாலயம், குடிதண்ணீர்க் கிணறு

### சாந்தபுரம் மக்கள் கவலை தெரிவிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் பொதுமக்களின் பயன் பாட்டிலுள்ள குடிதண்ணீர்க்கிணறு, தேவாலயம் என்பவற்றைத் தமது படைமுகாமுடன் உள்ளடக்கிப் படையினர் முட்கம்பி வேலி அமைத்து வருவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் கனகாம்பிகைக்குளம் பகுதியிலுள்ள சாந்தபுரம் கிராமத்தில் அமைந்துள்ள மாதா தேவாலயம், குடிதண்ணீர்க் கிணறு ஆகியவற்றையே இராணுவத்தினர் முட்கம்பிவேலி அமைத்துத் தமது படைமுகாமுடன் இணைத்துள்ளனர். இதனால் தாம் குடிதண்ணீர் பெறுவதிலும், ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருப்பதாக இப்பகுதி மக்கள் அச்சமும், கவலையும் வெளியிட்டுள்ளனர்.

மேலும் சாந்தபுரம் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகளை அபகரித்ததுபோல இவற்றையும் அபகரிக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக மக்கள் ஐயமும் வெளியிட்டுள்ளனர். இங்குள்ள குடிதண்ணீர் கிணற்றினை நம்பியே சுமார் 19 இக்கு மேற்பட்ட குடும்பங்கள் 35 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை இவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

எனவே உரியவர்கள் இதில் தலையிட்டுத் தமக்கு விமோசனம் பெற்றுத்தருமாறும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-6)

## முல்லை. காடுகளிலிருந்து மரம் கடத்துவது அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஓக. 25

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து மரங்கள், பலகைகள், கருங்கற்கள் என்பன அதிகளவில் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால் மரம், தடிகளைத் தமது தேவைக்கேற்றவாறு வெட்டியெடுக்க முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். அத்துடன் மணலுக்கும் இதே நிலைதான். இந்த நிலையில் மரங்கள், பலகைகள் என்பன வெளிமாவட்டங்களுக்குத் தாராளமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. அத்துடன் கருங்கற்களும் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

மேலும் தமது வீடுகளைப் புனரமைப்பதற்காக மரங்கள், தடிகள், பலகைகள் என்பவற்றை வியாபாரிகளிடம் மக்கள் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் அதிக பணத்தைச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சுதந்திரமான முறையில் மரங்கள், தடிகளைப் பெறமுடியாத அவல நிலையில் தாம் உள்ளமை தொடர்பாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-500)

### இப்படியும் முடியும்...



சிறந்த பொறிமுறை: வவுனியாவில் நடைபெற்ற விவசாயிகள் வாரக் கண்காட்சியின் போது சைக்கிளை இயக்கி நீரிறைக்கும் பொறிமுறை காண்பிக்கப்படுகின்றது. (421)

## புனரமைக்கப்பட்டு ஒரு மாதத்தினுள் மீண்டும் சேதமடைந்த பிரதான வீதி

கிளிநொச்சி, ஓக. 25


கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்பட்ட ஒரு மாதத்தினுள் மீண்டும் சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி கடந்த மாதத்தின் முற்பகுதியில் கிரவலால் நிரப்பப்பட்டுத் தாரும் இடப்பட்டது. இப்போது தார் அகன்று கிரவல் மேலெழுந்து மேடுபள்ளமான நிலையில் காட்சி தருகின்றது.

கடந்த சில தினங்களாக இந்தப் பகுதியில் பெய்துவரும் பெருமழை பள்ளங்களில் தேங்கி நின்றதால் வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தரக்குறைவான முறையில் இந்த வீதி புனரமைக்கப்பட்டதும், இந்த வீதியூடாக அடிக்கடி அதிகளவில் டிப்பர் வாகனங்கள் சென்று வருவதும், சிறு திருத்தங்களை உடனுக்குடன் மேற்கொள்ளாமையும் வீதியின் மோசமான நிலைக்கான காரணங்களென மக்கள் கூறுகின்றனர். (க-405)

## மிகவும் மோசமான நிலையிலுள்ள வீதி



முல்லைத்தீவு, ஓக. 25

முத்துஐயன்கட்டுப் பிரதான வீதியிலிருந்து இடதுகரை மத்திய காணிகளுக்குச் செல்லும் வீதி நடந்து செல்லக்கூட முடியாத அளவுக்கு மோசமான நிலையிலுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி குன்றும் குழியுமாகவும், சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது. இதனால் மக்கள் செல்லவோ அல்லது அறுவடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு செல்லவோ முடியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாகப் பலருக்கும் அறிவித்துள்ளபோதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லையெனவும் இவர்கள் கூறுகின்றனர்.

மாரிகாலம் ஆரம்பிக்கும் போது நிலைமைகள் மோசமாக மாறிவிடும் ஏது நிலைகள் காணப்படுகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## மோசடி வர்த்தகர்கள் வசமாகச் சிக்கினர்

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சியில் கட்டுப்பாட்டு விலைகளிலும் பார்க்க அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் சிலர் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க பாணைக் கூடிய விலையில் விற்பனை செய்தவரும், அரிசியை அதிகரித்த விலையில் விற்பனை செய்தவரும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் அகப்பட்டுக்கொண்டனர். பின்னர் இவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் இவர்களை எச்சரிக்கை செய்தபின்னர் விடுதலை செய்தார்.

இதேவேளை பனடோலை அதிகரித்த விலையில் விற்பனை செய்தவருக்கு ஆயிரம் ரூபாவும், குளிர்பானப்போத்தலைக் குறித்த விலையிலும் பார்க்க அதிகூரித்த விலையில் விற்பனை செய்தவருக்கு 3ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

## வீதிகள் புனரமைப்பு

வவுனியா, ஓக. 25

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த வவுனியா புறநகர்க் கிராமங்களின் வீதிகள் புனரமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா - இறம்பைக்குளம் வீதி மற்றும் கோயிற்குளம் வீதியூடாகச் சிதம்பரபுரம் செல்லும் வீதி முற்றாகச் சேதமடைந்திருந்தது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையில் மக்கள் சிரமங்களுக்குள்ளாகி வந்தனர். இந்த நிலையில் இந்த வீதியைப் புனரமைக்க வேண்டிய அவசியம் குறித்துப் பத்திரிகையொன்றில் புகைப்படத்துடன் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-421)

## நூற்றாண்டு விழாக் காணும் ஓமந்தை மத்திய கல்லூரி

வவுனியா, ஓக. 25

வவுனியா, ஓமந்தை மத்திய கல்லூரி ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் ஏராளமான கல்விமான்களை உருவாக்கியுள்ள புகழ்பூத்த இந்தக் கல்லூரி நீண்ட காலத்தின் பின்னர் சொந்த இடத்தில் இயங்கி வருகின்றது.

இந்தக் கல்லூரியின் நூற்றாண்டு விழா தொடர்பாக வெளியிடப்படவுள்ள நூற்றாண்டு மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கல்லூரியில் முன்னர் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுடன் சேர்ந்து எடுத்த குழுப் புகைப்படங்கள் ஏதுமிருந்தால் அவற்றை எதிர்வரும் நான்காம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் மூ.அரசரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அமைக்கப்பட்ட விழாக்குழுவினர் அது தொடர்பான ஆயத்தப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மாணவர்களுக்கென நிக்கொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இருமாடி விடுதிக்கட்டடம் அடுத்த தவணையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன்மூலம் பரந்து விரிந்த வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரி விடுதியில் தங்கி நின்று முன்னரைப் போன்று கல்வியைப் பெற முடியுமெனப் பழைய மாணவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மேலும் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குப் பழைய மாணவர்கள், முன்கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுவதாக கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார். (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆலயத் திருவிழாக்கள்




## ஆன்மீகத்தைப் பரப்புகின்றனவா?

சகல மதங்களுக்கும் பொதுவாகவே இந்தத் தலைப்பு அமைவதால், குறிப்பிட்ட ஒரு மதத்தை மையமாகக் கொண்டு ஆராய்வதும் எழுதுவதும் பொருத்தமற்றது. பொதுவாகவே ஆலயத் திருவிழாக்கள் ஆன்மிகத்தையே பரப்புவதற்கு ஏற்ற அத்தனை செயற்பாடுகளையும் ஆற்றி வருகின்றன. ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்கள் அனைத்துமே ஆன்மிகத்தையே பரப்புவதற்குக் கடப்பாடுடையனவாகவும், களியாட்டங்களுக்கு இடமளிக்காத இலட்சியமுடையனவாகவும் சிருட்டிக்கப்பட்டிருக்கையிலே எவ்வாறு களியாட்டங்களுக்கு வித்திட முடியும்? ஆகமங்களையும் விதிமுறைகளையும் மீறாத ஆன்மிகச் செயற்றிறன்மிக்க ஆலயங்கள் இருப்பதனாலன்றோ மனிதம் செத்துவிடாமல் உயிரோடு இன்றும் அழியாமல் என்றும் தழைத்த வண்ணம் உள்ளது.

களியாட்டங்கள் விதைக்கப்படுமாக இருந்தால் விதைகள் முளைப்பது மாதிரி இருக்கும். கருகிப் போய்விடும் ஆலயங்களின் ஆன்மிக வாழ்வுதான் கிராமங்களை வெல்லவைக்கும். அந்தவகையில் ஆலயத் திருவிழாக்கள் ஆன்மிகத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டுள்ளன. அதில் தவறுகள் ஏற்படுமானால் கிராமங்களில் பிரதிபலிக்கும்.

**கே.எஸ். சிவஞானராஜா,** கொக்குவில்.

## களியாட்டத்துக்கு வித்திடுகின்றனவா?

இன்றைய ஆலயத் திருவிழாக்கள் எமது மூதாதையர் காலத்தில் நடைபெற்ற ஆன்மிக நோக்குடைய திருவிழாவாகக் காணப்படவில்லை. இன்றைய இளம் சமுதாயத்தினர் ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்களை களியாட்டங்களுக்காகவே பயன்படுத்துகின்றனர். இதற்கு நவநாகரிக மோகம் காரணம் ஆகின்றது.

முன்னைய காலங்களில் ஆண்கள் பட்டுவேட்டி, சால்வையுடனும் இளம் பெண்கள் பாவாடை, சட்டையுடன் பெண்கள் சேலையுடனும் ஆலயங்களுக்குச் சென்றனர். ஆனால் அந்தக் காலம் போல் இல்லாது இந்தக் காலத்தில் நாகரிகம் மாறிவிட்டது. சுடிதார் அணிந்து செல்லும் பெண்களும் அரை, கால் பாவாடையுடன் செல்லும் பெண்களும் ஜீன்ஸ் அணிந்து செல்லும் ஆண்களுமே அதிகமாக காணப்படுகின்றனர்.

ஆன்மிகத் திருவிழா ஆலயத் திருவிழாவுக்கு வித்திடுகின்றது என்று வாதிட்டு எதிர்வாதி கூறி இருந்தார். ஆலயத் திருவிழா மக்கள் மத்தியில் சமயத்தைப் பரப்புகின்றது என்று கூறினார். ஆனால் இன்றைய காலகட்ட திருவிழாக்கள் முன்னர் இடம்பெற்ற திருவிழாக்களைப் போல் அல்ல. குறுகிய நிமிடத்திலே பூசை முடிவடைகிறது. அத்துடன் படக் காட்சிகளும் இசைக் கச்சேரிகளும் நடத்தப்பட்டு இளைய சமூகத்தைச் சீரழிக்கிறதே தவிர சமயத்தைப் பரப்பி ஆன்மிகத்தை ஊட்டவில்லை. எனவே ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்கள் இளையோர்களின் களியாட்ட நிகழ்வுக்கு வித்திடாமல் இருக்க அந்தச் சமூகம் ஒன்றிணைய வேண்டும்.

**ஜெனனி,** உருத்திரபுரம்.

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. எனவே

**இந்த முறை இடம்பெற்ற**
**உள்ளூராட்சி சபைத் தேர்தலில்**
**இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்**

**போதுமானது** **போதாது**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றி பெறும் என்று நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### பூமி



கண் அயர்ந்தால்
பூமி எமக்குப் படுக்கையாகிறது
விழித்து நடந்தால்
அதுவே எமக்குப் பாதையாகிறது



### நட்பு

காலங்கள் என்றாலும்
உயிர் கொண்ட நட்பு
என்றுமே உயிருடன்
உறவாடித் தொடரும்....



### கவிஞன்

கவிஞன் ஒரு தாய்
அவன்
கவிதைகளைக் கருத்தரிக்கிறான்
பிறிதொரு விதத்தில்
கவிஞன் ஒரு சேய்
அவனை
வாசகர்கள் பிரசவிக்கிறார்கள்

### காதல்

காதல் என்பது
விரித்தவர்களே
அகப்பட்டுக் கொள்ளும்
விசித்திர வலை

### காதலிக்கு

உன் வீட்டின்
ஜன்னல் கதவைத்
திறக்கச் சொல்லிடக் கூட
நான் சத்தமிட்டதில்லை
ஆனாலும் உனக்காக
என்
இதயக் கதவுகளையே
திறந்து வைத்திருக்கிறேன்
எப்பொழுதும்!

**ப.அபிரா,**
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
.............. ..............................
திகதி கையொப்பம்

## நழுவிப் போகும் கலாசாரம்

கொப்பளித்துக்
கொண்டிருக்கிறது எம் குருதி!
எல்லை மீற முடியாது
எரிகிறது எம் இதயம்
படிதாண்டிச் செல்கிறது
எம் கலாசாரம்
எப்படியும் வாழலாம் என
கெட்டுப் போகிறது எம் இனம்!
குட்டிச் சுவராகுமுன்
திட்டமிட்டு
செயற்படாவிட்டால்
போய்விடும் இறந்தழிந்து
தமிழனவன் பண்பாடு!

**க. கலையரசி,**
துணவி.



### இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இந்த முறை இடம்பெற்ற**
**உள்ளூராட்சி சபைத் தேர்தலில்**
**இளம் சமுதாயத்தினரின் பிரவேசம்**

**போதுமானது** ☐ **போதாது** ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
அடையாள அட்டை இல. ..............................
..............................

உங்கள் தீர்ப்புக்களை 29.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## வரலாற்றில் சரித்திரம் படைத்த பிரெஞ் புரட்சி

1789 ஆம் ஆண்டில் பிரான்ஸில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தை பிரெஞ்சுப் புரட்சி எனலாம். இந்தப் புரட்சியின் காரணமாகப் பிரான்ஸில் அரசியல், பொருளாதாரம், சமூகம் உள்ளிட்ட துறைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்த உள்நாட்டு கலவரத்துக்குத் தலைமை தாங்கியவர் "நெப்போலியன் போனப்பாட்" ஆவார்.

18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸில் அரச குடும்பத்தினர், சமய மதகுருமார், குடிமக்கள் என மூன்று பிரிவு காணப்பட்டது. இதில் சாதாரண குடிமக்கள் அரசுக்குக் கட்டாயம் வரி கட்ட வேண்டும் என்பது சட்டமாகக் காணப்பட்டது. இந்த வரியுயர்வு காரணமாக மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகினர். இந்தக் கால அரசர்கள் தாமே அரசு என்று எண்ணினர். 16 ஆம் லூயி மன்னனின் ஆட்சிக் காலத்திலேயே புரட்சி வெடித்தது. சாதாரண மக்களாகக் கருத்தப்பட்ட கல்வி கற்றவர்கள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் நடைபெற்ற புரட்சிகள், அதனால் ஏற்பட்ட சுதந்திரங்கள் பற்றியும் புரட்சி செய்த முறை பற்றியும் நன்கு அறிந்திருந்தனர்.

ஆகவே அவர்கள் பிரான்ஸிய அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். 1789 ஆம் ஆண்டில் பிரான்ஸிய அரசு மக்களுக்கு எதிராக அதிக வரி விதித்ததனால் அரசுக்கும் மக்களுக்குமிடையில் யுத்தம் மூண்டது. 1614 இல் கூடிய அரச சபையான "ஸ்டேட் ஜெனரல்" 1789 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியே மீண்டும் கூட்டப்பட்டது. சாதாரண மக்கள் இதனைக் கலைத்தெறிய ஒன்று கூடினர். ஜூலை மாதம் 14 ஆம் திகதி பாஸ்டில் நகரிலுள்ள சிறைச்சாலை உடைக்கப்பட்டதுடன் புரட்சி உக்கிரமடைந்தது. இந்த உள்நாட்டுப் போரானது ஒரு புதிய அரசு ஒன்றை உருவாக்கிய பின்பே முடிவடைந்தது. பிரான்ஸ் மக்களால் கோரப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பவற்றை வழங்க புதிய அரசு உடன்பட்டது. இந்தப் புரட்சியில் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கு அந்த மக்கள் புரிந்த தியாகம் அவர்களுக்கு மட்டுமன்றி உலக மக்கள் அனைவருக்குமே இன்று முன் மாதிரியாய் உள்ளது.

**அபி, பண்ணாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்கள் சம்பளப் பணத்தை வங்கியில் வைப்பிடும் திட்டத்துக்கு எதிர்ப்பு

## இருப்பதும் பறிபோகும் என்கிறார் ம.தொ.மு பொதுச்செயலாளர்

கொழும்பு, ஓக. 25

தோட்டத் தொழிலாளர்களுக்கு வங்கிகளின் ஊடாகச் சம்பளம் வழங்குவதாகக் கூறப்படும் நடைமுறை அமுலுக்குவரும் பட்சத்தில் அவர்கள் சம்பாதிக்கும் கொஞ்ச வருமானமும் சீரழிந்துவிடும் என்று மலையகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தோட்ட நிர்வாகங்களிடம் சம்பளம் பெறும் தொழிலாளர்கள் தாம் சம்பளம் பெற்ற 15ஆவது நிமிடத்திலேயே வீடுகளுக்குப் பாதுகாப்பாகச் சென்றுவிடுவார்கள்.

ஆனால், சம்பளத்தைப் பெறுவதற்காக வங்கிகளுக்கு வரவேண்டிய தொழிலாளர்கள் தமது வேலை நாள்களை இழந்து, வங்கியில் பணம் மீளப் பெறுவதற்கான படிவங்களை நிரப்புவதற்கு தரகர்களுக்குப் பணம் கொடுத்து, எடுக்கும் சம்பளத்தை நகரத்திலேயே வீணாகச் செலவு செய்துவிட்டு, மீதியை கொள்ளையர்களிடம் பறிகொடுத்துவிட்டு வீடுகளுக்குச் செல்லும் போது வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய நிலையே ஏற்படும்.

இப்போது மதுபாவனைக்குத் தமது சம்பளத்தில் அதிகளவான பணத்தைத் தொழிலாளர்கள் செலவிடுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இந்த நிலையில், வங்கியில் வந்து கூட்டாகப் பணத்தை எடுக்கும் தொழிலாளர்கள் நிச்சயமாக தமது சம்பளத்தின் பெரும் பகுதியை வீணடிக்கும் சூழ் நிலையே ஏற்படும்.

அத்தோடு, ஏற்கனவே, வங்கியில் கடன் எடுத்ததால் தொழிலாளர்கள் வங்கிக் கணக்கை உறுதிப்படுத்துவதற்குப் போதிய ஆவணங்கள் இல்லாத தொழிலாளர்கள் அனைவரும் மிகவும் சிரமங்களுக்கு முகங் கொடுக்கும் நிலை ஏற்படும்.

எனவே, தற்போதுள்ள நடைமுறை தொடருவதே நல்லது. இந்த நடைமுறையில் நகரத்துக்கும் தாம் வசிக்கும் தோட்டங்களுக்கும் மிக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய தொழிலாளர்கள் சிரமங்களுக்கே முகம் கொடுப்பார்கள்- என்றார்.(ச)

# தோட்டங்களில் 50 வீதிகளை புனரமைக்க ரூ.50 கோடி நிதி

நுவரெலியா, ஓக.25

வாக்களித்த மக்களுக்கு உரியவகையில் சேவை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க தோட்டப்பகுதிகளிலுள்ள சுமார் 50 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 50 கோடி ரூபா நிதியை ஜனாதிபதி ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

அதற்கமையவே தோட்டப் பகுதிகளுக்கான அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்தார்.

கொட்டகலை மேபீல்ட் தோட்டக் குடியிருப்புக்களுக்கு செல்லும் உள்ளக வீதி ஒன்றுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் தோட்டத்தில் பிறந்தவன் என்பதால் தோட்ட மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவன். காலத்துக்குக் காலம் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் -என்றார். (ச)

# கிழக்கில் இராணுவத்துக்கு புதிய தளபதி நியமனம்

மட்டக்களப்பு, ஓக.25

இராணுவத்தின் கிழக்குப் படைத் தலைமையகத் தளபதியாக மேஜர் ஜெனரல் லால் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். வெலிக்கந்தையில் உள்ள கிழக்குப் படைகளின் தலைமையகத்தில் இவர் கடந்த திங்கட்கிழமை தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, சீன தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் மேற்படிப்பை மேற்கொள்வதற்காகச் செல்லவுள்ளார். இதனை அடுத்தே புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் லால் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பகுதி பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய கடந்த வாரம் வெலிக்கந்தைக்குச் சென்றிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா வீரவாள் ஒன்றைக் கொடுத்து விடைபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# பாதுகாப்புக் கடமையில் படையினருக்குப் பதிலாகப் பொலிஸார்

கொழும்பு, ஓக.25

கல்முனை பிரதேசத்தில் கடமையிலுள்ள இராணுவத்தினரை உடனடியாக அகற்றி பதிலாகப் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கையை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் விஜயகுண வர்த்தன ஏற்றுக் கொண்டார்.

கல்முனைப் பிரதேசத்தில் அண்மையில் நிலவிய மர்ம மனிதர்களின் விவகாரம் தொடர்பாகக் கல்முனை மாநகரசபைக் குட்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழுள்ள விழிப்புணர்வுக் குழு அங்கத்தவர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான கூட்டமொன்று கடந்த திங்கட்கிழமை கல்முனை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே மக்கள் விடுத்த கோரிக்கையைத் தாம் நிறைவேற்றுவார் என அவர் கூறினார். (ச)



மட்டக்களப்பு, செங்கலடியில் சந்தேகத்திற்கிடமான நபரினால் தாக்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவரைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த திங்கட்கிழமை நேரில்சென்று பார்வையிட்டார்.

# பஸ் நிலையம் அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

பொகவந்தலாவை, ஓக.25

தலவாக்கலை நகரில் பஸ் தரிப்பிடம் இன்மையால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தலவாக்கலை நகரம் மக்கள் அதிகளவில் செறிந்து வாழும் பிரதேசமாகும். இதன் வழியாகவே நுவரெலியா, வெலிமடை, பூண்டுலோயா, டயகம, ஹற்றன், நாவலப்பிட்டி போன்ற பிரதான நகரங்களுக்குச் செல்லும் பஸ்கள் பயணிக்கின்றன.

மலைகள் சூழ்ந்த இந்த நகரம் பெரிதும் மழைவீழ்ச்சியைக் கொண்ட பிரதேசமாகும். எனினும், மழைக்காலத்தில் பஸ்தரிப்பிடம் இன்மையால் பிரயாணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே, இங்குள்ள அரசியல்வாதிகள் விரைவில் பஸ் தரிப்பிடத்தை அமைத்துத்தர வேண்டுமென்று பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# மக்களின் அச்சத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய மாகாணசபை உறுப்பினர் கூறுகிறார்

நுவரெலியா, ஓக.25

மலையகத்தில் மர்ம மனிதர்கள் நடமாடுகின்றனர் எனக் கூறப்படும் தகவல்கள் குறித்த உண்மை நிலைவரங்களை உரிய தரப்பினர் நம்பகத்தன்மையுடன் வெளிப்படுத்தி மலையக மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்க வேண்டும் என்று மத்திய மாகாணசபை உறுப்பினர் எம்.உதயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்டப் பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டாக்கும் வகையில் மர்ம மனிதர்கள் விடயம் பூதாகரமாகியுள்ளது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட ஏனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை மேற்கொள்ள முடியாது அல்லல்படுகின்றனர்.

தற்போது இடம்பெறுகின்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் மனநிலைகூட இந்த மர்ம மனிதர்களின் விடயத்தால் பாதிப்புக்கு உள்ளகியுள்ளது.

இவ்வாறான நிலைமையை இல்லாமல் செய்து மலையகத்தில் சுமுகநிலைமையை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பு வாய்ந்த தரப்புக்கள் முன்வரவேண்டும் - என்றார். (ச)

# வற்றிப்போன நிலையில் நீர் நிலைகள்

பலாங்கொடை, ஓக.25

பலாங்கொடைப் பிரதேசத்தில் நிலவுகின்ற வரட்சி மற்றும் காற்று காரணமாக இப்பகுதி ஆறுகள் நீர் வற்றிப்போன நிலையில் காணப்படுகின்றன.

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் பெருமளவு உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்த இந்த ஆறுகளை நாடி இப்போது யாருமே வருவதில்லை எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆறுகளால் நீரைப்பெற்றுக் கொண்ட பல நீர்நிலைகளும், குளங்களும் கூட தற்போது தண்ணீர் இன்றி வரண்டு போய்க் கிடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சமாதான நீதிவான்களாகப் பதவி வகிப்போர் முன்னுதாரண புருஷர்களாக இருக்க வேண்டும்

தெனியாய, ஓக. 25

சமாதான நீதிவான் பதவி வகிப்போர் முன்னுதாரண புருஷர்களாக இருக்கவேண்டும். சமாதான நீதிவான்களுக்கு மிகவும் மதிப்பளிக்கக்கூடிய ஒரு காலம் இருந்தது. இது ஒரு மாண்புறும் பதவி. அந்த மாண்புறும் பதவியை வகிப்பவர் இதனைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக இந்தப் பதவி பொருத்தமற்ற நபர்களுக்கு வழங்கப்பட்டதால் ஏற்பட்ட வீழ்ச்சி பாரதூரமானதாகும் - என ஜனாதிபதியின் நாடாளுமன்றச் செயலாளர் குமாரசிரி ஹெட்டிகே கூறினார்.

மாத்தறை மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் வருடாந்த கூட்டம் அண்மையில் பிடபெத்தர பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று சமூகத்தில் கௌரவப் பதவிகளைப் பெற்ற சிலர் தமது பொறுப்புகளை சரிவரச் செய்கின்றார்களா என்பதில் ஒரு கேள்வி இருக்கின்றது.

எமது நாட்டில் ஒரு லட்சத்து ஆறாயிரம் சமாதான நீதிவான்கள் இருக்கின்றனர். இவர்களுள் தற்போது 23 பேரின் பதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கௌரவப் பதவியைப் பெற்ற ஒவ்வொருவருக்கும் அதற்குப் பெருமை சேர்க்கும் தேவைப்பாடு உள்ளது. பெரும்பாலான சமாதான நீதிவான்கள் சமூகத்துக்கு அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றனர். ஒருபுறத்தில் இவர்கள் கொடுப்பனவு பெறாது கௌரவப் பணியாற்றும் சமூக சேவையாளர்கள்.

பட்டம், பதவிகளை வைத்துக்கொண்டு அவற்றைத் தவறாகக் கையாள்பவர்களும் எம்மைச் சூழ இருக்கவே செய்கின்றனர்.

சிலர் சமூகப் பொறுப்புகளை மறந்து தன்னல விரும்பிகளாக மாறியுள்ளனர். சமாதான நீதிவான்களுக்கும் அதிகாரங்கள் இருந்தன. ஆனால், அவை இன்றில்லை. சமாதான நீதிவான்கள் உண்மையைக் கடைபிடிக்க வேண்டியவர்கள். இல்லாவிடின் அவர்கள் தமது இலச்சினைக்குள் மாத்திரம் வரையறுக்கப்படுவார்கள் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
திறமைக்கு ஏற்ற மதிப்பு, மரியாதை கிடைக்கும் நாள். வழக்கு விவகாரங்களில் சுமூகமான நிலைமை காணப்படும். இரண்டு, மூன்று நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று வரலாம். புதிய நண்பர்களின், அறிமுகம் கிடைக்கும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**இடபம்:**
குடும்ப உறுப்பினர்களைக் குறை சொல்லி, அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றை இன்று செய்ய முடியாமல் போகலாம். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அடுத்த சில நாள்களுக்குப் பின் நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள்.

**மிதுனம்:**
புதிய நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். சொந்த, பந்தங்கள் வழியில் உருவான பிரச்சினை தீர்ந்து, நிம்மதி காண்பீர்கள். சுயதொழில் புரிவோர் வருவாயில் முன்னேற்றம் காணலாம். சக ஊழியர்கள், நண்பர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்:**
தொழில் ரீதியாக எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். வாகனங்கள் வழியில், செலவுகளைச் சந்திக்கலாம். நேர் வழிச் சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். சகோதரர்களிடம் கோபதாபங்கள் வேண்டாம். நீங்கள் செய்த தவறு ஒன்றுக்கு, மற்றவர்களை குறை சொல்லி, சண்டை போடலாம். மாற்று மதத்தினரால் அனுகூலம் உண்டு.

**சிங்கம்:**
தன்னம்பிக்கை, தைரியத்துடன் செயற்பட்டு எடுத்த காரியங்களை முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். உறவினர்கள் சிலர், உங்களைப் பாராட்டிப்பேசி, தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். வரவேண்டிய கடன் மிகுதிகள் எளிதில் வந்து சேரும். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால் சந்தோஷம் அடையலாம்.

**கன்னி:**
அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்து, சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். உங்களின் சந்தோஷத்தை அதிகரிக்கும் வகையிலான செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக குடும்பத்தில் இருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:**
கருணை மனப்பான்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில் விடயங்களில், அதிக நாட்டத்துடன் செயற்படுவீர்கள். கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணிபுரிவோர் வேறு வேலைகள் காரணமாக, திடீர் விடுப்பு எடுக்க நேரிடலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:**
பொறுமை, பக்குவமாக நடந்து கொள்ள வேண்டிய நாள். உடல் உபாதைகளால், மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடப்பது தள்ளிப் போகலாம். கடனாக வாங்கிய பணத்தை, உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். உங்களைப் புரிந்து கொள்ளாமல் சிலர் நடக்கலாம்.

**தனுசு:**
நல்லவர், கெட்டவர் எனப் பார்க்காமல் உதவி செய்யும் நாள். பிள்ளைகள், உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில், அதிக அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய காரியங்களில் இறங்குவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

**மகரம்:**
கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். பிடிவாதமான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். திட்டமிட்ட ஒரு காரியம் நடக்காமல் போனாலும், திட்டமிடாத ஒரு காரியம் இனிதே நடக்கும். கட்டண மிகுதிகளைச் செலுத்தலாம். உறவினர் ஒருவருக்கு, நல்ல ஆலோசனை சொல்வீர்கள்.

**கும்பம்:**
பழமையான விடயங்களில் நாட்டம் செல்லும். கடன் கால பிரச்சினை ஒன்றை நினைத்துக் கவலைப் படுவீர்கள். வியாபாரிகள் எதிர்பார்த்த ஆதாயம் பெற்று மகிழ்ச்சி அடைவர். சிலர் முக்கிய வேலையாக திடீர் வெளியூர் பயணம் செல்லலாம். மற்றவர்கள் பெருமை யாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள்

**மீனம்:**
உறவினர்கள் வருகையால் சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். கடும் வேலைப்பளுவால், மன உளைச்சலைச் சந்திக்கலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி, பாசம் அதிரிக்கும். அதிக ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், ஏதுவும் கிடைக்காமல் போகலாம். உங்களின் வேலை ஒன்று, மற்றவர்களால் தடைப்படலாம். வெறுப்பு உண்டாகும்.

# இலங்கை அரசு தப்பிக்க ஒரே வழி அதிகாரப் பகிர்வே

இலங்கை அரசு தன் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொள்ளாதவிடத்து அனைத்துலக விசாரணைக்கான ஆதரவு என்பது மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என அவதானிப்பாளர்கள் கருதுகிறார்கள் என்று கூறும் கட்டுரையாளர் அமந்த பெரேரா, ஐ.பி.எஸ். இணையத் தளத்தில் எழுதியுள்ள தனது கட்டுரையில் குற்றச்சாட்டுக்களிலும் விசாரணைகளிலும் இருந்து தப்பவேண்டுமானால் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதே இலங்கைக்கு இருக்கும் ஒரே வழி என்று தெரிவித்திருக்கிறார். ஆங்கிலத்தில் வெளியாகிய அந்தக் கட்டுரையில் தமிழ் மொழியாக்கம் இது.

**இரா. புத்திரசிகாமணி**

2009 இல் இலங்கை இராணுவத்தால் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசு முகங்கொடுக்க வேண்டும் என்று அனைத்துலக நாடுகள் அழுத்தம் கொடுக்கின்றன. ஆனால், இதுவரை இலங்கை அரசு செவிசாய்க்க வில்லை.

அனைத்துலக நாடுகளின் கோரிக்கை தொடர்பில் அரசு தொடர்ந்து அமைதி காத்து வந்தாலும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரின் போது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்படலாம்.

### சிக்கலில் இலங்கை அரசு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் (United Nations Human Rights Council - UNHRC) பதிலளிப்பதற்கு முன்னர், ஜனாதிபதி ஏற்கனவே நியமித்த நல்லிணக்கத்துக்காகக் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையைத் தம்மிடம் சமர்ப்பிக்கும்படி அமெரிக்கா மூலமாக ஐ.நா. மனித உரிமைகள் சபை கேட்டிருந்தது. இலங்கை அரசு அதற்கும் இன்னும் பதிலளிக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் உள்விவகாரங்களைக் கலந்துரையாடுவதென்பது ஆபத்தானது என இந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

ஆனால், ''அனைத்துலக விதிமுறைகளுக்கு ஏற்ப இலங்கையர்கள் தாமாகவே போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்வார்கள் என நாம் எதிர்பார்த்திருந்தோம். இவ்வாறானதொரு விசாரணையை மிகத் துரிதமாக மேற்கொள்ளுமாறு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்திருந்தோம். ஆனால் இதுவரை எதுவும் நடைபெறவில்லை. இப்படியே சென்றால் அனைத்துலக விசாரணையை நடத்த வேண்டும் என்ற அழுத்தம் அதிகரிக்கும்'' என ஆகஸ்ட் 09ஆம் நாள் வோஷிங்ரனில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

இலங்கை அரசு தொடர்ந்தும் போர்க் குற்ற விசாரணையை மறுத்து வருவதாலேயே இலங்கை விரும்பாத அல்லது அதனால் மறுக்கப்படுகின்ற அனைத்துலக நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கின்றன என்பதை நூலண்ட் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

### 2009 சூழல் இப்போதில்லை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இக்கட்டான சூழலை எதிர் நோக்குவது இது முதற்தடவையல்ல. மே 2009 இல் போர் நிறைவுக்கு வந்தபோது, ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேண்டும் என்று வலியுறுத்தும் பிரேரணை ஒன்று ஐ.நாவில் கொண்டு வரப்பட்டது. அப்போதே அனைத்துலக விசாரணை ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அரசைத் தள்ளியிருக்க முடியும்; ஆனால் இந்தியா, சீனா, ரஷ்யா மற்றும் பிற மூன்றாம் உலக நாடுகள் அப்போது இலங்கைக்கு ஆதரவாக இருந்தன.

இப்போது நிலைமை அப்படியில்லை. 2009 இன் பின்னர் பூகோள மற்றும் பிராந்தியப் போக்குகள் மாறத் தொடங்கின. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கைக்குப் பாதகமாக அமைந்தது. உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட போர் விதிமுறைகளுக்கு அப்பாலான தாக்குதல்களில் பல பத்தாயிரங்களுக்கும் மேல் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறியது. ஆனால் கொழும்பு அரசோ இந்த அறிக்கையானது போலியானது, ஆதாரமற்றது எனக் கூறி அதனை ஏற்க மறுத்தது.

### அழுத்தம் அதிகரிப்பு

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசின் செயல்திறன் போதாது என்று அமெரிக்கா

இந்தப் பிரச்சினையானது இவ்வளவு
நான் ஒருபோதும் நினைக்கவில்லை எ
தளமாகக் கொண்டியங்கும் தேசிய ச
ஜெகான் பெரேரா, இலங்கை அரசு த
குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் தட்
விசாரணைக்கான அழுத்தமும் அதிக

அண்மையில் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து அதிபர் ராஜபக்ஷ ஓகஸ்ட் இரண்டாம் வாரத்தில் சீனாவுக்குப் பயணமானார். ஜெனிவாவில் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரிலும் சீனாவின் ஆதரவு இலங்கைக்கு முழு அளவில் கிடைக்குமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே மஹிந்த சீனா சென்றார். சீன ஜனாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதி கூ ஜின்ராவோ மற்றும் சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ ஆகியோரைத் தனது பயணத்தின் போது மஹிந்த சந்தித்துப் பேசியிருந்தார்.

மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையின் அயல் நாடான இந்தியாவின் ஆதரவைப் பெறுவது இலங்கைக்கு மிக அவசியமானது. ஆனால் அது கிடைக்கும் போல் தெரியவில்லை. போர் நடைபெற்ற காலப்பகுதியில் இந்தியா தனது முழு ஆதரவையும் இலங்கைக்கு வழங்கியிருந்தது. இப்போதோ, அனைத்துலக விசாரணை வேண்டும் என்று அழுத்தம் கொடுப்போருடன் இந்தியாவும் சேர்ந்துவிட்டது.

பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சியின் 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப் படமானது கடந்த ஜூனில் வெளியானது. தமிழ் மக்கள் நிர்வாணமாக்கப்பட்டு கொலை செய்யப் படும் காட்சிகளும், இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சித்திரவதைகள், போர்க் குற்றங்கள் நிகழும் காட்சிகளும் அதில் இடம்பெற்றிருந்தன. அவற்றைப் பார்த்த பின்னரே இலங்கை அரசுக்கு எதிரான அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை அரசு தன் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அனைத்துலக விசாரணைக்கான ஆதரவு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என அவதானிப்பாளர்கள் கருதுகிறார்கள்.

''இந்தப் பிரச்சினையானது இவ்வளவு பெரிதாக வளர்ந்து செல்லும் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை'' எனக் கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார். இலங்கை அரசு தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் தட்டிக்கழிக்குமாயின், அனைத்துலக விசாரணைக்கான அழுத்தமும் அதிகரித்தே செல்லும் என்கிறார் பெரேரா.

**...வ்வளவு பெரிதாக வளர்ந்து செல்லும் என**
**...யில்லை எனத் தெரிவிக்கும் கொழும்பைத்**
**...தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த**
**... அரசு தன் மீது சுமத்தப்பட்டுள்ள**
**...ந்தும் தட்டிக்கழிக்குமாயின், அனைத்துலக**
**...ம் அதிகரித்தே செல்லும் என்கிறார்**

### வெள்ளை அறிக்கையால் பயனில்லை

அண்மையில், இலங்கை அரசு தன் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, வெள்ளை அறிக்கை மற்றும் ஆவணப்படம் என்பவற்றை வெளியிட்டிருந்தது. அவற்றில், பொதுமக்கள் இழப்பு ஏதுமின்றி ஒரு போரை நடத்துவது சாத்தியமற்றது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வெள்ளை அறிக்கை ''அனைத்துலக விமர்சனங்களுக்கான பதில் என்றோ அல்லது போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான இறுதிப் பதிலாக இது அமைந்துள்ளது என்றோ அரசு குறிப்பிடவில்லை'' என்று கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் மாற்றுக் கொள்கை மையத்தின் நிறைவேற்று இயக்குனரான பாக்கியசோதி சரவணமுத்து கூறுகின்றார்.

''எந்தவொரு அரசும் தனது சொந்த நாட்டில் அரசியல் ரீதியான ஆதரவைத் தொலைக்கக்கூடிய இவ்வாறான விசாரணையை மேற்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது'' என்றும் பாக்கிய சோதி சரவணமுத்து குறிப்பிடுகிறார்.

''உண்மையில் இலங்கை அரசு மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. போர் தொடர்பில் இனி வெளிப்படுத்துவதற்கு அதனிடம் எதுவுமில்லை. எனவே போர்க் குற்றங்கள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசுக்கு மேலும் அழுத்தங்கள் வழங்கப் படவேண்டும்'' என்று சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பைச் சேர்ந்த றுக்கி பெர்ணாண்டோ தெரிவித்தார்.

### தப்புவதற்குத் தீர்வே வழி

தமிழ் மக்களை அதிகம் கொண்டுள்ள இந்தியா இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குப் போதியளவு அதிகாரப் பகிர்வு வழங்கப் படவேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றது.

பொலிஸ் அதிகாரங்கள் போன்ற குறைந்தளவிலான சில அதிகாரங்களையாவது முதலில் வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா தெரிவிக்கிறார். ''இலங்கை அரசு அதிகாரப் பகிர்வை மேற்கொண்டால் அனைத்துலக விமர்சனங்களிலிருந்து தப்பிக் கொள்ளமுடியும். அதிகாரப் பகிர்வு என்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும். இது வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எந்தவொரு விமர்சனங்களும் எழ வாய்ப்பில்லை'' என்று தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த பெரேராவும் கூறுகிறார்.

# ஆழ்வாரா? ஆண்டவரா?



பகவானைக் காட்டிலும் பாகவதன் பெரியவன். அவனை வணங்கும் பரம பாக வதன் அவனிலும் மேலானவன் என்று அடியார்க்கு அடியாரைக் கொண்டாடிய வர்கள் நம் முன்னோர்.

நம்மாழ்வார் தம்முடைய பாசுரத்தில் பெருமானைப் பார்த்து ஒரு கேள்வி கேட் டார். ''உன் திருமுகத்து ஒளிதான் மணி மகுடத்தில் வீசுகிறதா? என்ற பொருளில் ''முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ? அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?'' என்று பாடினார்.

பொதுவாக இறைவனைப் பாடும்போது பாதாதிகேசம் என்று திருவடி முதல் திருமுடி வரை பாடுவது மரபு. இங்கே நேர்மாறாகத் 'திருமுடி என்று தலையில் இருந்து பாதம் வரை ஆழ்வார் பாடியிருக் கிறாரே... நியாயமா? என்ற கேள்வி பிறந்தது. உரையாசிரியர் ஒரு வர் இதற்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கிறார். திருவடியில் இருந்து பாடத்தான் ஆழ்வார் தவம் இருந்தார். ஆனால் தவத்தில் இருந்து கண்ணைத் திறந்ததும் அவர் கண்ணில் பட்டது பகவானின் திருமுடி. வைரக் கிரீடம்... அதுவும் ஆழ்வார் பாதத்தருகே தெரிந்தது. இத்தனை உத்தம பக்தன் வேறெங்கே உண்டு' என்று பகவான் ஆழ்வார் திருவடியில் திருமுடி வைத்து வணங்கியதால் முதலில் தெரிந்த திருமுடியில் இருந்தே பாடத்தொடங்கினார்.

இப்படி இறைவன் புகழைப் பாடிய ஆழ்வார் புகழ், நகரின் பெயரையும் மாற்றி-குருகூர் என்ற பழைய பெயரை ஆழ்வார் திரு நகரி என்ற புதுப்பெயர் ஆக்கிவிட்டது. நாரை, கோழி, குருக்கத்தி ஆகிய பறவைகளைக் குறிக்கும் பெயர் குருகு. அத்தகு பட்சிகள் மிக்க ஊர் குருகூர். அவ்வூரில் காரியார் என்ற் சிற்றரசருக்கும், உடைய நங்கைக்கும் திருமகனாய்த் தோன்றியவர் சடகோபர். 'குருகூர்ச்சடகோபன் ' என்றே அவரை அழைத்துக்கொள்வார்.

அவர் காலத்துக்குப்பின், பறவைகள் புகழால் அமைந்த குருகூர் என்ற பெயர் மறைந்து ஆழ்வார் திருநகரி என்று ஆழ்வார் பெயரால் அழைக்கப்பட்டது. அது மட்டுமா! திருமாலை வணங்கி அவன் பெருமையில் ஆழங்கால் பட்ட பதினொரு ஆழ்வார்களுக்கு நிகராக, நம்மாழ்வாரைப் புகழ்ந்து அவரையே கடவுளாகப் பாடிய மதுரகவியாழ்வாரும் ஆழ்வார் எனப்பட்டார் என்றால் நம்மாழ்வார் புகழுக்கு எல்லையேது!

சிற்றரசர் மரபில் தோன்றிய சடகோபர் (நம்மாழ்வார்) குழந்தைப் பருவத்திலேயே வேறுபட்டு விளங்கினார். அழுதல், மகிழ்தல், ஆடல், அமுதுக்கு ஏங்கி அழைத்தல் என்கிற உலகக் குழந்தைகள் செயற்பாடு இன்றி அமைதியாக இருந்தார். பெற்றோருக்குப் பெருவியப்பு... அந்த ஊர்ப் பெருமானாகிய ஆதிநாதர் ஆலயத்துக்கு குழந்தையைக் கொண்டு சென்றனர். அங்கு ஓர் அதிசயம் நடந்தது.

அங்கிருந்த புளிய மரத்தின் பொந்தை நோக்கிப் பிள்ளை தவிழ்ந்து போய் உள்ளே புகுந்து உரிமையாக உட்கார்ந்து கொண்டது. உணவு, உறக்கம், என்கிற உலக மாயை அந்தக் குழவியைத் தீண்டவே இல்லை. பிள்ளைப் பருவத்திலேயே 'சடம்' என்கிற உலக மாயையைக் கோபித்த காரணத்தால் சடகோபராக உலகம் அவரை மதிக்கத் தொடங்கியது. எந்தக் குறையும் இன்றி, பதினாறு ஆண்டுகள் வளர்ந்த பருவத்தினராய்ச் சடகோபர் புளிய மரத்தடியில் தவம் புரிந்தார்.

ஒரு குரு வேண்டும் என்ற ஏக்கத்துடன் வடநாட்டுக்கு யாத்திரை சென்றிருந்த மதுரகவி என்கின்ற அந்தணர், தென்திசையில் தெரிந்த ஒளிக்கீற்றைக் கண்டு தேடிக் குருகூர் வந்தடைந்தார். மோனத்தில் இருந்த நம்மாழ்வாரைக் கண்டு வணங்கினார். அறிவு அவருள் ஐயத்தை எழுப்பியது. சோதித்துப் பார்த்து முடிவுக்கு வர நினைத்து, ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைக் தின்று எங்கே கிடக்கும்?'' என்றார். சடகோபர் விழி திறந்தார். அப்போதே மதுரகவியின் விழியையும் திறந்து வைத்தார். ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று பதில் வந்தது. செத்தது ஜடமாகிய உலகு; அதன் வயிற்றில் பிறக்கும் உயிர் சிறியது. அது என்ன செய்கிறது? உலகில் வளரும் பொருள்களை உண்டு அங்கேயே கிடக்கிறது என்ற பொரு ளில், 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்றார் நம் மாழ்வார். வடக்கே புத்தரால் புகழ்பெற்ற போதி மரத்தடி போலவே தெற்கே ஆழ்வாரால் புகழ்பெற்றது அந்தப் புளிய மரத்தடி... திருப்புளி ஆழ் வான் என்று மரமும் உயர்திணையாக உயர்வு பெற்றது.

வேதம் தமிழ் செய்த வித்தகர், வகுள பூஷண பாஸ்கரர், உலகுய்யத் தோற்றிய குருநாதர் என்று புகழப்பெறும் நம்மாழ்வார், திருவாய் மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய திவ்விய பிரபந்தங்களை அருளி உலகை வாழ்வித்தார்.

பல்வேறு திருமால் கோயில்களில் நம்மாழ்வார் சிலை வடிவிலும் செப்புத் திருமேனியிலும் காட்சி கொடுக்கிறார் என்றாலும் அங் கெல்லாம் இரு கை கூப்பி வணங்கிய நிலையில் இருப்பார். ஞானம் உபதேசிக்கும் முத்திரையோடு விளங்குகிறார் என்பது கூர்ந்து நோக்கி இன்புற வேண்டியவிடயம். வைணவம் வாழத் தோன் றிய மணவாள மாமுனிகள் அவதாரத்தலம் ஆழ்வார் திருநகரி என் பது தலத்தின் இன்னொரு பெருமை. இந்தக் குருகூர் வீதிகளில் எச்சிலை உண்டு வாழ்ந்த நாய் ஒன்று மோட்சம் போனதாக ஒரு கதை உண்டு. பெருமாளைப் போன்றே நம்மாழ்வாரும் வரம் தருவார் என்பது இதன் மூலம் புரிகிறது.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பத் வங்கியின் யாழ்.கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்று கிளை முகாமையாளர் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட வங்கிக் கிளை முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் (ம–7)

# மக்கள் வாழ்வில் பயன்தரும் கருத்துகளை எழுத்தாளர்கள் நூல்களில் புகுத்த வேண்டும்

## பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய

நூல்களை எழுதும் போது ஒவ்வொரு எழுத்தாளனும் மக்களுக்குப் பொருந்தக்கூடிய கருத்துக்களையும் அன்றாட வாழ்வில் பயன்தரக் கூடிய நற்கருத்துக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆன்மிகக் கருத்துக்கள், ஆன் மிகச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தக் கூடியதாக நூல்கள் அமையப்பெற வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் சின்மயமிஷனைச் சேர்ந்த பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

யாழ்.மாநகரசபையின் சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நல்லைகுமரன் மலர் வெளியீடும், யாழ்.விருதுவழங்கும் நிகழ்வும், யாழ்.நாவலர் மண்டபத்தில், குழுத்தலைவர் மு.செ.சரவணபவ தலைமையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

கடந்த 30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் மீண்டும் யாழ். மண்ணில் கலை, கலாசாரம், பண்பாடு என்பன வேர்விட்டு வளரத் தொடங்கியுள்ளன.

அந்த ஒழுக்கங்களை ஒவ்வொரு மனிதனும் தனக்குரியது, தன்னுடையது என்று பாதுகாக்க வேண்டும்.

ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும், ஆன்மிகம் என்பது ஒரு மனிதனைப் பூரணப்படுத்தக் கூடியது. ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள ஆலய உற்சவங்களில் அந்த ஆலயத்தின் வரலாறு அந்தப் பிரதேசத்தில் உள்ள இளம் எழுத்தாளர்களின் எழுத்தின் துன்மையைக் காட்டும் திறமையாக நூல்கள் வரவேண்டும்.

அந்த நூல்களில் இறைவனின் புகழ்பாடும் கவிதைகள், அறச் சொற்கள், ஆலய வரலாறு, பிரதேசத்தின் வரலாறுகள் என்பன அமையப் பெற வேண்டும்.

அதன் போதே அப்பிரதேசத்தில் உள்ள இளம் எழுத்தாளர்களை அறியமுடியும், அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமையும் எனத் தெரிவித்தார். (ம-311)

# மின்னிணைப்பு பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஓக.25

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் இரண்டாவது தடவையாக வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தக் கற்கைநெறியில் ஆர்வமுடையவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

ஆர்வமுடையவர்களைகரைப்பிரான் பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்குசுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி,ஓக.25

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் மீசாலை கமநல சேவை நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் மு.சிவகுரு தலைமையில் நடைபெற்றது.

. இந்தக் கூட்டத்துக்கு யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சி.சிவகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி மாலினி தங்கராஜா, விவசாய போதனாசிரியர் சு.விஜயகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-மார்க்கண்டு மகேந்திரம்,உபதலைவர்-சந்திர சேகரம் கல்பனா,செயலாளர் - பசுபதி ஸ்ரீகாந்தன், உதவிச் செயலாளர் - முத்துகுமார் சிவகுரு, பொருளாளர் - ரவீந்திரன் தர்சினி, உறுப்பினர்கள் - கயிலாயபிள்ளை வர்ணதாஸ், கனகசிங்கம் பரமேஸ்வரி, பொன்னுத்துரை சண்முகசுந்தரம், மாணிக்கம் நவரத்தினம்.

(ம-207)

# நாகர்கோவிலில் 1,020 பணியாளர்கள் மிதிவெடிகள் அகற்றும் துரித பணியில்

## ஹலோட்றஸ்ட்டின் இலங்கைக்கான முகாமையாளர் அடம்ஜசின்ஸ்கி

நாகர்கோவில் பிரதேசத்தில் மக்களை விரைவில் மீள்குடியமர்த்துவதற்கு துரிதகதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்காக 1020 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் தற்போது களப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் ஹாலோறஸ்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் அடம்ஜசின்ஸ்கி

ஒரு லட்சம் மிதிவெடிகளை நாகர்கோவில் பிரதேசத்தில் மீட்டெடுத்ததை முன்னிட்டு பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

போரின்போது பாதிப்படைந்துள்ள பிரதேசங்களில் பொது மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் ஹலோறஸ்ட் நிறுவனத்தின் பங்களிப்பு அதிகம்.

தற்போது நாகர் கோயில் பிரதேசத்தில் 250 குடும்பங்களை மீளக் குடியம்ர்த்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதால் பணியாளர்கள் துரிதகதியில் இந்தப் பிரதேசத்தில் மிதிவெடிகளை அகற்றி வருகின்றனர்.

அதனை விட கடலோரப் பிரதேசமான கிளாலியிலும் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன. இதன் மூலம் கடல் தொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

கடந்த9வருடமாக வயல் நிலங்கள், குடிமனைப் பிரதேசங்கள், தோட்டக்காணிகள் ஆகியவற்றில் மிதிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்றன.

எனினும் தற்போது மீள் குடியமர்த்தப்படும் பிரதேசங்களில் மிதி வெடிகள் அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசங்களில் 1020இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் சேவையில் உள்ளனர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இரத்திரனியல் முறை மூலம் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை ஹாலோறஸ்ட் நிறுவனம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.- என்றார்.

(ம-313)

# கூட்டுறவுத்துறையில் அங்கத்தவரை இணைக்க வடபகுதிச் சங்கங்கள் அக்கறை காட்டவில்லை

## யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஓக .25

கூட்டுறவுத்துறையில் அதிகளவான புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கு வடபகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அதிகளவான ஈடுபாடுகள் காட்டவில்லை.

தென் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் அளவு வடபகுதியில் இல்லை. இந்தச் செய்தி வருந்தத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கூட்டுறவு சபைச் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவுத் துறையில் அதிகளவான புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அனைத்துச் சங்கங்களுக்கும் சுற்றறிக்கைகள் விடுத்தும், விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டும் பல கருத்தரங்குகள் வைக்கப் பட்டிருந்தன.

தென்பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன.

கிராமிய மட்டங்களில் கூட அதிகளவான அங்கத்தவர்களைத் திரட்டியுள்ளனர்.

வடபகுதியில் உள்ள சங்கங்களுக்கும் பல சுற்றறிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் இதுவரை எந்த விதமான வெற்றியும் அளிக்கவில்லை.

இளம் சமூகத்தினரை கூட்டுறவின் பால் இணைக்க வேண்டும். இப்போதும் மனிதவலு [illegible] முற்படுகின்றோம்.

கடந்த காலங்களில் கூட்டுறவு இயக்கத்தில் சிறந்த மாவட்டமாக யாழ். மாவட்டம் இருந்துள்ளது. மக்களுக்கும் கூட்டுறவு இயக்கத்துக்கும் நெருக்க மான உறவு இருந்தது.

தற்போது கூட்டுறவுக்கும் மக்களுக்குமிடையே இடைவெளி காணப்படுகிறது. இந்த இடைவெளியை ஈடுசெய்யும் பொருட்டே அங்கத்தவர்களை இணைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்- என்றார். (ம-311)

# பிராந்திய ரீதியாக ஐக்கிய தீபம்

யாழ்ப்பாணம்,ஓக.25

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பத்திரிகையான ஐக்கிய தீபத்தின் மாதாந்த வெளியீடுகளை பிராந்தியரீதியாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த இதழ் நீர்வேலி பல நோ.கூ.சங்கத்தில் வெளியிடப்படவுள்ளது.

சிலகாலம் வெளிவராதிருந்த ஐக்கியதீபம் கூட்டுறவுப் பத்திரிகை தற்போது வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமல்தான் செய்கிறார்களா?

## கீரிமலையின் பிரதான மடங்கள் அழிக்கப்பட்டு வரும் அவலம்

கீரிமலை இந்துக்களுக்கு ஒரு புனிதஸ்தலம். இந்தியாவில் காசி, இராமேஸ்வரம் போல் இலங்கை வாழ் இந்துக்களுக்கு ஒரு புண்ணியத் தலமாக விளங்குவது கீரிமலை.

கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடுபவர்கள் மற்றும் பிதிர்க் கடன் செய்பவர்கள் நீராடிய பின் இளைப் பாறிச் செல்வதற்காக நமது மூதாதையர்கள் கீரிமலையில் பல மடங்களைக் கட்டினார்கள்.

### மடங்களும் மக்களும்

கீரிமலைக்கு வருபவர்களும் இந்த மடங்களில் தங்கியிருந்து நீராடி இளைப்பாறிச் சென்றார்கள். சிலர் தமது வயோதிப காலத்தை கீரிமலையில் கழிக்கும் நோக்குடன் மடங்களில் தங்கியிருந்திருக்கிறார்கள்.

இன்றும் சிலர் மருத்துவர்களின் அறிவுரைக் கிணங்க பெரும்பாலும் தொய்வு மற்றும் சரும வியாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் கீரிமலை மடங்களில் தங்கியிருந்து கடலில் நீராடி கடற்காற்றைச் சுவாசித்து நோய் நீங்கிச் செல்கின்றார்கள்.

வழிப் போக்கர்கள் இந்த மடங்களில் இளைப்பாறி ஓய்வெடுத்துச் சென்ற கடந்த காலம் என்று ஒன்று உண்டு.

குறிப்பாக கிடுகுவண்டில்காரர்கள் வடமராட்சியில் இருந்து வருவார்கள். கீரிமலைக்கு அவர்கள் வந்து சேர இருட்டிவிடும். மாடுகளை அவிழ்த்துக் கட்டி வைக்கோலைப் போட்டு விட்டு உறங்கி விடுவர். மறுநாள் காலையில் எழுந்து மாடு களுக்கு நீர் பருகக் கொடுத்து விட்டு பயணத்தைத் தொடர்வர்.

ஆடி அமாவாசை, சிவராத்திரி போன்ற தினங்களில் யாத்திரிகர்கள் மடங்களில் தங்கியிருந்து நித்திரை விழித்து மறுநாள் காலையில் தீர்த்தமாடிச் செல்வர்.

இவையெல்லாம் யாழ்ப்பாணத்தின் வசந்த காலங் களில் நிகழ்ந்தவை. கீரிமலை என்று இராணுவ ஆக் கிரமிப்புக்குள் சென்றதோ அன்றுடன் எல்லாமும் முடி வுக்கு வந்துவிட்டன.

### அரசியலும் நடத்திய மடங்கள்

அரசியல், வரலாற்று ரீதியிலும் கீரிமலையிலிருந்த மடங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. 1927 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் அங்குரார்ப்பண மாநாடு கீரிமலையிலிருந்த வைத்திலிங்கம் மடத்தில்தான் மூன்று நாள் நடைபெற்றது.

இவ்வாறு மக்களுக்குச் சேவை யாற்றி வந்த மடங்கள் தற்போது இடிக்கப்பட்டு வருகின்றன. வைத்திலிங்கம் மடம் பாரம் தூக்கி மூலம் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டு விட்டது.

நகுலேஸ்வரன் ஆலயத்தை இந்த மடங்கள் மறைத்து நிற்பதால் அவை இடித்து அழிக்கப்படுகின்றன என்று ஒரு கதை கூறப் படுகின்றது.

மடங்களைஇடிப்பதற்கு ஆலயக் குருக்களிடம் இருந்து எதிர்ப்பு ஏதும் வரவில்லை என்பதால் கூறப் படும் கதையாகக் கூட இது இருக்கலாம்.

இவ்வாறு மடங்களை இடித்துத் தரைமட்ட மாக்குவதன் மூலம், மடங்களை இடிப்பவர்கள் அடையப் போகும் நன்மை என்ன?

மடங்களைக் கட்டியவர்கள் அந்தச் செய்கை மூலம் புண்ணியம் தேடிக் கொண்டார்கள். மடங்களை இடிப்பது பாவமா புண்ணியமா என்பதை மதப் பெரியார்கள் அல்லது ஆதீனங்கள் தான் கூற வேண்டும். ஆனால் வரலாற்றுப் புகழ் மிக்க அல்லது வரலாற்று முக்கியத்துவம் மிக்க கட்டடங்களை ஏன் இடிக்க வேண்டும்?

இந்த வருடம் ஆடி அமாவாசையன்று கீரிமலையில் பிதிர்க் கடன் செய்தவர்கள் கடன் செய்த பின் இளைப்பாற இடமின்றி அல்லற்பட்டதையும் எனது இரு கண்களாலும் கண்டேன்.

**ந.பரமேஸ்வரன்**

அறியாமல் செய்யும் பிழைகளை இறைவன் மன்னிப்பார் என்று இந்து மதம் கூறுகிறது. மடங்களை இடிப்பவர்களும் அதனை இடிக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கும் குருமார்களும் அறியாமல்தான் செய்கிறார்கள். ✱

## சமூக நிகழ்வுகளில் நோய்கள் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கி உதவுங்கள்

இன்று எமது சமூகத்தில் இதயநோய், உயர்குருதிய முக்கம், சலரோகம், காசநோய், புற்றுநோய், மனநோய் போன்ற பல நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். மேலும் இது போன்ற நோய்களின் பிடியில் மக்கள் சிக்காதிருப்பதற்கும் இனிவரும் சமுதாயம் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கும் மக்களிடையே அறிவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் நல்லூர் ஆலயச் சூழலில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்படுகின்றது.

இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சுகாதார விழிப்புணர்வுப் புத்தகங்கள், இறுவட்டுக்கள் போன்றவற்றை எமது சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகளான சமய சமூக நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள், கல்வி நிறுவனங்களின் நிகழ்வுகள், பிறந்ததின விழாக்கள், கூட்டுறவு சமாசங்களின் நிகழ்வுகள், அரச, தனியார் நிறுவனங்களின் நிகழ்வுகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் இறந்தவர்களின் சிரார்த்த நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளில் வழங்குவதன் மூலம் மாபெரும் விழிப்புணர்வை எமது சமுகத்தில் ஏற்படுத்த முடியும்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு வெளியிட்டுள்ள இறுவட்டுக்கள், புத்தகங்கள் போன்றவற்றைத் தற்போது நல்லூர் வடக்கு வீதியில் நிகழும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வில் பெற்றுக் கொள்ள முடியும்.தற்போது

1. ஆரோக்கிய உணவு
2. நீரிழிவுக்கு ஒரு சவால்
3. நித்திய சுகத்தை நோக்கி
4. உயர் குருதி அமுக்கம், இறுவட்டு
5. சலரோகம் இறுவட்டு
6. நுளம்புடன் ஒரு குருஷேத்திரம் இறுவட்டு
7. நீரிழிவை வெற்றி கொள்வோம் இறுவட்டு
8. ஆரோக்கியமாக வாழ்ந்திட இறுவட்டு (2011)

ஆகிய விழிப்புணர்வு ஆவணங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

நீரிழிவு சிகிச்சைப் பிரிவு
யாழ்.போதனா
வைத்தியசாலை

ஊடக அனுசரனை - உதயன்


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

# கந்தையா குழந்தைவடிவேல்

(பலுகாடு, காரைநகர்)



தோற்றம்: 21.03.1929 மறைவு: 30.07.2011

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்தோடு சேர்ந்த அன்புள்ள எம் மைத்துனரே

பார்போற்றும் பலுகாடு காரைநகரில் பிறந்து
வாரிக்குட்டியூர் வவுனியாவில் வாழ்ந்து
பல்லோர் போற்றும் புகழை ஈட்டி
பாரினில் வாழ்ந்த அன்புள்ள மைத்துனரே!
உம் பிரிவு தாங்காது உருகி அழுகின்றோம்.

சின்னஞ்சிறு வயது முதல் சீர்பல செய்தவரே!
என்னையும் படிக்க வைத்து ஏற்றமுற பட்டதாரியாக
எழில் கொண்ட மக்கள் வங்கியில்
மாண்புகு பதவி வகிக்க வழிவகை செய்தவரே!

தாய்போன்று துணையிருந்தீர்!
தந்தைபோன்று வழி சமைத்தீர்!
குடும்பத்தின் குல விளக்கே!
எம் குடும்பத்தின் மூத்த மருமகனே!

முன்நின்று காரியங்கள் முடிக்க வல்லவரே!
இன்றும்தான் உம் சேவைகளை நினைக்கின்றோம்
வாரிக் குட்டியூரினிலே வாழும் வேளையிலே
ஆலயங்கள் கட்டுவித்தீர் அளப்பரிய சேவை செய்தீர்

நின்பிரிவாலே பெருமூச்சு விடுகின்றோம்
வந்துகூடும் மக்களுக்கு வாழ்ந்த கதை
சொல்லுகின்றோம்
அன்பர்கள் எத்தனை? உறவுகள் எத்தனை?
நண்பர்கள் எத்தனை? நானிலமே அழுகுதையா?
நடுத்தெரு வீடு இப்போ நாயகனைக் காணாது
தன்னந்தனியாக தனித்தோ நிற்குதையா!

மக்களுக்குச் சேவை செய்த மகாத்மாவே எங்குற்றீர்!
அன்புள்ள மைத்துனரே மனமுருக அழுகின்றோம்
சொற்பனத்தில் தோன்றி நீரும்
காட்சி கொடுப்பீரோ! பதறும் எமைக் கண்டு
நீர் ஆறுதல் கூறுவீரோ!

தங்களின் ஆத்மா சாந்தியடைய காரைநகர்
ஈழத்துச் சிதம்பரேஸ்வர செளந்தராம்பிகை
திருவடிகளை இறைஞ்சுகிறோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இரங்கி உருகிப் பிரார்த்திப்பவர்,
செல்வி சரஸ்வதி நாகலிங்கம் (மைத்துனி)
(இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர்)
சரஸ்வதி பவனம்,பண்டித்தாழ்வு, காரைநகர்.

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியை இன்று (25.08.2011) வியாழக்கிழமை கந்தசாமிநகர் கல்லாற்றில் இடம்பெறும்.

எதிர்வரும் (29.08.2011)திங்கட்கிழமை 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் 203A, 3ஆம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியாவில் அவரது மகனது இல்லத்தில் நடைபெறும். மேற்படி வீட்டுக் கிருத்தியத்தில் பங்குபற்றி அன்றைய தினம் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கு.சிவஞானம் (மனைவி), கு.ஆறுமுகசாமி (மகன்),
பழையகண்டி, காரைநகர்.

கு.செல்வச்சாமி (மகன்)
203A, 3ஆம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.

(7214)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறவாத
# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 . 07 . 1944

மறைவு
03 . 09 . 2002



## அமரர் கிருஷ்ணபிள்ளை கணேசமூர்த்தி
(ஓடி கணேசு)

**(வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி)**

அன்பான அப்பாவே! எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்...... எண்ணும் போதெல்லாம்
கண்களில் நீர் ததும்ப கனலும் சோகமும்
என்றும் தணியாது அப்பா.... ஊரில் உள்ள கண்கெட்ட
அயல் கொடிய துரோகிகள் உங்களை
மனங்கொண்டு அழித்தனரோ மீளாத்துயரில் மீளமுடியாமல்
தவிக்கின்றோம்- நாம் இங்கே
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து வருவீரோ அப்பா.......

என்றும் அழியா நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கனடா.

(7076) (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் காலத்துக்கு முற்பட்ட பழைமைமிகு சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம்



யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து சிறுப்பிட்டி மத்தியை நோக்கி மேற்குப் புறமாகச் செல்லும் ஒழுங்கையில் 400 மீற்றர் தூரத்தில் மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. சிறுப்பிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என நான்கு திசைகளுக்கு மத்தியில் அமைந்து அருளாட்சி செய்யும் அம்பாள் ஊருக்கு வடக்கில் அமைந்திருப்பது மட்டுமல்ல புத்தூர் உள்ளடங்கலாக சிறுப்பிட்டியில் சகல உபகிராமங்களிலும் வாழும் மக்களால் வழிபடுவதோடு எல்லோரும் எங்களது ஆலயம் என உரிமை கொண்டாடப்படுகின்றது. அத்துடன் உற்சவங்கள், உபயங்களும் இடம் பெறுகின்றன.

ஆலயத்தின் அமைவிடமும் அருள்வியாபகமும் அடியவர்களை தனதாக்கிக்கொண்டிருப்பதுடன் பூர்வீக ஆலயம் முற்றாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டு 150 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புனரமைப்புச்செய்யப்படுகின்றது.

ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவர் கிராம அலுவலர் க.ஸ்ரீஸ்கந்தராசா திருப்பணி தொடர்பாகவும் அம்பாளின் அருள்வியாபகம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்; 3 லட்சம் ரூபாவுடன் ஆரம்பமான ஆலயத்திருப்பணிக்கு வந்து சேரும் நிதி வளம் அடியவர்களை மெய் மறக்கச் செய்கின்றது. புலம்பெயர்ந்த உறவுகள், உள்ளூர் அடியவர்களும் தாராளமாக உதவுவதோடு பரிவார மூர்த்திகள் மற்றும் ஆலயத்தின் பாகங்களையே பொறுப்பேற்ற கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கு முன்வந்துள்ளனர். இதன் மூலம் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன எனக் கூறினார். சிறுப்பிட்டி மத்தியில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்துக்கு முந்திய காலப் பகுதியில் காவல்தெய்வமான காத்தவராயன் மற்றும் அம்பாள் ஆலயமாக பிரதிஸ்டை செய்து பொதுமக்களால் வழிபடப்பட்டு வந்த ஆலயமே தற்பொழுது ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயமாக வளர்ச்சி கண்டு அருளாட்சியிலும் ஆலயத்தோற்றத்திலும் உயர்ந்து நிற்கின்றது.

ஆலயத்துக்கென தர்மசாசனம் செய்யப்பட்ட 40 பரப்புக்காணியின் மத்தியில் வைதீகமுறைப்படி அமைந்த ஆலயம், அதனோடு இணைந்த தீர்த்தக் கேணி, புதிய சித்திரத்தேர், தேர் முட்டி என்பவற்றுடன் அழகுற அமைந்துள்ளது.1912 ஆம் ஆண்டு ஆலயத்துக்கு தர்மசானம் செய்யப்பட்ட காணி தொடர்பான உறுதியில் ஆலயம் தொடர்பான விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு முந்திய ஆவணங்களில் மற்றும் பொது மக்களின் பேச்சு வழக்கில் ஆலயத்தின்பெயர் சிவகாமி அம்மன், இராஜேஸ்வரி அம்மன், கருணாகர கடாச்சி போன்ற பல்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த நாமங்களில் சில ஆலயத்தின் ஊஞ்சல் பாடலிலும் குறிப்பிடப்பட்டிருப்பதால் காலத்துக்குக்காலம் இந்த வகையில் பெயர் வழங்கலாயிற்று.

''ஆலயத்துக்கு நேர்த்தி வைத்தும் தமது சந்ததியின் பெயர்விளங்கவும் 200 பரப்புக்கு மேற்பட்ட காணி சிறுப்பிட்டிக் கிராமத்திலும் சிறுப்பிட்டி கிராமத்துக்கு வெளியிலும் ஆலயத்தின் பெயரில் தர்மசாசனம் செய்யப்பட்டுள்ளது. தர்மசாசன காணியை கையாளுவோர் தர்மசாசனம் செய்தவர்களின் விருப்பத்துக்கு அமைய ஆலயத்துக்கு காணிகளில் இருந்து கிடைக்கும் வருவாய் முழுவதையும் வழங்கி உதவுவது ஆலயத்தை மேலும் சிறப்புற நடத்துவதற்கும் திருப்பணிகளை திட்டமிட்ட முறையில் நிறைவு செய்வதற்கு உதவும்'' என ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் மு.இராமநாதன் தெரிவித்தார்.

ஆலயம் ஆரம்பகாலத்தில் தனிப்பட்டவர்களின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட போதிலும் இடைக்காலத்தில் ஊர்ப் பொதுமக்களை உள்ளடக்கிய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டு சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை பௌர்ணமி நாளில் ஆலய மண்டபத்தில் பொதுக் கூட் டத்தை கூட்டி செயற்பாட்டு அறிக்கை கணக்கறிக்கை என்பவற்றை அடியவர்களுக்கு சமர்ப்பித்துச் சீர் செய்வதோடு புதிய பரிபாலன சபையை தெரிவு செய்து ஆலய பரிபால சபையின் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் பிரகாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள ஆலய பரிபாலன சபையின் தலைவராக க.ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர் மு.இராமநாதன், செயலாளர் செ.விசுவலிங்கம், உப செயலாளர் க.குணசங்கர், பொருளாளர் சு.கனகராசாவோடு 6 பேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் இணைந்து ஆலயத்தின் திருப்பணி உள்ளடங்கலான அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். ஆலயத்தின் பரம்பரை பூசகர்களாக சிவஸ்ரீ குருமூர்த்தி ஐயர், காமாட்சிக் குருக்கள் நித்திய, நைமித்திய கிரியைகளை முன்னர் செய்து வந்தபோதிலும் தற் பொழுது நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயிலில் பிரதமகுரு சிவஸ்ரீ

**ஞான ஆதவன்**

ஜெயந்திநாதக் குருக்களும் அவரின் பரம்பரையினரும் சிறப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். பூசகர்கள் தங்கியிருந்து கிருத்தியங்கள் செய்வதற்கு வசதியாக 'குருக்கள் வீடு' புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28ஆம் திகதி புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற்றது. 15லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேருக்கான செலவை சுவிஸில் வசிக்கும் கனகநாயகம் (பப்பு) வழங்கினார். அத்துடன் தற்பொழுது ஆலயப்பணிக்கும் நிதி உதவி வழங்கி வருவதாகவும் சிறுப்பிட்டியில் இருக்கும் போது சிறிய அளவில் வாழைக்குலை வியாபாரம் செய்தவரும் அம்மன் அருளால் சுவிஸில் பெரும் தனவந்தராக வளமுடன் வாழ்வதாகவும் திருப்பணிச்சபையின் செயலாளர் செ.விசுவலிங்கம் கூறுகின்றார்.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இடம் பெயர்வின் போது ஆலயச்சுற்றாடலில் ஷெல் தாக்குதலால் சேதங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் புதிய சித்திரத் தேரோ ஆலயத்துக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை. அனைத்தும் உள்ளபடியே இருந்தன. 1996 இல் மீளக்குடியேறிய போது அம்மனின் புதுமையை வியந்து அடியவர் மனம் மகிழ்ந்தனர். (தொடரும்)




# நல்லூர் கந்தன் மஹோற்சவம்

### நல்லூரை நாடி வா நெஞ்சே...

ஆனந்தமானர் பொய்கைத் தாமரை ஈன்றதைக் கண்டு
வானவர் களித்தனர் தம்மை காத்திடும் கந்தவே லென்று
நான்முகம், கமண்டலம், அக்மணி அணிந்தும் பணியா பிரம்மன்
வீணெணும் நான்தனை யகற்றி பணிந்தனன் 'சிறு' பிரபஞ்சம்
தேவரைக் காக்கவே கை வேலொடு சக்ரம், கதை
மூவர் படை முர சொலித்த முத்தமிழ் குமரன் இவன்
வீரம கேந்திர புரியில் சமரிலே சாய்த்தனன் வல்ல
சூரனாம் அசுரன் கேட்டை வெற்றி வேல் எங்கள் முருகன்
ஜாலத்தேர் வானம் மறைக்க கொடுங்கணை சூரன் பொழிந்தும்
வேலது கொண்டே சரித்தான் மயிலோடு சேவலும் பெற்றான்
திருப்பரங் குன்றம் நாடி மணங்கொள தெய்வ யானை
மருகனே யானான் முத்துக் குமரனாய் கோயில் கொண்டான்
வள்ளி மலைக் கொம்புத்தே னாம் பருகதினை காடே ஏகி
வள்ளியென்னும் புள்ளிமயி லாளை கை பற்றி கந்தன் ஆனான்
தித்திக்கும் தமிழுக்குத் தெய்வம் சஷ்டியில் நிறைந்திடும் செல்வம்
முத்தமிழ் போற்றும் முருகன் முக்கனிச் சுவை தரு அழகன்
அருள் மிகு புலவராம் நக் கீரரு மறியா யாழில்
திருக்கோயி லுறைந்தே நிற்கும் படைவீட் டுடையான் பாரீர்
எல்லைகள் அறியா அண்டம் எங்கெனும் கிடைக்கா செல்வம்
நல்லையில் தருவான் கோடி இன்பத்தை நாடிவா நெஞ்சே...!

முத்து, மன்னார்.

### ஆறுதலைத் தந்திடுவாய் நல்லூரானே

கந்தா என்று உனை நான் கதறி அழைக்கின்றேன்-எந்தன்
கலக்கத்தை தீர்க்க கதிர் வேலா விரைந்தோடி வந்திடுவாய்
சிவசக்தி மைந்தா ஐங்கரனுக்கு இளையவா
செந்தமிழின் தலைவா எம் தமிழைக் காத்திடுவாய்
எம் துயர் போக்கிடுவாய் ஊர் இழந்து உறவ இழந்து
உணர்விழந்து தவிக்கின்றோம் நாமிங்கு
ஆறு தலை முருகா- எமக்கு ஆறுதலைத் தந்திடுவாய்
நாடி வருகிறது அடியார் கூட்டம் ஓடி வருகிறது காவடிகள்
உன் சந்நிதி நாடி அருள் பெறவே அன்று தேவர்களைக் காத்தாய்
இன்று காத்திடுவாய் தமிழர்களை.

மு.தர்மிகா, கோண்டாவில்.

### உன் பதமே அபயமப்பா...

நல்லைப் பதியுறை நாயகா- எம்
தொல்லை தவிர்த்தருள்வாய் வேலவா
அல்ல லகன்றோட அருள்வாய் நீ - நிதம்
நல்ல வழி காட்டியெமை ஆள்வாய் நீ......
வினையறுக்கும் வேலவா விரைந்தோடி வா- என்றும்
துணை யெமக்கு இனி நீயே துயர் தீர்க்க வா
இலையுதிர் காலச் சருகுகளாய்- நாம்
இங்குமங்கும் அலைவதுவா வாழ்வு
அலைகடலில் துரும்பாய்- ஆனைவாயில்கரும்பாய்
நிலை தடுமாறு மெமை நீ கடைத்தேற்றுவாயே.....
கங்கையொடு பிறைமதி சேர் சடையன் மைந்தா...
தங்க முக வேலா- தவிர்த்திடப்பா எம் துயரம்
மங்கல மெய் வாழ்வு பெற- மமதை மறைந்தோட
உன் பதமே அபயமப்பா- நல்லை நகர் வேலா...!

'புங்கையூர்' காந்தன்

### நல்லூரான் நலமீவான்

வீதியெங்கும் விழாக் கோலம் விண்ணதிரும் நாத மழை
மோதிடும் நல்லடியார்கள் முகிழ்ந்து வரும் தோத்திரங்கள்
வேதியரின் ஓது தல்கள் விளக்குமுயர் ஆக மங்கள்
நாதியற்றோர் நாடி வர நல்லூரான் நலமீவான்!
கோதிலாக் குணத்தின் குன்றாய் குறைவிலா ஆழி முத்தாய்
தீதிலா வாய்மை காக்கும் திருமறை வகுத்த கோவாய்
பூதல வாழ்வை யென்றும் பொன்னக ராக்கி, நாளும்
மாதொரு பாகன் மைந்தா! மருவிப் பேரின்பம் தாராய்!

கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
**R.G.Traders**
Navam's Building,
No.291, Stanly Road, Jaffna. 021 222 6185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவே கிறீஸ் பூதம் என்ற மாயை

## அடைக்கலநாதன் எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.25

இந்த அரசு கடைசிவரை அவசரகாலச் சட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாயைதான் இந்தக் கிறீஸ் பூதம் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசபைத் தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் கடந்த திங்கட்கிழமை தமது பணிகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று கிறீஸ் பூத மர்மம் ஒரு தொடர் கதையாக நீள்கின்றது. இவர்கள் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் பெண்களின் மார்பகத்தை மட்டுமே காயப் படுத்திச் செல்கின்றனர். கேரளாவில் கிடைத்த பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதி யான புதையல் போன்று இங்கும் ஒரு பெரும் புதையலை எடுக்க இளம் பெண்களின் இரத்தம் ஓர் அதிகாரம் மிக்கவ ரின் பணிப்பின் பேரில்தான் சேர்க்கப்படுகிறது என வதந்தி அடிபடுகிறது.

அப்படியானால் தமிழ் மக்களின் இரத்தம் மட்டுமே புனித மானதும் பரிசுத்த மானதும் என்று இவர்கள் உறுதிப்படுத்துகின்றனரா?

இந்த அரசு கடைசிவரை அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொள்ள வேண் டும் என்பதால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாயை தான் இந்தக் கிறீஸ் பூதம் - என்றார்.

**சர்வாதிகாரி ஆளுநர்**

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்ததாவது -

இன்று வடமாகாணத்தில் இடம்பெறும் அராஜகச்செயல் களுக்கு எல்லாம் ஆளு நரே காரணம். ஆளுநர் ஒரு இராணுவ அதிகாரி. அவருக்கு ஜனநாயக நிர்வாக முறை தெரி யாது. தேர்தலின் பின் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே மாறி விட்டார்.

தனக்குப் பக்கப்பாட்டுப் பாடக்கூடிய பென்சனியர்களையே ஆளுநர் தனது அலுவலகத்தில் குவித்துவைத்துள்ளார். சேவை நீடிப்புடன் அல்லது குத்தகை அடிப்படையில் அவர்களைத் தம்முடன் வைத்துள்ளார்.

ஆனால் உண்மையாகப் பணிபுரியும் அதிகாரிகளை உடனடியாக இடமாற் றம் செய்கிறார். வீட்டுக்கு அனுப்புகிறார். இந்த ஆளுநரின் அட்டகாசத்தால் அரச அதிகாரிகள் புலிக்கூண்டுக்குள் இருப்பதுபோல் அஞ்சி அஞ்சியே பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் எமது மக்களின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடத்திய சாதாரண ஆசிரியர் ஒருவருக்கு எதிராகப் பொலிஸ் முறைப்பாடு செய்யும்படி உத்தரவிட்டுள்ளார் - என்றார். (சி)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயிற்சி. கதைக்கப் பயிலும் வரையான முழுக்கட்டணம் 5000/=
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.Sவீதி, யாழ்ப்பாணம். Tel- 0776751649.

# புலிகள் கட்சியின் பதிவு ரத்தாகிறது

கொழும்பு, ஓக. 25

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பதிவை நீக்க தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் 1989ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ அரசுடன் பேச்சு நடத்திய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அக்கட்சியின் தலைவராக மாத்தயா என்ற மகேந்திரராஜாவும், செயலாளராக யோகி என்ற யோகரத்தினமும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மற்றொரு கட்சியான ஈ.என்.டி.எல்.எவ்வின் பதிவும் ரத்துச் செய்யப்படவுள்ளது.

இந்தக் கட்சிகள் கடந்த 10 வருடங்களில் எந்தத் தேர்தலிலும் போட்டியிடவில்லை. இதனை அடுத்தே அந்தக் கட்சிகளின் பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன. (உ-சி)

# ஐக்கிய தேசியக் கட்சி இன்று வேட்புமனு

கொழும்பு, ஓக. 25

கொழும்பு மாநகரசபை உட்பட ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கான ஐ.தே.கட்சியின் வேட்புமனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படும். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கொழும்பு உட்பட ஏனைய உள்ளூராட்சி சபைகளின் முதன்மை வேட்பாளர் யார் என்பது அறிவிக்கப்படும் என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

கொழும்பு உட்பட உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய அமைப்பாளர் ரவி கருணா நாயக்க, சிரேஷ்ட உப தலை வர்களான ஜோஸப் மைக்கல் பெரேரா, லக்ஷ்மன் கிரியெல்ல, கபீர் ஹாசிம் மற்றும் ருவன் விஜயவர்தன, சாந்தினி கோன்கஹகே, டி.எம்.சுவாமிநாதன் ஆகி யோர் அடங்குவர்.

தேர்தல் பிரசாரக்குழு நாளை சிறிகொத்தாவில் கூடும்- என்றார்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 04.03.1941
விண்ணில் 07.09.2007

அமரர் பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்

அன்பு மொழியும் ஆதரவுப் புன்னகையும்
பண்பின் உயர்வும் பலரிடமும் பூண்ட நட்பும்
இன்னமும் எம் கண்முன்னே நீங்கா இடம் பிடிக்க
நான்காண்டு ஆனபோதும் இன்றும் உங்கள் நினைவுடனே
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

'மயூர பவனம்', குடும்பத்தினர்.
உடுவில், சுன்னாகம். (7160)

# கிறீஸ் பூத வதந்தியை பரப்பிய சந்தேகத்தில் ஒருவருக்கு மறியல்

கொழும்பு, ஓக.25

கிறீஸ் பூதங்கள் தொடர்பான வதந்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டின் காரணமாக ஓட்டோ சாரதியொருவரை நாளை மறுதினம்வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டார். இவரை கொழும்பு முகத்துவாரம் பொலிஸார் கைதுசெய்து கடந்த ஞாயிற் றுக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இனோகா கமகே மற்றும் சேனகபெரேரா ஆகியோர் வாதாடுகையில், இந்தச் சந்தேக நபர் முகத்துவாரம் ஓட்டோ தரிப்பிடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்தனர்.

இந்தக் கைது பேச்சு சுதந்திரத்தை மீறுவதாகும் என சட்டத்தரணிகள் வாதிட்டனர். அதேவேளை, சந்தேகநபரினால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கருத்துகள் தொடர்பான இரு ஒலிப்பதிவுகள் தம்மிடமிருப்பதாகவும் அதை தாம் ஆராய வேண்டியிருப்பதாகவும் முகத்துவாரம் பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில் சந்தேகநபரை நாளை மறுதினம் சனிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட மேலதிக நீதிவான் டிக்கிரி ஜயதிலக்க, ஒலிப்பதிவை பரீட்சித்த பின் அடுத்த விசாரணை நடைபெறும் தினத்தில் இது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
சுப்பிரமணியம் கண்மணி



தோற்றம் 05.10.1939
மறைவு 26.07.2011

இமை மூடித் திறப்பதற்குள் நீர் மறைந்து
நாள்களோ முப்பத்தொன்றாகினவே
நாம் வாழும் காலம்வரை உம் நினைவு
எம் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்திபெற அருளுமாறு
சிவபூத நாகேஸ்வரர் பாதம் பணிகின்றோம்

பாசத்துடன் நினைவுகூரும்
பிள்ளைகள்:
சு.சண்முகநாதன் (ஜேர்மனி),
திருமதி சற்குணதேவி ஜெயக்குமாரன்(உரும்பிராய்),
திருமதி சரோஜினிதேவி அசோகன் (இத்தாலி)
மற்றும் உறவினர்கள்.
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (சி/3273)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரமும் 83 கிரக பாவமும் உடைய கணிய அளவையாளருக்கு (Q.S) மணமகள் தேவை.
தொடர்பு:0777906263

### வேலை ஆள் தேவை

யாழ்.பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு வேலை ஆள் தேவை. சம்பளம் 25000/= மேல் சம்பாதிக்கலாம்.
தொடர்பு: 0775005285

### தேவை

பிரபல மெடிக்கல் கம்பனிக்கு யாழ். மாவட்டத்தில் செயற்பட விற்பனை முகவர்கள் தேவை. பாமசி தராதரப் பத்திரம் உடையவர்கள் தொடர்பு கொள்ளவும். 1.2 மில்லியன் வங்கி உத்தரவாதமும் களஞ்சிய வசதியும் இருத்தல் வேண்டும்.
தொடர்பு:0778458063

### அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திகள் விற்பனை நிலையம்

நல்லூர் பின்வீதியில் அமைந்திருக்கும் அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருள்களை எமது விற்பனை நிலையத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா கோப்பி
நல்லூர் பின்வீதி, நல்லூர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 . 05 . 1941



விண்ணில் 26 . 08 . 2008

அமரர் கந்தசாமி திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற பிராந்திய நிர்வாக அலுவலர், அஞ்சல் திணைக்களம்)
திதி: ஏகாதசி (25.08.2011)

"ஜீவனானது இவ்வுலகத்தை விட்டுப் போகும் தருணத்தில் கடைசியாக எதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்குமோ அதற்குரிய உடலில் மறுபடியும் வந்து பிறக்கிறது; ஆதலால் பக்தி சாதனை மிகவும் அவசியமெனப்படுகின்றது. இடையறாத அனுஷ்டானத்தினால் உலகப்பொருள்களைப் பற்றிய எண்ணம் மனதில் உண்டாகாமற்போவதால், ஈஸ்வரனைப் பற்றிய சிந்தனையே ஆத்மாவினிடம் குடிகொள்ளும். மரணம் தறுவாயிலும்கூட அந்தச் சிந்தனை நீங்குவதில்லை"
- ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு.
(7215) (38)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளுக்கோஸாவது ஏற்றிக் கொள்ளுங்கள் ஹசாரேயிடம் மன்மோகன்சிங் கோரிக்கை

டில்லி, ஒக.25

லோக்பால் மசோதா கோரி தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் அன்னா ஹசாரேயின் உடல்நிலை பாதிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து குளுகோஸாவது ஏற்றிக் கொள்ளுங்கள் என்று ஹசாரேயைப் பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊழலுக்கு எதிரான ஜன் லோக்பால் மசோதாவை எந்த வித மாற்றமும் இன்றி அப்படியே நிறைவேற்றக் கோரி அன்னா ஹஸாரே கடந்த 10 நாள்களாக டில்லி ராம்லீலா மைதானத்தில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவருடன் அவரது ஆதரவாளர்கள் பலரும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இந்த உண்ணாவிரதத்தால் 74 வயதாகும் அன்னாவின் உடல்நிலை பாதிக்கப் பட்டுள்ளது.



அவரை மருத்துவமனையில் சேருமாறு மருத்துவர்கள் வலியுறுத்தினர். ஆனால் அதற்கு அன்னா மறுத்து விட்டார். தனது உடல் நிலையை பொருட்படுத்தாமல் நேற்று 10 ஆவது நாளாக உண் ணாவிரதம் இருக்கிறார். இந்த நிலையில் குளுக்கோஸாவது ஏற்றிக் கொள்ளுமாறு அன்னாவை பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். அன்னாவின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு அவருடன் பேச்சு நடத்த மத்திய நிதிய மைச்சர் பிரணாப் முகர்ஜியை அரசு நியமித்துள்ளது. (வ)

# லோக்பால் மசோதா விவகாரம் பிரதமரின் யோசனை நிராகரிப்பு

டில்லி, ஒக.25

அன்னா ஹசாரேயின் உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக ஹசரே குழுவின் ஜன லோக்பால் மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்ப தயாராக உள்ளதாக பிரதமர் விடுத்த யோசனையை ஹசாரே நிராகரித்துள்ளார்.

பிரதமர் கடிதம் மூலம் மேற்படி இந்த யோசனையைத் தெரிவித்திருந்தார். அதில் அன்னாஹசாரே குழுவின் என்று கூறுப்பட்டதால் கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் பேச்சு நடத்திய பின் அன்னா ஹசாரே குழுவினர் போராட்டத் திடலில் பேசும் போது இந்த யோசனையை ஏற்க மறுத்து விட்டனர்.

நாடாளுமன்றத்தில் அரசு ஏற்கனவே தாக்கல் செய்த லோக்பால் மசோதாவை வாபஸ் பெற வேண்டும், ஜன லோக்பால் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும், இதற்காக நாடாளுமன்ற கூட்டத்தை நீடிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். (வ)

# மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரி கருத்தரங்கம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 3 பேரின் மரண தண்டனையை ரத்துசெய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 28 அம் திகதி பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை இணைந்து சென்னை மறை மலைநகரில் கருத்தரங்கம் நடத்தவுள்ளன.

இதுதொடர்பாக சென்னை மாவட்டச் செயலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பேசியபோதே இதைத் தெரிவித்தார். (வ)



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை சிங்கப்பூர் குடியரசின் தூதர் அஜீத் சிங் நேற்று முன்தினம் கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

# லோக்பால் விவகாரம் பா.ஜ.க.மீது யஷ்வந்த் சின்ஹா அதிருப்தி

டில்லி, ஒக.25

ஊழலுக்கு எதிரான லோக்பால் மசோதா விவகாரத்தில் பா.ஜ.க. உறுதியான முடிவை எடுக்கவில்லை என்றால் மக்களவையில் இருந்து ராஜிநாமா செய்வேன் என்று அந்தக்கட்சியின் மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. உறுப்பினர்களின் கூட்டம் நேற்றுக் காலை இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்:

லோக்பால் மசோதா விவகாரத்தில் பா.ஜ.க.வின் தற்போதைய நிலையை மக்களிடம் நியாயப்படுத்துவது கடினமானதாகும்.

லோக்பால் மசோதா தொடர்பாக நேற்று முன்தினம் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். இந்த நிலையில் பா.ஜ.க. இந்த விவகாரத்தில் உறுதியான முடிவை எடுக்கவில்லை என்று அந்தக்கட்சியின் மூத்த தலைவரே குற்றம்சாட்டியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# சித்திரை முதலாம் திகதிக்கு தமிழ்ப் புத்தாண்டு மாற்றம்

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஒக. 25

தமிழ்ப் புத்தாண்டு தொடர்பாக நிலவி வந்த குழப்பத்துக்கு விடையாக மீண்டும் தமிழ்ப் புத்தாண்டு மாற்றப்பட்டுள்ளது.

வழக்கம்போல் சித்திரை முதலாம் திகதியே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

ஆண்டுதோறும் சித்திரை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப் பட்டு வந்தது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் தை முதலாம் திகதியை தமிழ் புத்தாண்டாக மாற்றி அப்போதைய முதல்வரும் தி.மு. க. தலைவருமான கருணாநிதி அறிவித்தார். அதனைத் தொடர்ந்து தை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டு வந்தது.

இந்த நிலையில் சட்டப் பேரவையில் தை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டு என்பதை ரத்துச் செய்து மசோதா நேற்று முன்தினம் தாக்கல் செய்யப் பட்டது.

இந்து அறநிலையத் துறை அமைச்சர் சண்முகநாதன் இது தொடர்பாக நேற்று முன்தினம் மசோதா தாக்கல் செய்தார். சென்ற ஆட்சியில் தை முதலாம் திகதி தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவிக்கப்பட்டதை மாற்றி, மீண்டும் சித்திரை முதலாம் திகதியே தமிழ்ப் புத்தாண்டு என்று அரசின் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, தொல்லியல், வானியல் நிபுணர்களின் கருத்தை ஏற்று புத்தாண்டு தினம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பல்லாண்டுகால வழக்கத்துக்கு மாறானது என தொல்லியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 2008ஆம் ஆண்டு சட்டத்தை இரத்து செய்ய வும் கோரியிருந்தனர் என தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

# அடுத்த மாத முதல் வாரத்தில் இந்தியா திரும்புகிறார் சோனியா

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்தியா திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உடல்நலக் கோளாறால் பாதிக்கப்பட்ட சோனியா காந்திக்கு கடந்த 4 ஆம் திகதி அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அவர் விரைவாகக் குணம் அடைந்து வருவதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தநிலையில் அவர் ஒகஸ்ட் மாத இறுதியிலோ அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்திலோ இந்தியா திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே சோனியா காந்தி இல்லாததால் ஹசாரேயின் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் காங்கிரஸ் கட்சிக்கு திணறல் ஏற்பட்டுள்ளதா என்று அந்தக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக்சிங்வியிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்து சிங்வி, இந்த சந்தர்ப்பத்தில் கட்சித் தலைவரின் ஆலோசனை இல்லாதது கஷ்டமாகத்தான் உள்ளது. இருப்பினும் அவர் இல்லாமலும் இந்தப்பிரச்சினையைத் தீர்க்க எங்களால் முடியும்'' என்றார்.

# மீனவர்களுக்குத் துப்பாக்கி வழங்கினால் நாட்டில் குழப்பம் நிலவும் வாய்ப்பு

## சென்னை மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

சென்னை, ஒக.25

இந்திய மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்கினால் சட்டம் ஒழுங்கு சீரழிந்து நாட்டில் குழப்பம் நிலவ வாய்ப்பு உள்ளது என்று சென்னை மேல்நீதிமன்றத்தில் மத்திய வெளியுறவுத் துறை இயக்குநர் தீபக்மித்தல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியதாக கடந்த மூன்றாண்டில் 1,617 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சென்னை மேல்நீதிமன்றில் இந்தய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க, தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்க உத்தரவிடவும், கச்சதீவை மீட்க உத்தரவிடக்கோரியும் மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பில் சட்டத்தரணி வாஞ்சிநாதன், பி.ஸ்டாலின், வி.கண்ணன் ஆகியோர் சென்னை மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனுவுக்கு பதிலளித்து நேற்று முன்தினம் மத்திய வெளியுறவுத்துறை இயக்குனர் தீபக்மித்தல் பதில் மனுத் தாக்கல் செய்துள்ளார். மத்திய அரசின் அரசதரப்பு சட்டத்தரணி ஜெனரல் செந்தில்வேலன் பதில் மனுவை தாக்கல் செய்தார்.

பதில் மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது மத்திய அரசு இலங்கை அரசைக் கண்டித்துள்ளது. இலங்கை கடற்படை பிடித்துச் செல்லும் தமிழக மீனவர்களை, மத்திய அரசு தலையிட்டு மீட்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சர்வதேச கடல் எல்லை மீறல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இரு நாட்டு மீனவர்களும் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது. அதையும் மீறி மீனவர்கள் எல்லையை மீறுகின்றனர்.

2009இல் ஆயிரத்து 456 மீனவர்களும் 2010இல் 127 மீனவர்களும் 2011இல் 34 மீனவர்களும் இலங்கை கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டனர். 2008 இல் 5 பேரும், 2010 இல் ஒருவரும் 2011 இல் (இதுவரை) 3 பேரும் கொல் லப்பட்டுள்ளனர். 2009இல் மீனவர்கள் எவரும் கொல்லப்படவில்லை.

கச்சதீவை மீட்பது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா, தொடர்ந்துள்ள வழக்கு நீதிமன்றில் நிலுவையில் இருந்து வருகிறது. தமிழக மீனவர்கள் அனைவருக்கும் பாதுகாப்புக்காக துப்பாக்கி வழங்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

இது நடைமுறைக்கு ஒத்து வராது. துப்பாக்கி வழங்கினால் சட்டம் ஒழுங்கு கெட்டு, நாட்டில் குழப்பம் நிலவ வாய்ப்பு உள்ளது. தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதனால், மனுக்களை நிராகரிப்புச் செய்ய வேண்டும் என்று பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, விசாரணையை ஒகஸ்ட் 25 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஜோதிமணி, சுந்தரேஷ் ஆகியோர் ஒத்திவைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25 ஓகஸ்ட் 2011 வியாழக்கிழமை





# வடக்கின் வசந்தம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மூலமாக வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டங்கள்

கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் கௌரவ சிறுகைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களும் ஏனைய அமைச்சர்களும் பங்குபற்றி ஆரம்பித்த வேலைத்திட்டங்களின் முன்னேற்ற நிலைமை






13.07.2011 தொடக்கம் 18.07.2011 வரை யாழ் மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி மன்றங்களிலும் 34 வேலைத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை

### வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்ட வேலைகள்

| தொ. இல | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | | வேலைகளின் விபரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன் ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | யாழ் மாநகரசபை | 1 | கொழும்புத்துறை -தச்சன் தோப்பு வீதி (வசந்தபுரம்) | தச்சன்தோப்பு | 1.799 | 25% |
| | | 2 | சிப்பித்தறை வடிகால் புனரமைப்பு | சிப்பித்தறை | 1.767 | 25% |
| 2 | நல்லூர் பிரதேச சபை | 3 | அரியாலை தென் கிழக்கு மணிபுரி வீதி புனரமைத்தல் | அரியாலை | 8.089 | 30% |
| 3 | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை | 4 | கோப்பாய் கிழுவானை வீதி புனரமைப்பு | கோப்பாய் | 9.903 | 25% |
| | | 5 | தனிப்பனையடி வீதி புனரமைப்பு | அச்செழு | 8.179 | 25% |
| | | 6 | வன்னியசிங்கம் வீதி புனரமைப்பு | ஆவரங்கால் மேற்கு | 11.208 | 25% |
| 4 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | 7 | குளானை வீதி புனரமைப்பு | துன்னாலை | 6.192 | 90% |
| | | 8 | மித்தில் செம்பாட்டு வீதி புனரமைப்பு | துன்னாலை மத்தி | 12.439 | 40% |
| 5 | வலிகாமம் வடக்கு பிரதேச சபை. | 9 | பொன்னையா வீதி புனரமைப்பு | பன்னாலை | 5.903 | 80% |
| | | 10 | குட்டியப்புலம் மயான வீதி புனரமைப்பு | குட்டியபுலம் | 5.789 | 40% |
| 6 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | 11 | காளி கோவில் வீதி புனரமைப்பு | ஏழாலை | 4.475 | 60% |
| | | 12 | மல்வம் 3ம் குறுக்குதெரு வீதி மீள் புனரமைப்பு | உடுவில் | 4.779 | 40% |
| | | 13 | காடக்கடம்பை மயான வீதி புனரமைப்பு | குப்பிளான் | 6.831 | 25% |
| 7 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | 14 | சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி மீள்புனரமைப்பு | சுழிபுரம் | 10.996 | 25% |
| | | 15 | நொச்சியம்பதி பச்சந்தை வீதி புனரமைப்பு | அராலி | 13.198 | 25% |
| 8 | வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேச சபை | 16 | ஆலங்குழாய் வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.529 | 40% |
| | | 17 | சேமக்காலை வீதி புனரமைப்பு | இளவாலை | 6.121 | 60% |
| | | 18 | உச்சியோடை வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 5.362 | 40% |
| | | 19 | சின்னப்பா வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.696 | 40% |
| 9 | சாவகச்சேரி நகர சபை | 20 | கல்வயல் இராமலிங்கம் பழைய பாடசாலை இணைப்பு வீதி புனரமைப்பு | கல்வயல் | 12.151 | 30% |
| | | 21 | மீசாலை மேற்கு கேணியடி வீதி புனரமைப்பு | மீசாலை | 9.945 | 20% |
| 10 | சாவகச்சேரி பிரதேச சபை | 22 | அம்மா கடை வீதி புனரமைப்பு | கரம்பை குறிச்சி | 6.648 | 20% |
| | | 23 | மிருசுவில் ஆஸ்பத்திரி முன் வீதி புனரமைப்பு | மிருசுவில் | 6.276 | 20% |
| | | 24 | நாவற்குழி மேற்கு சூழாறுப்பிட்டி வீதி புனரமைப்பு | நாவற்குழி | 6.658 | 25% |
| 11 | நெடுந்தீவு பிரதேச சபை | 25 | யாகப்பர் கோவில் காழாமுனை வீதி புனரமைப்பு | நெடுந்தீவு மத்தி | 7.164 | 25% |
| | | 26 | தெற்கு சுடலை விகாரவடிவீதி புனரமைப்பு | நெடுந்தீவு மேற்கு | 5.377 | 25% |
| | | 27 | முருகன் கோவில் கோபாலபிட்டி வீதி புனரமைப்பு | நெடுந்தீவு கிழக்கு | 2.866 | 25% |
| 12 | காரைநகர் பிரதேச சபை | 28 | ஊரிமுருகன் கோவில் வீதி புனரமைப்பு | ஊரி | 12.583 | 25% |
| 13 | ஊர்காவற்றுறை பிரதேச சபை | 29 | மெலிஞ்சிமுனை வீதி புனரமைப்பு | ஊர்காவற் றுறை | 6.431 | 45% |
| | | 30 | அனலைதீவு கடையடி குறுக்குத்தெரு புனரமைப்பு | அனலைதீவு | 5.484 | 30% |
| 14 | வேலணை பிரதேச சபை | 31 | சங்கத்தார் கேணி வீதி புனரமைப்பு | புங்குடுதீவு | 10.659 | 25% |
| | | 32 | இராசையா வீதி புனரமைப்பு | வேலணை | 10.212 | 25% |
| 15 | பருத்தித்துறை பிரதேச சபை | 33 | உருத்திராவத்தை பாடசாலை வீதி புனரமைப்பு | பூலோலி | 8.432 | 25% |
| | | 34 | திக்கம் பாடசாலை வீதி புனரமைப்பு | அல்வாய் | 5.909 | 25% |


இவ்வேலைத்திட்டங்கள் மக்களின் பங்களிப்புடனும் கண்காணிப்புடனும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.




துன்னாலை குளானை வீதி புனரமைப்பு




ஏழாலை காளிகோவில் வீதி புனரமைப்பு



பன்னாலை பொன்னையா வீதி புனரமைப்பு




கோப்பாய் கிழுவானை வீதி புனரமைப்பு




சேமக்காலை வீதி




ஆலங்குழாய் வீதி



துன்னாலை குளானை வீதி புனரமைப்பு



ஏழாலை காளிகோவில் வீதி புனரமைப்பு



பன்னாலை பொன்னையா வீதி புனரமைப்பு



கோப்பாய் கிழுவானை வீதி புனரமைப்பு



சேமக்காலை வீதி



ஆலங்குழாய் வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகர் திரிபோலியில் மீண்டும் உக்கிரச் சண்டை ஆதரவாளர்களுடன் கடாபியின் மகன் பிரசன்னம்

திரிபோலி,ஓக.25

லிபியத் தலைநகர் திரிபோலியின் பெரும்பான்மைப் பகுதிகள் எதிர்ப்பாளர்கள் வசம் வந்துவிட்ட நிலையில் கடாபியின் குடியிருப்பான பாப் அல் அஜீசியா வளாகத்திலும் வெளியிலும் நேற்று முன்தினம் கடாபி ராணுவம் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கு இடையில் கடும் சண்டை நடந்தது.

இந்நிலையில், எதிர்ப்பாளர்களால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம், நேற்று முன்தினம் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள ரிக்ஸாஸ் ஹோட்டலுக்கு தனது ஆதரவாளர்களுடன் தோன்றி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

திரிபோலியின் பெரும்பான்மையான பகுதிகளைத் தாங்கள் வசப்படுத்தி விட்டதாகவும், கடாபியின் மகன்கள் சயீப் அல் இஸ்லாம், அல் சாடி மற்றும் முகமது ஆகிய மூவரைக் கைது செய்துள்ளதாகவும் எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர். சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டதை, நெதர்லாந்தில் இயங்கிவரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் உறுதி செய்ததாகத் தகவல்கள் வெளியாகின.

ஆனால் நேற்றுமுன்தினம் அதிகாலையில், திரிபோலியின் ஒரு பகுதியில் உள்ள ரிக்சாஸ் ஹோட்டலின் வெளியில், சயீப் அல் இஸ் லாம் தனது ஆதரவாளர்கள் மத்தியில் அந்த ஹோட்டலில் லிபிய அரசால் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் பேசினார். அதன்போது அவர் கூறியதாவது "எதிர்ப்பாளர்களின் முதுகெலும்புகளை முறிப்போம். திரிபோலி இன்னும் அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது'' என்றார். கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட அவர் தப்பித்து வெளியேறிய சம்பவம், கடாபி ராணுவம் மத்தியில் பெரும் உற்சாகத்தை அளித்தது. இதனால், ரிக்சாஸ் ஹோட்டலின் வெளிப்புறம் மற்றும் பாப் அல் அஜீசியா வளாகம் ஆகிய இரு இடங் களில், எதிர்ப்பாளர்கள் மீது கடாபி ராணுவம் கடும் தாக்குதல் தொடுத்தது. சில கி.மீ., தூரத்தில் உள்ள கிரீன் சதுக்கத்தில் திரண்டிருந்த எதிர்ப்பாளர்கள் மீது அஜீசியா வளாகத்தில் இருந்து ராணுவம் சிறு ரக ஏவுகணை களை வீசித் தாக்கியது. இதையடுத்து, திரிபோலியில் மீண்டும் இருதரப்பிலான போர் தொடங்கிள்ளது.

இதற்கிடையில் தற்போது கடாபி இருக்கும் இடத்தைக் கண்டறிவதற்காக, "நேட்டோ' தனது உளவு விமானங்களை ஈடுபடுத்தியுள்ளது. லிபியாவில் நிலவரம் இயல்புக்குத் திரும்பும் வரை தனது ஆதரவு தொடரும் எனவும் அது தெரிவித்துள்ளது. அமெரிக்க ராணுவ மையம் 'பென்டகன்', கடாபி இன்னும் திரிபோலியில் தான் உள்ளார் எனக் கூறியுள்ளது.

சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டதாகத் தங்களுக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

லிபியாவின் தேசிய இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா முகமது ஜலீல் நேற்று முன்தினம் எதிர்ப்பாளர்கள் திரி போலியைக் கைப்பற்றிய உடன் அளித்த பேட்டியில், கடாபியின் ஆட்சி முடிந்து விட்டதாகத் தெரிவித்தார். ஆனால், திரிபோலியில் தொடர்ந்து நடந்து வரும் சண்டை, எதிர்ப்பாளர்களின் வெற்றியைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

## ஈரானின் நவீன ஏவுகணைச் சோதனை வெற்றி

கடலுக்குள் நீர்முழ்கிக் கப்பலில் இருந்து கொண்டு ஒரு இலக்கிலிருந்து மற்றொரு இலக்கைத் தாக்கும் நவீன ஏவுகணையினை ஈரான் நேற்று முன் தினம் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.

ஈரான் தனது அணு ஆயதத் திட்டத்தை ரகசியமாகச் செய்து வருவதாகவும் மேலும் ஈரான் யுரேனியம் செறிவூட்டும் மையத்தினை மேலும் மேலும் வலுப்படுத்தி வருவதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் ஈரான் தனது காதிர் எனப்படும் நவீன ஏவுகணையினை ராணுவ அமைச்சகத்தின் ஏற்பாட்டின் பேரில் பாரசிக வளைகுடாப் பகுதியில் வைத்து வெற்றிகரமாகச் சோதனையிட்டது. இந்தச் சோதனையின் போது அதிபர் முகமது அகமது நிஜாத் உடனிருந்தார்.

## தெற்கு சூடான் மோதலில் 600 பேர் பலி


### மோதலை நிறுத்துமாறு ஐ.நா. வேண்டுகோள்

தற்போது புதிய நாடாக உருவாகியுள்ள தெற்கு சூடானில் நடந்த மோதலில் 600 பேர் கொல்லப்பட்டனர். 26 ஆயிரம்கால் நடைகளும் திருடப்பட்டன. முர்லே பழங்குடியினர் லோநுயர் கிராம மக்களைத் தாக்கியதாலே இந்த மோதல் வெடித்தது.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூனின் சிறப் புப் பிரதிநிதி ஹில்டே எப்.ஜான்சன் முர்லே மற்றும் லோ நுயர் சமூகத்தினர் ஜோங்ளய் மாநிலத்தில் மோதிக் கொள்வதை நிறுத்த வேண்டும் என நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த மாநிலத்தில் நடந்த வன்முறை மோதலில் 600 பேர் கொல்லப்பட்டதுடன் 750 பேர் காயம் அடைந்தனர். கடந்த வியாழக்கிழமை காலை முதல் ஏற்பட்ட மோதல் நாள் முழுவதும் நீடித்தது என்று தெற்கு சூடான் தெரிவித்தது.

இரு பகுதி மோதல்களில் ஏற்பட்ட விளைவு குறித்து மதிப்பீடு செய்ய ஐ.நா கடந்த வெள்ளிக்கிழமை ஒரு குழுவை அனுப்பியது. இதற்கிடையே கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் 2011 வரை 2400 பேர் 330 மோதல்களில் தெற்கு சூடானில் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



லிபியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் அகமத் டாவூடோக்லு(இடது) மற்றும் புரட்சியாளர்களின் தேசிய இடைக்கால கவுன்சிலின் தலைவர் முஸ்தபா முகமது ஜலீல் ஆகியோர் லிபியாவின் பெங்காஸி நகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

## கனடா மற்றும் அமெரிக்க கிழக்கு கடலோரப் பகுதியில் நிலநடுக்கம்

அமெரிக்காவின் கிழக்கு கடலோரப் பகுதியான விர்ஜினியா கிராமப்பகுதியை மையமாகக் கொண்டு 5.9 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் மதியம் இந்த இயற்கைப் பேரிடர் ஏற்பட்ட போது வெள்ளை மாளிகை மற்றும் பல்வேறு அருங்காட்சியகங்களில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். கிழக்குக் கடற்பகுதியில்ஏற்பட்ட மிகப்பெரும் நிலநடுக்கமாக இது உள்ளது.

நியூயோர்க் பகுதியிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். நிலநடுக்கம் ஏற்பட்ட மையப் பகுதிக்கு அருகாமையில் உள்ள 2 அமெரிக்க அணு உலைகள் உடனடியாக மூடப்பட்டன.

நிலநடுக்கம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அவசர ஆலோசனை நடத்தினார். இந்த நிலநடுக்கம் கனடா எல்லைப் பகுதியிலும் ஏற்பட்டது.

இதன் காரணமாக அங்கு ஏற்பட்ட சேதம் குறித்த உடனடித் தகவல்கள் வரவில்லை. இந்த நிலநடுக்கத்தில் சிறிய காயங்கள் ஏற்பட்ட போதும் உயிரிழப்பு அபாயம் நிகழவில்லை.

## திபெத் பகுதியில் நீர்வள ஆதாரத்தைப் பெருக்க நதிகளின் நீளங்களை அளவிட்டுவரும் சீனா

பல்வேறு தடுப்பணைகளைக் கட்டி திபெத் பகுதியில் நீர்வள ஆதாரத்தைப் பெருக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது. இதற்காக பிரம்மபுத்திரா, சிந்து உள்ளிட்ட பல நதிகளின் பிறப்படம் மற்றும் செல்லும் பாதைகள் குறித்து செயற்கைக் கோள் மூலம் புதிய வரைபடங்களையும், ஆய்வுகளையும் தயாரித்து முடித்துள்ளது.

சீன அறிவியல் அக்கடமி நிறுவனத்தின் ஆய்வாளர்கள் பிரம்மபுத்திரா, சிந்து ஆகிய முக்கியமான நதிகள் மட்டுமல்லாமல் இதுவரை கண்டறியப்படாத மேலும் சில நதிகளின் பிறப்பிட ங்களையும் செயற்கைக்கோள் மூலம் கண்டறிந்துள்ளனர்.

திபெத் பகுதியில் 'யாலுங் ஷாங்போ' என் றழைக்கப்படும் பிரம்மபுத்திரா நதி இமயமலையின் வடபகுதியில் திபெத்தின் புராங் பகுதியைச் சேர்ந்த ஆங்ஸி என்ற இடத்தில் தொடங் குவது இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் சிந்து நதி, திபெத் தின் கெஜி பகுதியின் கயிலாச மலையின் வடகிழக்குப் பள்ளத்தாக்கில் பிறக்கிறது.

அதன் பிறப்படம் 'பேங்கோ கொங்' எனத் திபெத்தியர்களால் அழைக்கப்படுகிறது. முந்தைய ஆய்வுகளில் சிந்து நதியின் பிறப்பிடமாகக் கூறப்பட்ட ஸ்வென் ஹெடின் பகுதி தற்போதைய பிறப்பிடத்தில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ளது. சிந்து நதியின் நீளம் மொத்தம் 3,600 கி.மீ தூரம்.

பழைய ஆய்வுகளில் 2,900 கி.மீ.ல் இருந்து 3,200 கி.மீ தூரம் வரை கணிக்கப்பட்டது. அதேபோல் கிங்ஹாய்-திபெத் பீடபூமியில் இருந்து யாங்த்ஸி, மஞ்சள், மெகோங் மற்றும் கங்கை நதிகள் உற்பத்தியாவதும் இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

## இரு தலிபான் தீவிரவாதிகள் கல்லால் அடித்துக் கொலை

காபூல், ஓக.25

ஆப்கனில் உள்ளூர் கிராமவாசி ஒருவரைக் கொன்ற தலிபான் தீவிரவாதிகள் இருவரை பொதுமக்களே கல்லால் அடித்துக் கொன்றனர். இதில் ஒருவர் தலிபான் இயக்கத்தின் முக்கிய தளபதி எனத் தெரியவந்தது.

தெற்கு ஆப்கானிஸ்தானின் ஹெல்மாட் மாகாணத்தில் உள்ள 'டிரக் சபர்' என்ற கிராமத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த இரு தலிபான் தீவிரவாதிகள் யாஹ் முகமது என்ற 60 வயது முதிய வரை அரசின் உளவாளி எனக் கூறி சுட்டுக் கொன்றனர். இதனால் ஆத்திரமுற்ற கிராமத்தினர் ஒன்று சேர்ந்து தீவிரவாதிகளை கல்லால் அடித்துக் கொன்றனர்.

## ஜப்பான் பிரதமர் அடுத்த வாரம் ராஜினாமா

ஜப்பான்பிரதமர்நாவோடாகான் அடுத்த வாரம் தனது பதவியை ராஜினாமா செய்கிறார். இதனையடுத்து புதிய பிரதமராக அந் நாட்டு முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியேற்கவுள்ளார். கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமியால் அணு சக்தி நிலையங்களில் கசிவு ஏற்பட்டதை தொடர்ந்து பதவி விலக வேண்டுமென கோரிக்கைகள் எழுந்தன.

## கடாபியை ஆதரிக்கும் வெனிசுலா அதிபர்

கடாபி ஆட்சியை பெரும்பாலான நாடுகள் வெறுத்த போதும் வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் முற்றுகையிடப்பட்டுள்ள கடாபி ஆட்சியை மட்டுமே தான் ஆதரிப்பதாக திட்டவட்டமாகத் தெரிவித்தார். அத்துடன் மேற்கத்திய நாடுகளின் போக்கைக் கடுமையாக விமர்சித்து வருகிறார்.

லிபியாவில் ஒரே ஆட்சி தான் இருக்கிறது. அந்த ஆட்சி கடாபி தலைமையிலான ஆட்சியாகும் என்றும் சாவேஸ் தெரிவித்தார்.

கடாபிக்கு எதிரான மேற்கத்திய படைகளின் தாக்குதல் பெரும் படுகொலை என்று சாவேஸ் கடுமையாகக் குற்றம் சாட்டினார். எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவதற்காக மேற்கத்திய நாடுகள் நடத்தும் சதி என்றும் அவர் கூறினார். லத்தீன் அமெரிக்காவில் கடாபியை ஆதரிக்கும் முக்கிய நண்பராக சாவேஸ் உள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்: யூனியன்ஸ் 5 விக்கெட்டுகளால் வெற்றி

வலி.வடக்கு, ஒக.25

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 20:20 சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் தெல்லிப் பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தெல்லிப் பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுக் களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

தயாளன் ஆட்டமிழக்காது 36, சதீஸ் கண்ணா 35, வைகுந்தன் 23, ஜான்சன் 17, நிரோஜன் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங் களும் பெறப்பட்டன.

நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விதுரன், பகீரதன் தலா 03 ஓவர்கள் பந்து வீசி முறையே 21,30 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும் ரமணன் 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

153 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மேற்கொண்ட பெரு முயற்சிகள் முறியடிக்கப்பட்ட நிலையில் 15 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக் களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

யூனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அருணன் தனது முதலாவது ஓவரில் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்கள் மூவரை ஆட்டமிழக்கச் செய்தார்.

இவர் 02 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களை யும் ஜான்சன் 03 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட் டுக் களையும் வைகுந்தன் 13 ஓட்டங் களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர். (ம-86)

# அலெக்ஸன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண கரபந்து

தென்மராட்சி,ஒக.25

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும் நவ சக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர் அலெக்ஸன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று 25 ஆம் திகதி வியாழக் கிழமை இரவு 7 மணிக்கு நடை பெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச ரீதியிலான ரீதியிலான போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளை யாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டியில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் ஆவரங் கால் இந்து இளைஞர் விளையாட் டுக்கழகம் 'பி' அணியும் மோதவுள்ளன. (ம-288)



தேசிய கராத்தே நடுவர்களுக்கான பயிற்சிப்பட்டறை கொழும்பில் இடம் பெற்றது. அதில் பங்குபற்றிய யாழ்.கராத்தே ஆசிரியர்களான அன்ரன் கபில்தேவ் முருகானந்தம், அன்ரேடினேஸ், ரஞ்சித் சையிலேந்திர குமார், விஜயராஜ் சம்மேளன உதவிசெயலாளர் நசார், தலைவர் அஜித் அபயசேகர ஆகியோர். (ம-23)

# தேசிய மட்டப் போட்டிகளுக்குச் செல்லும் வீரர்கள் இன்று ஆளுநருடன் சந்திப்பு

வலிவடக்கு, ஒக.25

வடமாகாண கல்வி அமைச்சினால் தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயிற்சிபெற்ற வீர வீராங்கனைகளுக்கும் வடமாகாண ஆளுநருக்கும் இடையேயான சந்திப்பு இன்று மாலை 4 மணிக்கு வட மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணம் கண்டி வீதி யில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந் திப்பில் தேசிய மட்ட விளை யாட்டுப் போட் டிகளில் கலந்து கொள்ளுதல் எதிர் காலப் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் விளையாட்டுத் துறையின் அபிவிருத்தி போன்ற பல் வேறு விடயங்களும் கலந்துரையாட வுள்ளமையால் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள் ளவுள்ள அனைத் துப் பாசாலைகளின் வீர வீராங்கனை களையும் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

# கராத்தே தேர்வில் சித்தி

தேசிய கராத்தே சம்மேளனத்தால் கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடத்தப்பட்ட கராத்தே மத்தியஸ்தர் தேர்வில் காட்ட பிரிவில் ''பி'' தரத்தில் கராத்தே ஆசிரியர் அன்ரோ.டினேஸ் சித்தியடைந்துள்ளார்.

அவர் தேசிய குமித்தே மத்தியஸ்தர் தேர்வில் ''ஏ'' தரத்தில் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகு யாழ்.மாவட்டரீதியில் ஹொக்கி சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல் லூரி அணியை எதிர்த்து வின்னர் விளை யாட் டுக்கழக அணிமோதவுள் ளது. (ம-23)

# இரண்டாம் இடம்

துணுக்காய் கல்வி வலயத்துக்குட் பட்ட முல்லை யோக புரம் மகாவித் தியாலய மாணவன் சுவேந்திரன் ஜஜிநாத் 75 மீற்றர் ஓட்டத்தில் மாகாண மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றுக் கொண்டார். (ம-425)

# கிரிக்கெட் பயிற்சி முகாம்

துணுக்காய் கல்வி வலயப் பாட சாலை களில் தெரிவு செய்யப்பட்ட 18 வயது பிரிவு மாணவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிமுகாம் நேற்று புதன்கிழமை மல்லாவி மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது. இந்தப்பயிற்சி முகாம் இன்றும் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கிரிக்கெட் பயிற்றுனர் ரவீந்திரபுஸ்பகுமார் பயிற்சியை வழங்கவுள்ளார். (ம-23)

## கைத் தொலைபேசி வகுப்புகள் ஆரம்பம்

இம்மாதம்: 25, 26, 27, 28 ஆம் திகதிகளில்
நேரம்: 10 மணி.
இடம்: எடிசன் கல்லூரி, பிறைற் நெற்கபே, ஆனந்த புரம், கிளிநொச்சி.
தொடர்பு-
0775492349, 0775483470

## மரண அறிவித்தல்

### திருமதி குமுதினி பாலகிருஷ்ணன் (இந்திரா)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதி விடமாகவும் கொண்ட இந்திரா என அழைக்கப்படும் திருமதி குமுதினி பாலகிருஷ்ணன் 20.08.2011 சனிக்கிழமை கன டாவில் காலமானார்.

அன்னார் பாலகிருஷ்ணனின் (பாலன்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரை (முன்னாள் ஓவசியர்) மற்றும் ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா - நல்ல முத்து தம்பதியரின் அன்பு மருமகளும், வசுமதி, கலா மதி, வரதராஜன், ஜெயராயன் (உதயன்), வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜாணா, பிரசாந்தன், பிரவீனன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ் சென்றவர்களான கந்தையா (புத்தளம் கந்தையா), செல்லம்மா தம்பதியரின் அன்புப் பேர்த் தியும் பாலசுப் பிரமணியம், கனகாம்பிகை, கமலா, தர்மபூபதி, மனோ ரஞ்சிதம், பத்மநாதன், லீலாவதி, தவமலர், தவராணி, சுமித்தா காலஞ்சென்றவர்களான நடேசலிங்கம், வன்னி யசிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சரஸ்வதி, பத்மநாதன்(து), மனோன்மணி, காலஞ் சென்றவர்களான தம்பித்துரை, சின்னராசா, நேசம்மா ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.08.2011 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
வசுமதி (சகோதரி)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பரிசுதன்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரிசுதன் 23.08.2011 செவ்வாய்க்கிழமை கொழும்பில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஞானம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சோமநாதன் சறோஜினி குலதேவி ஜெயசிங்கம், கருணாதேவி பூரணசற்குணம், தயாளதேவி பரமபதி மற்றும் சறோஜாதேவி - நவரத் தினதாசன், இரவீந்திரன் மனோகரி ஆகியோரின் அன் புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(25.08.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு '' ஞானவாசம் '' சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

22, சந்தன மாதா கோயில்
வீதி, சுண்டுக்குளி (7188)

தகவல்:
S.இரவீந்திரன்.(சகோதரன்)

### திருமதி நாகதாஸ் காந்திமதி



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகதாஸ் காந்திமதி நேற்றுமுன்தினம் (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தி ரவேலு- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், நாகதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாதேவா மற்றும் இராஜேந்திரா, தெய்வேந்திரா, பாலேந்திரா ஆகியோரின் சகோதரியும், சிவாஜினியின் அன்புத் தாயும், ஐங்கரனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் , இன்று (25.08.2011) வியாழக்கிழமைமு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (C/3286)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உலகக் கிண்ணம் வென்ற குறுகிய காலத்தில், கிடைத்த அதிர்ச்சியான தோல்வியில் இருந்து விரைவில் மீள வேண்டும். சகிர்கானுக்கு மாற்று வீரர், தரமான சுழற்பந்து வீச்சாளர்களை கண்டறிய வேண்டும். சச்சின், டிராவிட், லக்ஸ்மன் போன்ற மூத்த வீரர்கள் ஓய்வு பெற இருக்கும் நிலையில், இவர்களுக்குப் பதில் சரியான வீரர்களை தேடிப்பிடிக்க வேண்டும். இவற்றை முன்னதாக செய்திருந்தால், இங்கிலாந்து தொடரில் தோல்வி கிடைத்திருக்காது. இனிமேலும் பி.சி.சி.ஐ பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்றால், பிறகு வெற்றி என்பது எட்டாக்கனியாகிவிடும்."

# இந்தியா - இங்கிலாந்து சில துளிகள்....

**இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 4-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து. இதில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள்...**



- இந்த டெஸ்ட் தொடரில் 17 பேரை ஆட்டமிழக்கச் செய்தார் இங்கிலாந்து விக்கெட் காப்பாளர் மட் பிரையர்.
- ஸ்டூவர்ட் புரோட் மொத்தம் 25 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்தத் தொடரில் அதிக விக்கெட்டுக்கள் எடுத்த பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றதோடு, 182 ரன்களையும் குவித்தார் புரோட். முதல் முறையாக தொடர் நாயகன் விருதையும் வென்றார்.
- சச்சின் கடைசி ஆட்டத்தில் 91 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் 61 அரைச்சதம் குவித்த டிராவிட்டின் சாதனையை சமன்செய்தார்.
- 90 மற்றும் அதற்கு மேல் ஓட்டங்கள் குவித்து 9 ஆவது முறையாக ஆட்டமிழந்தார் சச்சின்.
- இந்தியாவுக்கு எதிராக முதல் முறையாக ஆட்டநாயகன் விருதைத் தட்டிச்சென்றார் இயன் பெல்.
- இயன் பெல் சதமடித்த போட்டியில் இங்கிலாந்து இதுவரை தோற்றதில்லை. இதேவேளை இவர் சதமடித்த போட்டிகளில் 5 இல் இங்கிலாந்து சமநிலையடைந்துள்ளது.
- இந்தத் தொடரில் டிராவிட் 3 சதங்களுடன் 461 ஓட்டங்கள் குவித்து அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் வரிசையில் முதலிடம் பெற்றார்.
- இந்திய அணி டெஸ்ட் ஆட்டத்தில் 7 ஆவது முறையாக 'வொயிட் வாஷ்' தோல்வியைச் சந்தித்துள்ளது. 4 முறை இங்கிலாந்துக்கு எதிராகவும், 2 முறை ஆஸ்திரேலியாவுக்கு எதிராகவும், 1 முறை மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராகவும் 'வொயிட் வாஷ்' தோல்வி கண்டுள்ளது.
- இங்கிலாந்திடம் இந்தியா 11 முறை இன்னிங்ஸ் தோல்வி கண்டுள்ளது. ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் தலா 9 முறை இன்னிங்ஸ் தோல்வி கண்டுள்ளது இந்தியா.

## தோல்வியால் துவளவில்லை

# நாங்கள் மீண்டும் சாதிப்போம்

**- நம்பிக்கையுடன் டோனி**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-4 என்ற கணக்கில் தொடரை இழந்தது. 4 டெஸ்டிலும் தோற்றது குறித்து இந்திய அணித் தலைவர் டோனி செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தத் தொடரில் நாங்கள் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடியாமல் போனது ஏமாற்றமே. துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை. டெஸ்டில் மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையைக் குவிப்பது முக்கியமானது. அப்படி ஓட்டம் குவித்ததால்தான் எதிர் அணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும். நமது துடுப்பாட்ட வீரர்கள் எந்தவித நெருக்கடியும் கொடுக்கவில்லை.

துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடாத பட்சத்தில் பந்து வீச்சாளர்களைக் குறை கூற முடியாது. காயம் காரணமாக சகீர்கானையும், அவரை தொடர்ந்து ஹர்பஜன் சிங்கையும் இழந்தோம். முதல் டெஸ்டில் காயம் அடைந்த கம்பீர் ஓவல் டெஸ்ட் வரை உடல் தகுதி இல்லாமல்தான் ஆடினார்.

வீரர்களின் காயமும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த மோசமான தோல்வியால் இந்திய அணி 'சரண்டர்' ஆனதாக நினைக்கவில்லை. இனி வரும் ஆண்டுகளில் இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும்.

இங்கிலாந்து அணி இந்தத் தொடரில் மிகவும் சிறப்பாக விளையாடிது. உலகின் தலைசிறந்த அணியிடம்தான் நாங்கள் ஆடினோம். ஒரு நாள் போட்டியில் நாங்கள் உலகச் சம்பியன். இதனால் அதை தக்க வைக்க ஒரு நாள் தொடரில் சிறப்பாக ஆடவேண்டும். டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வியால் இந்திய அணிக்கு தற்போது கூட்டு முயற்சி தேவை. இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும் - என்றார்.

(15)



# முடிந்தால் முயன்று பாருங்கள்

## வெற்றிகள் தொடரும் என்கிறார் ஸ்ரோஸ்

டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதைப் போன்று ஒரு நாள் போட்டியிலும் வெற்றி தொடரும் என்று இங்கிலாந்து அணித்தலைவர் அன்ரூ ஸ்ரோரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடர் உலகச் சம்பியனை வெல்வதற்கான நல்ல வாய்ப்பு. ஒரு நாள் தொடரையும் கைப்பற்றி அசைக்க முடியாத அணியாகத் திகழ வேண்டும் என்றார். கடந்த 10 மாதங்களில் இங்கிலாந்து அணி டெஸ்ட் போட்டியில் 5 இன்னிங்ஸ் வெற்றிகளைப் பெற்றது குறித்துப் பேசிய அவர், மிகவும் அற்புதமான வெற்றியாகும். சிறப்பான பந்துவீச்சு, துடுப்பாட்டக்காரர்களின் சிறப்பான ஓட்டக் குவிப்பு ஆகியவற்றால் இந்த வெற்றி சாத்தியமாயிற்று என்றார்.

சச்சின்-மிஸ்ரா ஜோடியின் ஆட்டம் குறித்துப் பேசிய அவர், அவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்கப்போராடியது எங்களுக்கு நெருக்குதலை ஏற்படுத்தியது. கடைசி நாள் சச்சினின் நாளாக இருந்தது. மிஸ்ராவும் சிறப்பாக ஆடினார். இந்த டெஸ்ட் தொடரில் எங்களுடைய துடுப்பாட்டக்காரர்கள் சிறப்பாக விளையாடி பெரிய அளவில் ஓட்டங்களைக் குவித்தனர். பல்வேறு சமயங்களில் பந்து வீச்சாளர்கள் கை கொடுத்தனர். இதுவே வெற்றிக்குக் காரணம் என்றார்.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் புரோட் கூறுகையில், டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன்பே திட்டமிட்டோம். அதுவே இப்போது மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்திருக்கின்றது. நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து சிறப்பாகச் செயல்பட்டோம். சுவான் சிறப்பாக பந்துவீசி விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தத் தொடர் முழுவதும் திட்டமிட்டு பந்துவீசினோம். அதனால் மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. இந்தியா பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அணி என்பதால் அவர்களுக்கு எப்படி பந்துவீசுவது என்பது குறித்து திட்டமிட்டு, அதைச் செயல்படுத்தினோம் என்றார்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தம்பிராஜா (குமுக்காய்)

*(முன்னாள் பிரபல உதைபந்தாட்ட, மாதனோட் வீரர்)*

ஈவினையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா (குமுக்காய்) நேற்று (24.08.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், லலிதாம்பாள் (கொழும்பு), றஞ்சன் (கனடா), சிறிகாந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பாவின் மாமனும் றேணுகா, விதுஷன், நிலுஜா, சாருகாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் சகோதரனும் காலஞ்சென்ற நல்லரத்தினம் மற்றும் இராசரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் ஈவினை விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன். தகவல்: குடும்பத்தினர்.

## ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந்தன்



சண்டிலிப்பாய், தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந்தன் கடந்த (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீரங்கநாதன் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும் கண்மணியின் வளர்ப்பு மகனும் காலஞ்சென்ற விக்னராஜா - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் ஸ்ரீவிக்னேஸ்வரியின் (ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் டிலக்சனா, ரிஷானி, நைனிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஸ்ரீகாந்திஸன் மற்றும் ஸ்ரீகாந்தீஸ்வரி, ஸ்ரீஜெகதீஸ்வரன் (லண்டன்), சிவலிங்கம், சிவதர்சன், கௌசல்யா (இத்தாலி), சுகந்தினி ஆகியோரின் மைத்துனரும் லக்சனாவின் (லண்டன்) சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கோண்டாவில் இந்து பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1321 நீலம்

கும்பம் 04 08 16 29 23-08-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 256,028 | 20/- | 5,120,560/- |
| 2 இலக்கங்கள் | 23,505 | 40/- | 940,200/- |
| 1 இல. + லக்கினம் | 23,365 | 60/- | 1,401,900/- |
| 2 இல. + லக்கினம் | 2,122 | 200/- | 424,400/- |
| 3 இலக்கங்கள் | 630 | 1000/- | 630,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,847,060/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 683 | | 640,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 306,390 | | 10,487,060/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,143,600/-

இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 21 41 42 55

ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 680 | 500/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 700,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 683 | | 640,000/- |

இந்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 800,000/-

# மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.25

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின் தூண்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தென்மராட்சிப் பிரதேசத்திலும்-

நாளை மறுதினம் சனிக்கிழமை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும்-

28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயரமுத்த மின் விநியோக மார்க் கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு ஸ்ரான்லி வீதிப் பிரதேசத்திலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்யளார்.

(ஒ)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

நல்லூருக்கு அண்மையில் கணவன், மனைவி வேலைக்குச் செல்லும் குடும்பத்தினருக்கு வீட்டு வேலை செய்வதற்கும் பிள்ளை பராமரிப்பதற்கும் வீட்டுப் பணிப்பெண் தேவை. வயதெல்லை 30 - 50 விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0750481186

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ். தொழில் நுட்பக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணமும் வாகனத் தரிப்பிட வசதியும் கொண்ட (காரியாலய பாவனைக்கு உகந்தது) இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0777743334, 0773502612.

## வேலைக்கு ஆள்கள் தேவை ஆண் / பெண்

யாழ். மத்தியில் விடுதி ஒன்றுக்கு

★ அறைகள் சுத்தம் செய்பவர் - 02

★ சமையல் தெரிந்தவர் - 01

★ மேற்பார்வையாளர் - 01


தொடர்பு : 0777172039, 0718565375.

## நல்லூரான் வாயிலில் வெளிநாட்டுக் கல்விவாய்ப்பு

**Spot Admission**

வெளிநாட்டுப் பிரதிநிதியுடனான சந்திப்பு
ஓகஸ்ட் 23-25 (முன்பதிவு அவசியம்)

அனைவருக்கும் கட்டுபடியான
**UK, Australia, USA, Canada & New Zealand**
பட்டக் கல்வி



10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள்
100க்கும் அதிகமான கற்கைநெறிகள்
மிகக் குறைந்த செலவு, IELTS அவசியமில்லை
விசா கெடுபிடி எதுவுமில்லை (ஒரு மாதத்தில் பயணம்)
குடியுரிமை வாய்ப்புக்கள்
முற்றிலும் சட்டபூர்வமான, உத்தரவாதமான வழிமுறைகள்

The University of Nottingham · MONASH University Sunway campus · the University of Greenwich · INTI · MAHSA · HELP University College · SUNWAY UNIVERSITY · SEGi University College · LINTON · TARC College · SkillsMalaysia

சிகரம் விசேட காட்சியறை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60

# கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர்
லயன்.ப.குகனோன் (குகன்)
அவர்களின் பாசமிகு தந்தை

**ஆறுமுகம் பரமநாதன்**

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ஸ்ரீ.ஸ்ரீவிக்னேஸ்வரி அவர்களின் அன்புக் கணவர்


**ஸ்ரீ ரங்கநாதன் ஸ்ரீகாந்தன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம், அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 07 ★ 07 ★ 1943



ஆண்டவன் அடியில் 26 ★ 08 ★ 2008

**அமரர் வேலுப்பிள்ளை முத்துலிங்கம் J.P**

(தேவி அரிசி ஆலை, அச்சுவேலி) திதி: ஏகாதசி

ஆனதோ ஆண்டுகள் மூன்று
அப்பா ஆறவில்லை எம் துயரம்
நல்லூரான் ஒரு முகத்திருவிழா இன்று
முருகனுக்கு பல பணிகள் புரிந்து
இறைவனடி சேர்ந்தாய் - அப்பா
இன்று உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வா மாளிகை, 05, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1983 · 04 · 27



மறைவு 2011 · 07 · 15

**திருமதி சுதாகரன் அகிலா**

எம் குடும்ப ஒளி விளக்கே!
பாதியில் எம்மைவிட்டுப் பிரிந்து
மாயமாய் எங்கு சென்றீர்
என்றும் உம் நினைவுகளுடன்
நடைபிணமாய் நாம் இங்கு...!
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 2011.07.15 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளி விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (29.08.2011) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

முத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் அதற்கு அரசியல்வாதிகளின் பின்னணி இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். மர்மமனிதர்கள் தொடர்பான பிரச்சினைகளில் மக்கள் படுமோசமான முறையில் பாதிக்கப்படுவதும் அந்தப் பிரச்சினைகள் தொடர்பாகத் தம்மைப் பாதுகாக்க முயல்வதும் அப்படியான சந்தர்ப்பங்களில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றுவதும் நாடு முழுவதும் இடம்பெறும் சம்பவங்களாகும். இவற்றுக்கு அரசியல் சாயம் பூசுவதன் மூலம் பொலிஸார் மக்களைப் பாதுகாக்கும் தமது கடமையை மூடி மறைக்க முயல்வதையும் இவற்றைக் காரணம் காட்டி மேலும் மக்கள் மீது வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விடும் தீய நோக்கம் உள்ளதாகவும் உணர முடிகிறது.

இன்று நாடு பரந்த அளவில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் மர்ம மனிதர்களின் நடமாட்டமும் அவர்கள் பெண்களைக் குறிவைத்து நடத்தும் பாலியல் அடிப்படையிலான தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன. இவை தொடர்பான பிரச்சினைகளில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாராலும் ஆயுதப் படையினராலும் பல வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் இன்றுவரை இந்த மர்மமனிதர்கள் எவருமே சட்டத்தின்முன் நிறுத்தப்படவில்லை. பொதுமக்களால் பிடித்து ஒப்படைக்கப்படும் ஒரு சிலரும் உடனடியாகவே விடுவிக்கப்படுகின்றனர். வேறு சிலரோ பொதுமக்களிடம் இருந்து தப்பியோடி பொலிஸ் நிலையங்களிலோ படைமுகாம்களிலோ தஞ்சமடைந்து விடுகின்றனர்.

அதாவது பொதுமக்களுக்கு இந்த நாட்டில் எந்தவிதப் பாதுகாப்பும் இல்லையென்பதும் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கே சகலவிதமான பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது என்பதும்தான் நடைமுறை உண்மையாகும். இப்படியான ஒரு நிலையில் பொலிஸ் அத்தியட்சகர் குற்றச்சாட்டை அரசியல்வாதிகளிடம் விட்டெறிந்துள்ளார்.

அதேவேளை இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் பிரமுகர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட பாதுகாப்புச் செயலாளர் மர்ம மனிதர்கள் என்பது தனிப்பட்ட நபர்களால் மேற்கொள்ளப்படுவதாகவும், வதந்திகள் காரணமாக இவை பெரிதுபடுத்தப்படுவதாகவும்; பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுப்பதை அனுமதிக்க முடியாது எனவும் விடுதலைப்புலிகளை அழித்த படையினருக்கு சட்டத்தைக் கையில் எடுப்பவர்களை ஒடுக்குவது பெரிய காரியமல்ல எனவும் சவால் விட்டிருக்கிறார்.

பொலிஸ் தரப்பில் இருந்தோ ஆயுதப் படைகளின் தரப்பிலிருந்தோ மர்ம மனிதர்களைக் கைது செய்வது பற்றியோ அவர்கள் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவது பற்றியோ எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் பொதுமக்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படுவதும் கடும் எச்சரிக்கை விடுக்கப்படுவதும் தொடர்கிறது. பல இடங்களில் பிரகடனப்படுத்தப்படாத ஊரடங்கு அமுல்படுத்தப்படுகின்றது.

ஒருபுறம் மர்மமனிதர்களால் ஏற்படும் பீதி, மறுபுறம் பொலிஸார், இராணுவத்தினரின் மக்கள் விரோத நடவடிக்கைகள் எனப் பொதுமக்கள் ஒரு பயங்கரத்துக்குள்ளேயே வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

சிலகாலத்துக்கு முன்பு வெள்ளை வான் பீதியில் வடபகுதி ஒரு பயங்கரத்துக்கு முகம் கொடுத்தது. அது ஒருவாறு தணிந்துபோகத் தொடர் கொலைகளும் கொள்ளைகளும் ஆள்கடத்தல்களும் இடம்பெற்று மக்களை இன்னொரு பயங்கரத்துக்குள் தள்ளின. இன்றுவரை இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை.

இப்படியான நிலையில்தான் மீண்டும் மர்ம மனிதர்களின் பயங்கரம் உருவாகியுள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டியவர்கள் தமது கடமையை நிறைவேற்றாத நிலையில் மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பொலிஸார் தமது கடமைகளை நேர்மையாகவும் பொறுப்புடனும் செய்தால் மக்களுக்கு இப்படியான நிர்ப்பந்தங்கள் எழுந்திருக்க முடியாது என்பதை இங்கு நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நாவாந்துறைச் சம்பவம் இடம்பெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மக்கள் எனக்கு தொலைபேசி மூலம் அறிவித்தனர். நான் அங்கு விரைந்தபோது எனக்கு அந்த இடத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. நான் உடன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது அங்கும் உட்செல்லவிடாமல் தடுக்கப்பட்டேன். நான் இது தொடர்பாக வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுடன் தொடர்புகொள்ள முயன்றேன். அவருடனும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் அங்கிருந்த அதிகாரிகளிடம் பிரச்சினை பற்றித் தெரிவித்தபோது அவர் அங்கு அமைதி நிலவுவதாகத் தெரிவித்தார்.

மீண்டும் பொலிஸார் வீடுகளுக்குள் புகுந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை நடத்தி ஆண்களையெல்லாம் பிடித்துச் செல்வதாகத் தொலைபேசி அழைப்புகள் வந்த நிலையில் நான் அங்கு சென்றேன். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் அங்கு வந்திருந்தார். நாம் இருவரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனத் தெரிந்தும் அங்கு செல்லவிடாது தடுக்கப்பட்டோம்.

ஆரம்பத்தில் நான் அங்கு சென்றபோது அனுமதிக்கப்பட்டிருந்தால் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தடுத்திருக்க முடியும். ஆனால் பொலிஸார் வேண்டும் என்றே என்னைத் தடுத்து, திட்டமிட்ட ஓர் வன்முறை சூழலை உருவாக்கினர் என்றே நம்புகின்றேன்.

அடுத்த நாள் கைது செய்யப்பட்ட 7 முஸ்லிம்கள் உட்பட 95 பேர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டார். அவர்களைப் படம்பிடிக்கச் சென்ற ஊடகவியலாளரும் கைது செய்யப்பட்டார். பின்னர் தண்டம் செலுத்தி வெளியே வரும் சூழ்நிலை ஏற்பட்டது.

இப்படியான ஓர் நிலையில் நாம் ஒரு ஜனநாயக நாட்டில் மர்ம மனிதர்கள் மூலம் ஒரு அச்ச சூழ்நிலையைத் தக்க வைப்பதன் மூலம் பொலிஸாரும் ஆயுதப் படையினரும் வன்முறைப் பிரயோகங்கள் மூலம் மக்களை அடக்குவது, பாதுகாப்புச் செயலாளர் இராணுவத்தின் மூலம் எதுவும் செய்ய முடியும் எனச் சவால் விடுவது அனைத்துமே இந்த நாட்டின் அமைதியையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குவதற்கு விரோதமான செயற்பாடுகள் என்பதை நாம் தெட்டத் தெளிவாகக் கூறி வைக்க விரும்புகின்றேன் - என்றுள்ளது. (த)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பூரணலிங்கம்

(ஓய்வுபெற்ற Contoller Immigration & Emigration)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பம்பலப்பிட்டி, Ridgeway Placeஇல் வசித்தவருமான நாகலிங்கம் பூரணலிங்கம் நேற்று (24.08.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணிதசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரலிங்கம், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரலிங்கம், நாகபூரணம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் பூமகாலட்சுமி, காலஞ்சென்ற சிவராஜலிங்கம் மற்றும் ரட்ணேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், குருபரனின் ஆசை அப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.08.2011) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பூதவுடல் காலை 9 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 5 மணிக்கு கல்சிசை பொது மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**30 ¼, Ridgeway Place,**
**Col-04**

தகவல்:
திருமதி ராஜேஸ்வரி பூரணலிங்கம்.

# வழமைக்குத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தன. மீன் சந்தையும் இயங்கவில்லை. ஆண்களில் பலரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதால் தான் இந்த நிலை.

சந்திக்குச் சந்தி, வீதிகளில் குறைந்தது மூவர் என்ற ரீதியில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். இதனால் உற்றார், உறவினர்களின் உதவியுடன் நாவாந்துறை மக்கள் பொழுதைக் கழித்து வருகின்றனர். அனேகமான மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர்.

தங்கள் கணவர்மார், பிள்ளைகள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதால் மக்கள் பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். கணவன், பிள்ளைகளின் பிரிவால் உறவினர்கள் மனச்சோர்வு மட்டுமன்றி ஒருவித கிலேசத்துடன் நாளை கழித்து வருகின்றனர். (ஓ-4-26)

# நிர்வாணமாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளந்தண்டு வழங்காதவர், மன அழுத்தத்துக்கு சிகிச்சை பெற்று வந்தவர் என்று எவரையும் விட்டு வைக்காது காட்டுமிராண்டித்தனமாக இராணுவத்தினர் தாக்கியுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற மருத்துவ சோதனைகள் மற்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இரவு நவாந்துறையில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் பின்னர் அடி தடியாக மாறியது. இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று ஆண்களை அடித்து இழுத்துச் சென்றனர். அதிகாலை ஒரு மணி முதல் இரண்டு மணி வரை கைது செய்யப்பட்ட தாம் சென் நீக்கலஸ் மைதானத்தில் வைத்து காலை மூன்று மணிவரை சரமாரியாகத் தாக்கப்பட்டனர் என்ற காயமடைந்தவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். ''பெண் பொலிஸார் தமது சப்பாத்துக்களைக் கழற்றி எம்மை அடித்தார்கள்'' என்று இருவர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்பேரில் போதனா வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள 102 பேருரிடமும் நேற்று சட்ட மருத்துவ அதிகாரியால் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

''வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அனைவக்கும் இன்னும் மருத்துவ பரிசோதனைகள் முழுமையாக முடிவடையவில்லை. நேற்றிரவு நடந்த சோதனைகளில் இருந்து 22 பேருக்கு கடுமையான எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது. பெரும்பாலானோருக்கு கண்டல் காயங்கள் ஏற்பட்டுள்ளன. மண்டை உடைந்த நிலையிலும் சிலர் இருக்கிறார்கள்'' என்று உதனுக்குத் தெரிவித்தார் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன்.

''துப்பாக்கியின் பின்பக்கப் பிடியினாலும், சப்பாத்துக் கால்களாலும் உதைக்கப்பட்டதாலும், வயர்கள் மற்றும் இரும்புப் பொல்லுகளால் தாக்கப்பட்டதாலும் ஏற்பட்ட காயங்களை இவர்களது உடல்களில் காணமுடிகிறது. முழுமையான அறிக்கை நாளை நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

செபமாலை அன்ரனி குயின் (வயது33), மரிஷ் ரொட் ஆகிய இருவரும் பெண் பொலிஸாரால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். ''அவர்களது சப்பாத்துக்களைக் கழற்றி எம்மை அடித்தனர்'' என்றனர் அவர்கள்.

ரீ.அன்ரனி (வயது23), ஏ.ஆர்.சூசை, பாலதுரை சகாயராஜா (வயது-33) ஆகிய மூவரையும் இராணுவத்தினர் நிர்வாணமாக்கிவிட்டு தாக்கியுள்ளனர். ''கட்டியிருந்த சாறத்தினைக் கழற்றி எமது கைகளை கட்டிவிட்டு அடித்தனர்'' என்றனர் அவர்கள். இவர்களில் பாலதுரை சகாயராஜா அவரது பெற்ற தாயின் முன்பாகவே நிர்வாணமாகத் தாக்கப்பட்டுள்ளார். அதனைத் தடுக்க முயன்ற அவரது தாயாரையும் இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

பாரிசவாத நோயினால் வலது கை, வலது கால் இயங்காத அல்பிரட் யூலின் (வயது -28) என்ற இளைஞரையும் இராணுவத்தினர் விட்டுவைக்கவில்லை. ஈவுஇரக்கமின்றித் தாக்கியுள்ளனர். அத்துடன் இரவில் கண் தெரியாத மாலைக் கண் நோய் உள்ள குணராசா ராசகுமாரும் கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார். மகனது நிலையைத் தடுக்க வந்த அவரது தாயாரையும் இராணுவத்தினர் தாக்கி உள்ளனர்.

மன அழுத்தம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரும், முள்ளந்தண்டு வழங்காத ஜேசுகுமார் மரியதாஸ் என்பவரும்கூடக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்து கொண்டு செல்லப்பட்ட தமது கணவன்மாரை விடுவிக்குமாறு கேட்டச் சென்ற பெண்களை பாலியல்ரீதியில் துன்புறுத்தியதுடன் இராணுவத்தினர் மானபங்கப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட இரு பெண்கள் நேற்றைய தினம் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்துள்ளனர். விடுதியில் தங்கியிருந்தே சிகிச்சை பெறவேண்டும் என்று அவர்களிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் வீடு திரும்பியுள்ளனர். ''வீட்டில் கணவன்மாரும் இல்லை. நாங்களும் இங்கே வந்து விட்டால் பிள்ளைகள் தனித்து விடுவார்கள்'' என்று கூறிவிட்டு அவர்கள் திரும்பி விட்டதாக அறிய முடிந்தது.

இராணுவத்தினர் தமது ஆடையைக் கிழித்து தகாத முறையில் நடந்து கொண்டனர் என்றும் அதனால் நெஞ்சில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவித்த அவர்கள் ''இதற்கு மேல் சொல்ல முடியாது'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டனர் என்றும் அறியக் கிடைத்தது. (உ-15)

## பாராட்டுக்குரிய சேவை



சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் பல வருடங்கள் கடமையாற்றி 2006 தொடக்கம் 20.08.2011 வரை பிரதேச மக்களின் நலன்கருதி அஞ்சல் அதிபராகத் திறம்பட கடமையாற்றிய சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளராக 2004 தொடக்கம் செயலாளரின் பல கடமைகளைப் பொறுப்பேற்றுச் செயற்படும் திரு. பொ. தெய்வேந்திரனின் 34 வருட அரச சேவை பாராட்டுக்குரியது. குறிப்பாக சேதமுற்றிருந்த அஞ்சல் அலுவலகத்தை புனரமைத்து சுற்றுமதில், சைக்கிள் தரிப்பிடம், மோட்டார் பாதுகாப்பறை முதலியவற்றை செழிப்புற அமைத்து அஞ்சல் கடையை ஆரம்பித்து (இவ்வசதி யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் தான் இருந்தது.) இன்னும் பல புதிய சேவைகள் ஆரம்பிப்பதற்குக் காரணமாகவிருந்த திரு. பொ. தெய்வேந்திரத்தின் நற்சேவையைப் பாராட்டுவதோடு, அவரது இளைப்பாற்றுக் காலம் இனிதே அமைய எங்கள் பிரார்த்தனை.

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியவுடன் யாழ். மாநகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ம.மங்களநேசன், நாவாந்துறையில் பொது மக்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் குகநாதன் மீதான தாக்குதல் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்ததுடன் இவை குறித்துச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன் பின்னர் உரையாற்றிய மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், இலங்கையில் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது இது முதல் தடவை அல்ல. இந்த அரசில் தான் அது கூடுதலாக உள்ளது. ஆனால் அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஊடகவியலாளர் குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்ற தினத்துக்கு முதல் நாள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் கூறினார்கள். ஆனால் அது தொடர்பாக எந்த விவரமும் வெளியிடப்படவில்லை. ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்தே ஒருவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்கள்.

நாவாந்துறையில் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதுடன் காயமடைந்தும் உள்ளனர். இங்கு போராட்டமும் இல்லை. போராளிகளும் இல்லை என்று கூறுகிறார்கள். இந்தச் சம்பவத்துக்கு அரசியல் பின்னணி உள்ளதாக எழுந்தமானத்தில் கூறுகிறார்கள்.

கண்மூடித்தனமாக இந்தச் செயலைச் செய்வதவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென இந்தச் சபையில் தீர்மானம் எடுக்கக் கோருகின்றேன் - என்றார்.

இந்தத் தீர்மானம் எதிர்ப்புகள் எதுவும் இல்லாமல் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் மாநகரசபையில் நிறைவேறியது.

(த-7-14)

## யாழ். தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்காட்டுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாவாந்துறையில் இடம்பெற்ற மோதல் சம்பவம், கிறீஸ் பூதம் சர்ச்சை ஆகியவற்றால் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிறீஸ் பூதம் அல்லது மர்ம மனிதன் விவகாரத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளுக்கு மக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்தமையே பிரதான காரணம் என பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்.

கிறீஸ்பூதம் விவகாரம் தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் உரிய விசாரணைகளை நடத்தி அதற்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தால் மக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்திருக்க மாட்டார்கள்.

ஆனால், இந்த விடயத்தில் அவர்கள் மௌனம் காத்தனர். இதன் காரணமாகவே மக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளுக்குப் படையினரே பிரதான காரணம். மக்கள் அல்லர்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரசுக்கு யாழ்ப்பாணத்தில் படுதோல்வி ஏற்பட்டது. இதனை சகித்துக்கொள்ள முடியாத அரசு அங்குள்ள மக்களைப் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது.

அரசு உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதில் ஆரம்பமான இந்த முயற்சி படையினரை ஏவிவிட்டு மக்களைத் தாக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

-இப்படி அவர் தெரிவித்தார். (த-சி)

## 3 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஓக.25

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த திருநெல்வேலியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் மூவாயிரம் ரூபா அபராதம் விதித்தார். அதனை செலுத்தத் தவறின் மூன்று மாத கால சாதாரண சிறைத் தண்டனை வழங்கி உத்தரவிட்டார். (ஒ-4)

## தமிழ் மக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடவும் தமிழ் மக்களை நன்கு அறிந்துகொண்டவர்கள் என்ற ரீதியில் இந்த ஆலோசனையை வழங்குகிறேன் - என்று அவர்குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள்மத்தியில் திருப்தியான நிலைமை ஏற்படும் வரையில் நிரந்தர சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்துவது சுலபமாகாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஒ-சி)

### தவறிவிட்டது

பொன்னையா சிதம்பரநாதன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் என்பவருடைய தே.அ. அட்டை (440052711V), சாரதி அ.பத்திரம் காப்புறுதி அ.பத்திரம், வரிப்பத்திரம் ஆகியனவை நல்லூர் கோயில் சுற்று வட்டத்தில் தவறிவிட்டது. (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) தொடர்புகளுக்கு- 0779254067, 0776486006

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் சண்முகவடிவேல் பார்வதி**

அன்புடையீர்! கடந்த (26.07.2011) ம் திகதி இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி சண்முகவடிவேல் பார்வதி அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (25.08.2011) வியாழக்கிழமை அதிகாலை 6 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இலகடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்



**தாமோதரம் நவரத்தினராசா**

தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம் நவரத்தினராசா நேற்று (24.08.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாபதி கதிராசி தம்பதியரின் மருமகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும் கிரிதரன், பிரபாகரன், தாரணி (ஆசிரியை - யா/ மெதடிஸ்த பாட சாலை), தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவேந்தன், நடேசகுமார், தர்சினி, நிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமனும் மாதுமை, கவிப்பிரியா, கிஷோபன், சுவாறிகன், சுலக்சன், கிருதிஷ், ஆயுஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் துரைராசா, சின்னராசா, சற்குணராசா, ஜெயராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, இராசேஸ்வரி, அமிர்தேஸ்வரி, குணேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சென். மேரிஸ் வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



**திருமதி பொன்னையா சரஸ்வதி**

அல்வாய், வடமேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சரஸ்வதி நேற்று (24.08.2011) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், ஆழ்வாப்பிள்ளை (யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்) கமலாதேவி, கனகேஸ்வரி (வடமராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்), கலாரஞ்சினி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயும், சற்குணானந்ததேவி, கிருபானந்தம், கிருஷ்ணசிங்கம், உருத்திரலிங்கம் ஆகியோரின் மாமியும் துளசிதரன், துர்க்கா, குருகுலன், நருமதா (யாழ். இந்திய தூதரகம்), கஜமுகி, சஞ்சீவ், அனுசன், மாதுளா, கஜமாலன், யாழினி, உவிமாலன் ஆகியோரின் பேர்த்தியும் அபிநயனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஒழுங்கையிலுள்ள அவரின் மகனது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வதிரி.

தகவல்:
பொ. ஆழ்வாப்பிள்ளை (மகன்).

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
No Prior Qualifications
CIMA-UK Per Level Rs.14,400
Engineering-USA
BIT University of Colombo Per year Rs.20,000
Multimedia_USA Visual Communication
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்
Diploma Courses MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing
MCS Supported By UNDP/JRRP 324, Palaly Road,Campus Junction,Jaffna.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses
Government Schol
Free Course for: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

Galaxy Cabs
Call us 021 - 3201201
35/= Per Km.

CD விற்பனைக்கு
(அனோசர்) ஒறிஜினல்
யாழ். நகரில் ஒறிஜினல், DVD, CD, MP3, பக்தி பாடல்கள் Classical விற்கும் ஒரே இடம் நல்லூரில். எம்மிடம் தமிழ் சினிமாவில் வெளிவந்த அனைத்துத் திரைப்படங்கள், திரைப்பட பாடல்கள் மற்றும் MP3 பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் வாங்கும் DVD, MP3, இவைகளில் ஏதும் பிழையிருந்தால் இரண்டு வருட உத்தரவாதத்துடன் மாற்றித் தரப்படும்.
GEEDHAM,
440B, Point Petro Rd, Nallur, Jaffna.
தொடர்புகளுக்கு- 0771599309.

A/L பரீட்சை முடிவடைந்து விட்டதா ? NEXT?
இன்று முதல் நல்லூரில்
Computing *
Business Management *
Fashion Design *
Law *
Multi media course *
Travel and tourism management *
October intake இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன
விசா ஒழுங்குகள் மிகச் சிறந்த முறையில் செய்துதரப்படும்
Highly Trusted Partners இல் அனுமதி பெறுமிடத்து வேலை செய்வதற்கான வாய்ப்புக்கள்
IELTS வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பம்
. London School Of Business and Finance (Highly Trusted Partners)
. West London College (Highly Trusted Partners)
. East London College (Highly Trusted Partners)
. City of London Academy
. AA Hamilton College
. Nilai University College, Malaysia
AANGI
ACGC
Aangi Career Guidance Consultant
788C, முத்திரைச்சந்தை, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
788C, Muththeraichanthai, Point pedro road, Nallur.
T.P:021 222 0998, 077 607 0924.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org